211,429 BH
N33.4.11
19887

33 "The Bharati." Reg. No. 2456

ஆங்கீரஸ-மாசி

1933-ஹு பிப்ரவரி-மார்ச்சுமீ

மாலை 4 மணி 11:

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

[சொந்தப்] [பாசிரியர்].

ப்ரசுராலயம்:-

ஒத்தம்பாளையம்,

25

சுப்ரமணிய பாரதியார்

அவரது

[illegible]

ஆராய்ச்சி நூல்

ஆசிரியர்

திரு. [illegible] ராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

[illegible]ச சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாச
தேசாபிமானம், இயற்கை ரசனை இவைகளைப் பற்றிய இதுவரை வெ-
ளிவரா சந்தர்ப்பம் வாய்க்கப்போகிறது.

கிரௌன் ⅛ சைஸ் கிரௌன் பதிப்பு.

240 பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. **1.**

தபாற் செலவு வேறு.

பாரத நாட்டின் வீராங்கனை யார்?

ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மி பாய்!

ஆம். அவர்களது வீர உதார உத்தண்ட

ஜீவிய சரித்திரம் தபாற் செலவு சேர்த்து 0—2—6

போலந்து தேசம் எவ்விதம் ஜெர்மனி, ருஷியா, ஆஸ்திரியா

ஆகிய மூன்று தேசங்களிலிருந்து சுதந்திரம்

பெற்றது என்பதை நன்றாய்,

அறிய வேண்டாமா?

போலந்து நாட்டின் சுதந்திரம்

தபாற் செலவுடன் 0—1—6.

பாரதிப் புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சர். பி. ஸி. ராய், Kt., D. Sc., Ph. D., C. I. E., etc.

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

மாலை 4	ஆங்கீரஸ-மாசி 1933-வரு பிப்ரவரி—மார்ச்சுமீ	மணி 11

பாரத நாடு.

கண்ணிகள்.

1. ஆதிமறை தோன்றியநல் லாரியநா டெந்நாளும்
நீதிமறை வின்றி நிலைத்த திருநாடு

2. சிந்துவெனுந் தெய்வத் திருநதியு மற்றநிற்சேர்
ஐந்துமணி யாறும் அளிக்கும் புனனாடு

3. ஐம்புலனை வென்ற அறவோர்க்கு மாற்றலர்தம்
வெம்புலனை வென்ற எண்ணில் வீரருக்குந் தாய்நாடு

4. நல்லறத்தை நாட்டுதற்கு நம்பெருமான் கௌரவராம்
புல்லரைச் செற்றுய்த்த புனிதப் பெருநாடு

197887

5. கண்ணனுந் திண்டோட் களவீரன் பார்த்தனொரு
வின்னு செஞ்சொலி கேட்ட மென்மைத் திருநாடு

6. கன்ன னிருந்த கருணைநிலம் தர்மனெனும்
மன்னனறங்கள் வளர்த்த புகழ்நாடு

7. ஆரியர்தந் தர்மநிலை ஆதரிப்பான் வீட்டுமனார்
நாரியர்தங் காதல் துறந்திருந்த நன்னாடு

8. வீமன் வளர்ந்த விறனுடு வில்லசுவத்
தாமனிருந்து சமர் புரிந்த வீரநிலம்

9. சீக்கரெனு மெங்கள் விறற் சிங்கங்கள் வாழ்தருநல்
லாக்கமுயர் குன்ற மடர்ந்திருக்கும் பொன்னாடு

10. ஆரியர் பாழாகா தருமறையின் உண்மைதந்த
சீரியர் மெய்ஞ்ஞான தயாநந்தர் திருநாடு.

—பாரதியார்.

தீண்டாச் சிறுவனின் தியக்கம்.

பண்டித ஜனாப் *K.* அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

அறுசீர் விருத்தம்.

என்றனரும் "பாரதி"யே! யிவ்வுலகி லென்பிறந்தேன்
ஏழை யேன்யான்
மன்றனரும் நின்வயிறு வாய்த்தோரில் மேல்கீழாம்
மகவுண்டே கொல்!
உன்றனது மக்களிலே உயர்மக்கள் யாங்களென
வுரைப்போர் தம்பால்
கன்றலுற யானின்று பட்டபெருந் துயரமெல்லாங்
கழறக் கேண்மோ!

ஆலயத்தில் யாவருக்கும் பொதுக்கடவுள் தனைத்தொழவே
யடியே னேக
ஓலமிட்ட குருக்கள்தடி யுடன்போந்தென் னருகில்வர்ந்து
உருமிப் பார்த்துச்
சீலமிலாக் கடைப்பட்ட பறப்பயல்நீ கடவுள்முன்னே
செல்லப் போமா?
[illegible]லமினிப் பொறுத்திடுமா! வெனவடித்துத் துரத்தினரெஞ்
ஞாய மம்மா! 2.

நீண்ட பெருந் தெருவழியே செல்லுங்கால் அத்தெருவே
நின்ற சில்லோர்
காண்டியிவன் "தீண்டாதோன்" கீழ்மகனென் றேகையின்
கம்பை யோங்கி
மீண்டுவரா தேயப்பா லோடெனவே வெருட்டுகின்றா
ரிழிவே சேரித்
தீண்டுதல்தீண் டாமையென்ற சொற்றொடரின் பொருளு
செப்பா யம்மா? [மென்னே 3.

உண்ணீர்மை யில்லாத நின்மக்கள் தனிற்சில்லோர்க்
குவப்புக் காட்டி
உண்ணீரென் றுபசரிப்பார் எனைப்போல்வார்க் குணவில்லை
உடையு மில்லை
தண்ணீரா கிலுமருந்தக் குளமேகில் ஆங்கும்பலர்
தடியாற் றாக்கக்
கண்ணீராற் றாகவிடாய் தீர்த்தேனிக் காரணந்தான்
கழறா யம்மா? 4.

படியிலிந்தத் துயர்பட்டுப் பள்ளிசென்று மாணவர்கள்
பலரோ டாடக்
கொடியமன ஆசிரியர் கோபித்துப் பறப்பயலுன்
குலமோர்ந்தாய் கொல்!
அடிமையெனக் குருதிபொங்க அடித்தனரென்
றழுமகனை யணைத்துத்தாங்கி,
மடியில்வைத்துக் குழல்சோர வீழ்ந்தாற்றுந் தாய்துயர்க்கோர்
மருந்து முண்டோ? 5.

எமது வந்தனங்கள்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

எல்லாம் வல்ல முழு முதற் கடவுளைப் பிரார்த்தித்து, மறுபடியும் பத்திரிகைத் தொண்டை விடாது நடத்த முன் வருகிறோம். ஆரம்பகால முதல் **"பாரதி"** தனது கொள்கையிற் சிறிதும் மாற்றமின்றி, அஞ்சா நெஞ்சத்துடன் தனது கடமையை யாற்றி, தேசீயத்தை நானா வழிகளிலும் வளர்த்துக் கொண்டே வந்திருக்கிறது. தமிழ் மாதப் பத்திரிகைகளிற் பிரத்தியேகமான தனி வழியில் இவ்விதமாய்ச் சென்று கொண்டிருக்கும் பத்திரிகை இப்பொழுது **"பாரதி"** ஒன்றுதான் இருக்கிறது. "பாரதி"யின் தொண்டைத் தமிழுலகம் நன்கறியுமாகையால், அதைப்பற்றி அதிகமாய் எழுதத் தேவையில்லை. தேசீய வானம் இருண்டு, கருத்து, அடக்குமுறை இடி இடித்துக் குமுறிக்கொண்டிருக்கும் பொழுதுகூட, தனது கடமையைச் சரியாய் இப் பத்திரிகை செய்துகொண்டே வந்திருக்கிறது.

1930-ல் மகாத்மா காந்தி அவர்களால் தொடங்கப் பெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தின் பயனாக நாடெங்குந் தேசீயக் கிளர்ச்சி அஹிம்ஸா வழியிற் காட்டுத் தீ மாதிரியாகப் பரவியது. அக் காலத்தில் நாம் திண்டுக்கல் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாகவும், பெரியகுளம் தாலுகாத் தொண்டர் படைத் தலைவராகவும் சேவை செய்ததின் பயனாக **1930**-௵ ஆகஸ்ட்௴ **2**௳ ஒன்றரை வருடத் தண்டனையடைந்து, சிறைச்சாலையில் **7½**௴ வசித்து, காந்தி—இர்வின் ஒப்பந்தத்தால் வெளி வந்தோம். லண்டன் மகாநாட்டிலிருந்து மகாத்மா அவர்கள் இந்தியாவிற்கு வெறுங் கையுடன் திரும்பிய பிறகு, அவர் கைது செய்யப்படவே, தேசீய இயக்கம் திடீர் திடீர் என்று மறுபடியும் ஆரம்பித்தது. அப்பொழுது ஆசிரிய அறையில் அடைபட்டு 'பாரதி'ப் பத்திரிகைக்காக எழுதிக் கொண்டிருக்க எம்மால் முடியவில்லை. உடனே தேசத்தின் அழைப்பைக் கேட்டு, திண்டுக்கல் ஜில்லாக் காங்கிரஸ் உப தலைவராகவும், அப்பால் பெரியகுளம் தாலுகாக் காங்கிரஸ் காரியதரிசியாகவுந்

தேர்ந்தெடுக்கப் பெற்று பணியாற்றி வரும்போது, தேவாரத்தில் **1932**-ம் ௵ பிப்ரவரி௴ **17**௳ கைது செய்யப்பட்டு, **18**௳ மதுரையில் உதவி ஜில்லா மாஜிஸ்டிரேட்டால் ஒரு வருடக் கடுங்காவல் தண்டனையும், **100** ரூ. அபராதமும் விதிக்கப்பெறவே இம் முறை முழு தண்டனையையும் அனுபவித்துவிட்டுச் சென்ற ஜனவரி௴ **7**௳தான் வெளி வந்தோம்.

நாம் ஜெயிலுக்குச் செல்லாதிருந்தால், இதற்குள் "பாரதி"ப் பத்திரிகை சென்னைக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து அநேக அபிவிருத்திகளுடன் வெளிவந்து கொண்டிருக்கும். இரு முறை சிறை செல்ல நேர்ந்ததால் "பாரதி"யின் அபிவிருத்திகள் பல வழிகளிலுந் தடைப்பட்டுப் போயின. அல்லாமலும் அதிகமாகக் கஷ்டங்களும் நஷ்டங்களும் உண்டாயிருக்கின்றன வென்று எம்மால் சொல்லாதிருக்க முடியவில்லை. பல வசதிகளற்ற ஒரு கிராமத்திலிருந்துகொண்டு ஒருபத்திரிகையை நடத்துவதென்பது இலகுவான காரியமல்ல. எவ்வளவோ சங்கடங்களுடன் இதை நடத்துகிறோமென்று தமிழ் நாடு நன்கறியும். தமிழ் சகோதரர்கள் இதைத் தக்கபடி ஆதரித்திருப்பின் இன்று இப் பத்திரிகை பல்வேறு வழிகளில் நல்லுரம் பெற்றுப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ஹிந்தியில் எத்தனை பத்திரிகைகள் எவ்வளவு நேர்த்தியாய் வெளிவந்துகொண்டிருக்கின்றன! வங்க மொழி யன்னையைப் பற்பல உயரிய பத்திரிகைகள் வனப்புறச் செய்துகொண்டிருக்கின்றன. ஆந்திர மொழியில் நவ நவமாக எத்தனையோ பத்திரிகைகள் உதித்துக்கொண்டிருக்கின்றன. குஜராத்தி, மராத்தி பாஷைகளிலும் அப்படியே. பத்திரிகையின் உணர்ச்சி மேலிட்டுத் தமிழ் நாடு, என்றைக்குத்தான் மொழி வளர்ச்சியில் மற்ற பாஷைகளுக்குச் சமமாய் முன்னிற்குமோ? தமிழ் மாது என்றைக்குத்தான் தனது இழந்த பண்டைப் பெருமையை மீண்டு மடைந்து, முன்னணியில் நிற்கப் போகிறாளோ?

நாம் இங்கு வசியாத காலத்தில் "பாரதி"க்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த நண்பர்களுக்கெல்லாம் வந்தனங்கள் செலுத்துகிறோம். "பாரதி"யை இதுவரையில் ஆதரித்து வருங் கனவான்களுக்கெல்லாம் வந்தனங்கள். தங்களின் அரிய கட்டுரைகளால் "பாரதி"யை அலங்கரித்த அறிஞர்களுக்கெல்லாம் எமது பிரிய வந்தனங்கள் உரியன. நாமில்லாக் காலத்தில் "பாரதி"யிற் பற்பல குறைகள் ஏற்பட்டிருக்கலாம். அவைகளைத் தயவு செய்து மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப் பத்திரிகையின் மூலம் தமிழர்களுடைய பாஷாபிமானத்தைப் பற்றிச் சிறிது தெரிந்து கொண்டோம். தொண்டில்

பேரிலிருக்கும் பேரவாவினாலும், சேவா உணர்ச்சியின் வேகத்தினாலும் ஈடுபட்டுப் "பாரதி"யின் ஆசிரிய பீடத்தை வணக்கத்துடன் மறுபடியும் ஏற்று, மாதுரு பூமிக்குச் சேவை செய்ய முன் வருகிறோம். தமிழ் சகோதரர்கள் "பாரதி"யை முன்னினும் அதிகமாக ஆதரித்து, எம்மை மென்மேலும் பொதுநலப் பணியில் உற்சாகிக்குமாறு வேண்டுகிறோம்.

---

* துர்க்கா தாஸ்-முகவுரை.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

நாடகங்கள்.

"உலகமே ஒரு நாடக மேடை" என்பது ஆங்கில நாடகக் கவிச் சக்கிரவர்த்தி ஷேக்ஸ்பியரது பொன்னுரைகள். இசையும் நடனமும் சேர்ந்ததே நாடகம். சங்கீதத்திற்கும் கதைகளுக்கும் நாடகங்களுக்கும் இருக்கும் சக்தி அதிகமானது. உயரிய ஆத்மாவை விழிக்கச் செய்து வலிமையை விருத்தியாக்கி ஹிருதயத்தைச் சீர்படுத்தி மனிதத் தன்மையை உயர்தரமாக உண்டாக்குவது நாடகக் கலையாம். ஆத்மீக அபிவிருத்திக்காகவே ஆதியில் நமது நாட்டில் நாடகங்கள் உண்டாயின. இந்திய நாடகங்கள் நவ ரஸங்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. காளிதாஸனும் பவபூதியுமே பண்டைக் காலத்திற் பேர்பெற்ற சிறந்த நாடக ஆசிரியர்கள். இவ் விருவரிற் காளிதாஸனையே உலகத்தின் மாபெரும் நாடக ஆசிரியர்களில் ஒருவரென்று மதிக்கிறார்கள். காளிதாஸனது "சாகுந்தலா"வும் பவபூதியின் "உத்தர ராம சரித்திர"மும் "மாலனி மாதவ"மும் பிரக்யாதி பெற்றவைகள். எத் தேசத்து இலக்கியமுங் கண்டறியா ஓர் புதிய நாடகம், "பிரபோத சந்திரோதயம்" என்ற பெயரால் வேதாந்தத்தை விளக்கும் பொருட்டு கிருஷ்ண மிஸ்ராவால் இயற்றப்பட்டது. இது பலரால் இன்றுவரை புகழப்பட்டு வருகின்றது. ஏகாதசி மகத்துவத்தை விளக்கிக் காட்டும் ருக்மாங்கத நாடகத்தையும், சத்தியத்தை விளக்கிக் காட்டும் ஹரிச்சந்திர நாடகத்தையும், இவை போன்ற இன்னுஞ் சில பக்திவிலாச நாடகங்களையும் பழைய காலத்தில் நமது ஜனங்கள் கண்டு மகிழ்ந்தார்கள். கிரேக்கர்களும், ரோமர்களும் நாடகங்களின் பெருமையை—மர்மத்தை அறிந்து, அவற்றின்மூலம் சிலவற்றை அபிவிருத்தி செய்துகொண்டார்கள் என்று சரித்திரங்கள் கூறுகின்றன.

கூத்துக்கள் என்று பண்டைத் தமிழ் நூற்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திற் குறவர் கூத்து சொல்லப்பட்டிருக்கிறது. திருவாங்கூர் மலையில், காட்டு ஜாதியார்கள் கூட ஆடல் பாடல்களுடன் கூத்துக்கள் நடத்துவதை நாம் அறிவோம். தமிழ் நாட்டிலே கிராமவாசிகள், சிற்சில நாடகங்களைத் தெருக்களில் நடத்தி, அவைகளைக் கண்டானந்திக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னிருந்து வீரஞ் செறிந்த கட்டபொம்மு சரித்திரத்தை நமது தென் ஜில்லாக்களின் கிராம வீதிகளிற் பார்த்து, ஜனங்கள் சந்தோஷங் கொள்ளுகிறார்கள். "வானம் பெய்கிறது; பூமி விளைகிறது" என்ற கட்டபொம்மு வார்த்தைகள், அந் நாடகங்கள் நடிக்கப்படுகின்ற இடங்களில், பல சிறுவர்கள் வாய்களிலிருந்து ஒலிப்பதை இன்றுங் காணலாம். இவ்வாறே தெலுங்கு நாட்டிற் பொப்பிலி ராஜாவின் கதையும் நடிக்கப்படுகிறது.

அயல் நாட்டில் நாடகங்களின் தற்கால நிலை.

கல்விப் பெருக்கு, தேசீய வளர்ச்சி, சமூக சீர்திருத்தங்கள், உற்சாகம் ஊட்டல், ஆவேசம் உண்டாக்கல், கொள்கைகளைப் பிரச்சாரஞ் செய்தல், பக்தியைப் பெருக்குதல், மூடப் பழக்க வழக்கங்களைத் தகர்த்தல்—ஒழித்தல் முதலியவைகளுக்காக உலகத்தில் நாடகங்கள் நடை பெறுகின்றன. பொது ஜனங்களைத் திருத்துவதற்கு நாடகங்கள் நல்லதொரு சாதனம். எத்தனையோ பிரச்சாரங்கள் எவ்வளவோ காலத்திற் செய்யும் வேலையை ஓர் நாடகம், சொற்பக் காலத்திற் செய்துவிடும். பகல் முற்றிலும் உழைக்குந் தொழிலாளர்களுக்குத் தேக சிரமத்தை மாற்றி, நாடகங்கள் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கின்றன! எவ்வளவு சீர்திருத்தங்களைத் தருகின்றன!! ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள தேசங்களில், மக்கள் விருத்தியடைந்து வருவதற்கு நாடகங்களும் ஓர் சாதனமென்பதற்குச் சந்தேகமில்லை. அங்கு நாடகங்கள் அதிகமாகப் பெருகி வளர்ந்து வருவதே இதற்குச் சான்றாகும். அத் தேசங்களில், இவைகள் செய்திருக்கும் மாற்றங்களுக்குஞ் சீர்திருத்தங்களுக்குங் கணக்கில்லை. ஷேக்ஸ்பியரது நாடகக் கவிகளை

---

* கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதி இப் புஸ்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை ரூ 1—4—0. தபாற் செலவு வேறு.

மானேஜர்,
பாரதிப் புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

உச்சிமேற் கொண்டு, அவரைப் பிறவிக் கவியென்று அவர்கள் போற்றுகிறார்கள். ஆங்கிலேயர்களுக்கு, அவர் ஒரு அரும் பெரும் அறிவுப் பொக்கிஷம். இக் காலத்தில் ஜியார்ஜ் பெர்னார்ட் ஷாவின் கீர்த்திவாய்ந்த நாடகங்களுக்கு எவ்வளவு பெருமை!

ருஷியாவில் தேசீய விழிப்பு ஏற்பட்டுப் புதிய பொது உடைமை ஆட்சி ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறதின் பயனாக, சோவியத் ருஷியாவில் நானாவித முன்னேற்றங்கள் உண்டாகிக்கொண் டிருக்கின்றன. அவைகளில் நாடகக் கலையும் ஒன்றாகும். ஏழைக் குடியானவர்களும், அற்பத் தொழிலாளர்களுங் கூடச் சோவியத் ருஷியாவில் அறிவு, திருத்தம் முதலியவைகளைப் போதிக்கும் நாடகங்களைக் கண்டானந்தித்துப் புத்துணர்ச்சி அடைந்துகொண் டிருக்கிறார்கள். தேசீய அறிவை விருத்தி செய்யுஞ் சர்க்கார் சபையுடன் (Government Cultural Committee for Political Enlightment) அங்கு நாடக மேடைகள் சம்பந்தப்பட் டிருக்கின்றன. அத் தேசத்தில், நாடகங்களின் அபிவிருத்தி வேகம், மகா வேகம்.

இந்தியாவிலோ!

இந்தியாவிலே உயரிய சரித்திரங்கள், நாடகங்களாக நடிக்கப்படவில்லை. அதிலும் தேசீயம் நிறைந்தவைகள் நடிக்கப்படுவதே யில்லை. இக் கலை, அபிவிருத்தி அடையவில்லை. இதன் இலக்கியம் பெருகவில்லை. நாடக அரங்கங்களும் சரியாக விருத்தி யடையவில்லை. காளிதாஸனுக்குப் பிறகு உலகம் மெச்சும் மாபெரும் நாடகக்காரரான துவிஜேந்திரலால் ராய், சரஸ்வதி செய்தவத்தால் வங்காளத்திற் பிறந்து, பற்பல நூற்களை எழுதிவிட்டுச் சென்றார்.

பாபு துவிஜேந்திர லால் ராய்

இத் "துர்க்கா தாஸ்" நாடகத்தின் ஆதிநூலை இயற்றியவர், பாபு துவிஜேந்திரலால் ராய் அவர்களாவர். அவர் தமிழ் உலகத்திற்குப் புதியவராகையால், தமிழர் அவரைப் பற்றி ஒரு சிறிது அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இக் காரணத்தால்தான் அவருடைய சரிதையை எமக்குத் தெரிந்த அளவில் ரத்னச் சுருக்கமாகவும், பல வங்க அறிஞர்களின் உயரிய அபிப்பிராயங்களை மொழி பெயர்த்தும் இங்குத் தருகின்றோம். ஒரு நூலை வாசிக்கு முன் அந் நூலாசிரியரைப் பற்றி அறிந்து கொள்ளுவதால், அந் நூலைப் படிப்பதில் ஆசையும் உற்சாகமும் உண்டாகிறதென்று சொல்லத் தேவையில்லை.

பாபு ராய் அவர்கள், ஆங்கிலத்தில் எம். ஏ. (M. A.) பட்டம் பெற்றவர். இங்கிலீஷில் அவருக்கு அதிக ஞானமும், எழுதுவதில்

பிரதம நடிக பாத்திரங்கள்.

துர்க்காதாஸ்: அரும்பெருந் தியாகி; சுதந்திர வீரன்; உயரிய அரிய தேசாபிமான சிரோன்மணி; நல்ல கர்மயோகி; ஊக்கமும் உறுதியுங் கொண்ட உத்தமத் தொண்டன்; கடமையையே ஆபரணமாகக் கொண்டவன்; உத்தமோத்தம குணங்களால் நிரம்பப்பெற்ற புருஷோத்தமன். மானிட உருவில் தெய்வீக மனிதனா யிருந்து கொண்டு, மற்ற மானிடர்களுக்கு வழிகாட்டுகிறான். ஸ்திரீகளுக்கு அபயமளிப்பவன். இராஜ பக்தன். 4-ம் அங்கத்தில் 6-ம் காட்சியில் 253-ம் பக்கத்தில், துர்க்கா தாஸைக்கொண்டு நிர்பாக்கிய பாரத நாட்டைப்பற்றிக் கவிவரன் கூறுகிறார்.

திலேர் கான்: உண்மை வீரன். சமயக் கட்டுப்பாடுகளையுங் கவனிக்காது நண்பர்களை அன்புடன் நேசிக்கக்கூடியவன். வஞ்சகஞ் செய்தறியாத மனிதன். திலேர் கான் மூலமாக 5-ம் அங்கத்தில் 4-ம் காட்சியில் 307, 308-ம் பக்கங்களில் இஸ்லாம் தர்மத்தையும், 309-ம் பக்கத்தில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையையும் ராய் கூறுகிறார். துர்க்கா தாஸ், குல்நாரின் காதலை மறுத்தவுடன் துர்க்கா தாஸின் மனுஷ்யாதீதமான உயரிய குணாதிசயத்தைக் கண்டு, பாதுஷாவின் உத்திரவின்றியே துர்க்காதாஸைச் சிறையிலிருந்து வெளியே அனுப்பிய குணசீலன்.

காஸிம்: ஊழியமே லட்சியமாகக் கொண்ட சத்திய சந்தனான சேவகன். உயர்விலுந் தாழ்விலும், இன்பத்திலுந் துன்பத்திலும் எஜமானனை விடாது தொடர்ந்து சேவை செய்யும் செய்நன்றி மறவா உத்தமன். 67-ம் பக்கத்தில் (அங்கம் 1, காட்சி 7) "மனிதர் செய்யுங் கொடுமைகளுக்கு மதம் என்ன செய்யும்" என்று காஸிம் வாக்குகள் ஒளிர்வதைக் காணத் தக்கதாம்.

மஹா மாயா: மார்வார தேசத்து மஹாராணி மஹா மாயா, ரஜபுத்திர வீர கோமள உலகில், விண்மீனென மிளிர்கிறாள். மஹா மாயாவை வீரமாகாளிபோன்று ஆக்கிக் காட்டுகிறார் துவிஜேந்திரர். திலேர் கான் மூலமாகவும் (பக்கம் 59, அங்கம் 1, காட்சி 6), பீம ஸிம்ஹன் மூலமாகவும் (பக்கம் 152, அங்கம் 3, காட்சி 3) மஹா மாயாவின் பெருமைகளைப்பற்றிப் பேசுகிறார் ஆசிரியர். மார்வார தேச வாசிகளை வீராங்கனா ராணியார் உற்சாகமூட்டும் (அங்கம் 3, காட்சி 3, பக்கம் 153–161) விதமானது, பேடிகளுக்கும் வீரஞ் செறிந்தோடுவதுபோ லிருக்கிறது. ரஜபுத்திர நாரீ ரத்தினங்களின் வீரம், சுடர்விட்டுக் குபீர் குபீர் என்று பிரகாசிப்பதை மஹா

மாயாவினிடத்திலே காணலாம். "ஷாஜஹான்" நாடக காதையிற் சுருக்கமாகவும், இந் நாடகத்திலே விரிவாகவும் உயர்தரமாகவும் மஹா மாயாவைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இம் மங்கையர்க்கரசி மனதிற்கொண்ட நோக்கத்தை முடித்த பத்தினிப் பெண்மணி-மாதர் திலகமாகும்.

பீம ஸிங்: மீவாரத்தின் வீர தீர இளங்கோ. சிங்கம் போன்ற அஞ்சா நெஞ்சு படைத்த உண்மை வீரன். உயரிய தேசாபிமானி. அச்சத்தைக் கனவிலேனுங் காணுதவன். தனது சுகபோகங்களைத் தனது மாதுரு பூமிக்காக அர்ப்பணஞ்செய்து, அதன் விடுதலைக் காகவே தனது உயிரையே தியாகஞ் செய்த சத்திய சந்தன்.

சரஸ்வதி: ஜெய ஸிம்ஹனின் பட்டமஹிஷி. இளையாள் கமலாவின் காதலில் மூழ்கிக்கிடந்த கணவனை வீரமூட்டி, அவனது வாழ்வைத் திருத்திய பெண் தெய்வம். இன்பங்களைத் துறந்து, பொறுமையையே பூஷணமாகக் கொண்டு, 'தர்மமே வெல்லும்' என்னும் சான்றோர் சொல்லை இறுதிவரைக் கடைப்பிடித்து மேம்பாடுற்ற பெண்கள் திலகம்.

ஔரங்கஜீப்: மஹா தந்திரோபாயமிக்க முன் ஜாக்கிரதையுள்ள சாமர்த்தியசாலியான சக்கிரவர்த்தி. ஔரங்கஜீப், தனது பேகம் குல்நாரால் ஆட்டப்படுவது ஆச்சர்யமே. ஔரங்கஜீபின் குரூர குணங்களையெல்லாம் இஸ்லாம் தர்மப் பிரச்சாரம் என்ற பெயரால் மன்னித்து, ஒரு நல்ல முஸல்மானுக நாடக ஆசிரியர் காட்டுகிறார். குல்நார் பேகத்தைப் பாதுஷா மன்னிக்கிறார். இவ்விடத்திற் பாதுஷாவின் சிறந்த குணம் புலனுகின்றதையுங் காணலாம்.

குல்நார்: சம்ராட் ஔரங்கஜீபைத் தன் னிஷ்டம்போற் பேகம் குல்நார் ஆட்டுகிறாள். குல்நார் பேகம் இல்லாவிட்டால் இந்த நாடகமே யில்லை. இப் பேகம், பழி வாங்குங் குணமுடையவள். தீய காரியங்களையும் மறைவின்றிச் செய்யுந் தைரியமுடையவள். ஔரங்கஜீபின் மன்னிப்பை மறுத்து (பக்கங்கள் 327, 328, 329, 330, அங்கம் 5, காட்சி 6) தன் மதிப்புடன் மரணிக்கிறாள். பாதுஷாவிடம், தான் துர்க்கா தாஸைக், காதலித்ததைச் சொல்லிவிட்டுப் புன்சிரிப்புடன் மரிக்கிறாள். இக் கட்டம் உண்மையில் ஆண், பெண் இருசாராரையும் ஆட்டிவைக்கக் கூடியதுதான். மானுஷீக சுபாவத்தில் பிரதி காதலிக்கப்படாத எந்தக் காதலும் எக் காலத்தும் சாதலிலேயே முடிகிறதென்னும் தேவ ரகஸியத்தைத் துவிஜேந்திரர், குல்நார் பீகத்தின்மூலம் உலகினுக் கறிவுறுத்துகின்றார். பாரதியாரின் குயிற் பாட்டும், இதே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றது.

தமிழில் துர்க்காதாஸ்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்ப் பிரிவுகளில், நாடக நூற்கள்தான் தமிழில் வளர்ச்சியடையவில்லை. சில வருடங்களுக்கு முன்பு ஆசிரியர் சுந்தரம்பிள்ளையாரது "மனோன்மணிய"மும், திரு. சூரியநாராயண சாஸ்திரியாரது "மானவிஜய"மும் "கலாவதி"யும், "ரூபாவதி"யும் வேறு இன்னுஞ் சில நாடக நூற்களும் வெளிவந்திருக்கின்றன. கற்றோருக்கு மட்டும் இவை பயன்படக்கூடியதாயிருக்கிறது. சென்னை திரு. சம்பந்த முதலியாரும் சில நாடக நூற்களை எழுதியிருக்கிறார். என்றாலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டிப் புத்துணர்ச்சியும் புத்துயிருங் கொடுக்கவல்ல, தேசாபிமானம், பாஷாபிமானம், சர்வமத சமரஸம், சர்வஜன சகோதரத்வம் முதலிய வகையில் ஆவேச உணர்ச்சிகளை உண்டாக்கக்கூடிய பயன் தரத்தக்க நாடக நூற்கள் தமிழில் எழுதப்படவேயில்லை; எழுதப்படுகிறதுமில்லை. இதுவோர் பெருங் குறை. பற்பல நல்ல நல்ல நாடக நூற்கள் தோன்றவேண்டும். அயல் பாஷைகளிலிருந்து உயரிய நாடக நூற்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். நாடக நூலாசிரியர்களது பிரத்தியேக கவனம் இதில் மிகமிகத் தேவை. தமிழ் நாடக இலக்கியத்தை விரைவில் வளர்த்துத் தமிழ்த்தேவிக்குத் தொண்டாற்றவேண்டும்.

தமிழ் நாடக மேடைகளில், அரிச்சந்திரன், சத்தியவான்—சாவித்திரி, கண்ணகி, நல்லதங்காள், சதாரம் முதலிய நாடகங்களைப் பார்த்துப் பார்த்துப் பொதுஜனங்கள் மிகமிக அலுத்துவிட்டார்கள். பரிதாபம்! பரிதாபம்!! எங்கோ சில பட்டினங்களிற் சில தருணங்களில் சம்பந்த முதலியாரது நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. ரங்கராஜு—வின் நாவல்களை நாடக ரூபங்களாக ஒரு கம்பெனிக்காரர் மட்டும் நடத்துகிறார்கள். பலவழிகளில் அடிமைப்பட்டுக் கிடந்து தவிக்கும் தமிழர்களுக்குச் சோப ரஸத்தையும், காதல் ரஸத்தையுங் கொடுப்பதினால் என்ன பயன் ஏற்படப்போகிறது? வீர ரஸத்தை ஊட்டி, நூதன விழிப்பும், நூதன சக்தியுந் தமிழர்களுக்கு உண்டாகுமாறு நாடகக்காரர்கள் செய்யவேண்டியதவசியம். அத்துடன் சமூக சீர்திருத்த சம்பந்தமான விஷயங்களும் கவனிக்கப்படல் வேண்டும். தமிழ் நாடக மேடைகள் நானு வழிகளிலுந் திருத்தமடையவேண்டும்.

வங்க நாடக இலக்கியப் பூங்காவில் துவிஜேந்திரக் கொடியில் மலர்ந்த மலர்களைத் தேவி பாரதியின் முடியில் வங்காளஞ் சூட்டி மகிழ்கிறது. அவ் வாடா நறுமலர்கள் வங்காள மெங்குங் கமகம வென்று அதிகமாகப் பரிமளித்துக்கொண் டிருக்கிறது. ரமணீயமான இவ் வினிய வாசனையை நுகர்ந்த வேறு சில பாஷைகளும்,

அவைகளைத் தன் தன் மொழிகளிலே ரசிக்கச் செய்து, மதுரித்துக் கொண்டிருக்கும் பொழுது, தமிழ்த் தாய்மட்டும் ஏனோ அந்தப் பாக்கியம் அடையாதிருப்பது? காலச் சக்கரத்தின் வேகத்தால் இக் குறையும் இன்று அகலுங்காலம் வந்திருக்கிறது கண்டு மகிழ்வெய்துகிறோம்.

* * *

தமிழ் மாது, "துர்க்கா தாஸ்" என்னும் இந் நாடக நூலினைக் கண்டு சந்தோஷமடைவாளென்று நம்புகிறோம். இஃது மொழி பெயர்ப்பாயிருப்பினும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்த விதமாக இதிற் சிலவிடங்களிற் கூட்டியும், சிலவிடங்களில் மாற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இந் நூலில் அதிகமாகச் சமஸ்கிருத, ஹிந்தி, உருது பதங்கள் இருக்கின்றன. வாசகர்களின் சிரமத்தைப் போக்க, இந்த அயல்மொழிகளின் விளங்காத—புதிய பதங்களுக்கு அரும்பதவுரையுங் கடைசியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டார் இத் "துர்க்கா தா"ஸை மறுமுறையும் அச்சிடும்படி செய்ய முன்வருவார்களேயானால், கூடுமானவரையில் இப் பதங்களைத் தமிழ் சொற்களிலேயே அமைக்கவேண்டிய தவஸ்யமாகும்.

* * *

இந்தத் "துர்க்கா தாஸ்" சரித்திரத்தைத் தமிழ் நாடக மேடைகளில் நடித்துக் காட்டுவதால், வீராவேச உணர்ச்சி அதிகமாக உண்டாகுமென்று நினைக்கிறோம். ஆகையால் இந்த நாடகத்தை நாடக அரங்கங்களில் நடித்துக் காட்டவேண்டுமென்று தமிழ் நாடகக்காரர்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம். பள்ளிகளிலும், சில பொதுநல ஸ்தாபனங்களின் வருடோற்சவங்களிலும்—சில விசேஷ காலங்களிலும் "துர்க்கா தா"ஸை முற்றிலும் முடியாவிட்டாலும், சில அங்கங்களையும், அல்லது சமயத்திற்குத் தக்கவாறு முக்கியமான ஒரு அங்கத்தையேனும் நடிக்கச் செய்து, தமிழ் மக்களுக்குப் புதிய எழுச்சியைக் கொடுக்கவேண்டுகிறோம்.

நாடு வாழ்க! மொழி வாழ்க!

தயாள்பாக் அல்லது கருணைத் தோட்டம்.

திரு. P. கந்தநரசிம்மன் அவர்கள், B. A., B. L.

வட இந்தியாவில் இருக்கும் "தயாள்பாக்" என்னுமிடத்தைப் பற்றித் தென்னிந்தியாவில் வெகு சிலரே அறிவார்கள். அவ்விடத்தைப் பற்றியும், அங்கு நடக்கும் வேலைகளைப் பற்றியும், அங்கு மக்கள் நடத்துகிற வாழ்வைப் பற்றியும் தென்னாட்டார் மட்டுமன்றி இந்திய மக்களனைவரும் அறிதல் அவசியம். உலகிற்கே "தயாள் பாக்" ஒரு வழிகாட்டியாயிருக்கிறதென்றால் மிகையாகாது.

தயாள் என்றால் கருணையுள்ளவர் என்று பொருள். பாக் என்றால் தோட்டம். தயாள்பாக் என்பதன் சரியான பொருள் கருணையாளர் தோட்டம் என்பது. சுருக்கமாகக் "கருணைத் தோட்டம்" என்றேன். இந்தக் "கருணைத் தோட்டம்" என்பது ஆக்ரா நகரிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு ராதாஸ்வாமி மதத்தார் வசிக்கிறார்கள். 1915-ம் வருஷத்தில்தான் இத் தலம் இப் பெயரோடு விளங்க ஏற்பட்டது. முதன் முதலாக இதன் விஸ்தீரணம் 4 ஏக்கராவாயிருந்தது. நாளாவட்டத்தில் இது பெருகித் தற்போது சுமார் 3000 ஏக்கரா விஸ்தீரணமுள்ளதாயிருக்கிறது. சுமார் 3000 மக்களுக்கு மேல் இங்கு வசிக்கிறார்கள். இது ராதாஸ்வாமி சத்சங்க சபைக்குச் சொந்தமாகவும், அச் சபையின் மேற் பார்வையிலும் இருந்து வருகிறது.

ராதாஸ்வாமி மதத்தைச் சார்ந்தவர்களே அங்கு வசிக்கலாம். அம் மதத்தைப் பற்றி விரிவாய் எழுத இங்கிடமில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து, அம் மதத்தாரிடையே ஜாதி பேதம் கிடையாது. கோத்திரம் குலம் என்ற தொல்லைகளில்லை. ஹிந்து மதத்தின் முக்கியமானவைகளான உபநிஷத்துக்களையும், பகவத்கீதை முதலியவைகளையும் ஒப்புக்கொண்டாலும் அம் மதத்தார் அவைகளிற் காட்டிய நிலைகளைவிட உயர்ந்த நிலையொன்றை அவலம்பிக்கிறார்கள். அவர்களுடைய மதப்படி கடவுள் ஒருவர். கடவுளின் கருணை அல்லது அருட் சக்தி ஒரு தனிப் பெருஞ் சிறப்புற்ற மனித உடல் வாயிலாக வெளிப்பட்டு உலகை ஈடேறச் செய்து வருகிறது. அச்

சக்தி நிரம்பப் பெற்றவர் கடவுள் நிலையை அடைந்தவர். அவரையே அம் மதத்தார் "சத்குரு" என்று போற்றுகிறார்கள். கண்கண்ட தெய்வமாகச் சத்குருவை வழிபட்டுப் போற்றி அவருடைய தயவைப் பெறச் சேவை செய்து வருகிறார்கள். அம் மதத்திற் சேர்ந்தவருக்குச் 'சத்சங்கி' என்று பெயர். சத்சங்கிகள் இந்தியாவிற் பல பாகங்களிலும் அமெரிக்கா முதலிய சில வெளி நாடுகளிலும் இருக்கிறார்கள். தென்னாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் பலரிருக்கின்றனர். ஒருவன் எந் நாடு, எம் மதம், எவ் வகுப்பைச் சார்ந்திருப்பினும், ஜன்ம சாபல்யம் அடையும் உண்மையான நோக்கமும் தீவிர ஆசையுங் கொண்டு ராதாஸ்வாமி மதத்தின் கொள்கைகளை அறிந்து ஆய்ந்து தெளிந்த பின், அதிற் சேரும் எண்ணத்தைத் தெரிவித்தால், அவனுக்கு உபதேசம் அருள் செய்யப்படும். உபதேசம் பெற்றவர்கள் சத்சங்கிகள் என்றழைக்கப்படுகிறார்கள். சத்சங்கத்தில் சேருமுன் ஒருவன் மாமிசம், முட்டை முதலிய மாமிச வகைகளையும் மது, கள் முதலிய தீய குடி வகைகளையும் உட்கொள்வதில்லை என்று உறுதிமொழி தரவேண்டும். சத்சங்கிகளுக்குக் கோயில் செல்லுதல், பூசை செய்தல் முதலிய வெளி ஆடம்பரங்களுமில்லை. ஒரே கடவுள், ஒரே சத்குரு, ஒரே சகோதரக் கூட்டம் அதாவது சத்சங்கக் கூட்டம். சத்குரு உபதேசத்தின்படி ஆத்மநாத யோகம் என்கிற பயிற்சி செய்தல், சத்குருவின் அருளைப் பெறச் சேவை செய்து உலகுக்கு உபகாரமாக வாழ்தல் என்ற இவைகளே சத்சங்கியின் முக்கியமான நெறிகள்.

சத்சங்கிகள் அந்தரங்கமாக ஆத்ம அப்யாஸத்தைச் செய்யச் சொல்லப்படுகிறார்கள். அந்த அப்பியாசத்திற்குக் குறிப்பிட்ட காலமில்லை. என்றும் எங்கும் அவகாசமும் சௌகரியமும் இருக்கும் போதெல்லாம் செய்யலாம். ஆனால் ஒருவன் தன் உலகக் கடமைகளைச் செய்வதில் தவறக்கூடாது. தோட்டியாயினும் தொண்டமானாயினும் அவனவன் காரியத்தைச் சரிவரச் செய்ய வேண்டுமென்றும், சுயநலமின்றி உலகுக்கு உபகாரமான காரியங்களைச்செய்து சத்குருவின் தயையைப் பெற வேண்டுமென்றுஞ் சொல்லியிருப்பதால், சத்சங்கிகள் என்றுஞ் சுறுசுறுப்பாகவே இருப்பார்கள். ஆகவே வெளித் தோற்றத்திற்கு அவர்கள் உலக ஆசை மிகுந்தவர்களைவிட அதிக ஆர்வத்தோடும் பற்றோடும் உழைப்பதாகக் காணப்படுவார்கள். தயாள்பாக்கில் காலையிலும் மாலையிலும் நடக்கும் பிரார்த்தனை காலங்களிற் சத்குருமுன் எல்லாரும் அமர்ந்து பிரார்த்தனை செய்கிறார்கள். மாலை வேளைகளில் அடிக்கடி சத்குருவானவர் சத் விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள்.

தயாள்பாக்கில் சத்சங்கிகளுடைய வீடுகள் எளிமையாகவும், காற்றோட்டமும் வெளிச்சமும் பெரிதும் உலவுமாறும் முறையாகக்

கட்டப்பட்டுள்ளன. அத் தலத்தில் இரண்டு கல்லூரிகளும், பெண்களுக்கொரு வித்யாசாலையும், சிறு பையன்களுக்குப் பள்ளிக்கூடங்களும், மாணவர் விடுதி (ஹாஸ்டல்)களும், விளையாட்டு மைதானங்களும் இருக்கின்றன. அங்கு தரப்படும் கல்வி மிகச் சிலாக்கியமானது மாணவர்களுடைய ஒழுக்கமும், அறிவும், உடல் வளமும் சிறப்படையுமாறு ஏற்ற முறைகளிற் கல்வி அளிக்கப்படுவதோடு, தொழிற் கல்வியும் அளிக்கப்படுகின்றது. மேலும் அங்கே நெசவுத் தொழிற்சாலை, பூட்ஸ் செருப்பு முதலியவைகள் செய்யுந் தொழிற்சாலை, பொத்தான், கத்தி முதலியவைகளைத் தயார் செய்யுந் தொழிற்சாலை முதலிய அநேக தொழிற்சாலைகளிருக்கின்றன. அவைகளில் துணிகள், வேஷ்டிகள், சேலைகள், பூட்ஸ், செருப்பு முதலியவைகள், விளக்கு பொத்தான், பௌண்டன் பேனா, எலக்டிரிக் விசிறி, எலக்டிரிக் அடுப்பு முதலிய குடும்பத்திற்கு இன்றியமையாத அநேக சாமான்கள் தயாராகின்றன. சத்சங்கிகள் அங்கு தயாராகும் சாமான்களையே உபயோகிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஜாமான்களைத் தயாரித்து வெளியேயும் அனுப்புகிறார்கள். "மாடல் இண்டஸ்டிரீஸ்" (மாதிரிக் கைத்தொழில்) என்ற பெயரோடு கூடிய பகுதியில் இவைகள் தயாராகின்றன. இச் சாமான்கள் மிக நயமானவை என்று பலராற் கொண்டாடப்பட்டு வருகின்றன.

தயாள்பாக்கில் இன்னொரு சிறப்பான பகுதியிருக்கிறது. அதாவது, டெய்ரி என்ற பால், தயிர், வெண்ணெய் முதலியனவ்கள் தயாராகுமிடம். அநேக பசு மாடுகள் அங்கு வளர்க்கப்படுகின்றன. அவைகளை மிக உயர்ந்த முறையில் போஷித்து வருகிறார்கள். "கோ ஷம்ரக்ஷணை"யில் விருப்பமுள்ளவர்கள் தயாள்பாக்கிற் போயிப் பசு மாடுகளை வளர்க்கும் முறையைக் கவனித்து வரவேண்டும். பசு மாடுகள் இருக்கவும், உணவு கொள்ளவும், நீர்ப் பருகவும், பால் கறக்கவும், வைத்ய சிகிச்சை பெறவும் மேய்க்கவும் என் வெவ்வேறிடங்களுள்ளன. சாஸ்திரீகமாகப் பால் கறக்கப்பட்டு, மேனாட்டு முறைப்படி காய்ச்சி மீண்டும் குளிர வைத்துச் சீசாக்களில் கைப்படாதபடி நிரப்பப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. வெண்ணெய், பாலாடை, நெய் முதலியவைகளும் சரசமாக விற்கப்படுகின்றன. லக்ஷ ரூபாய்க்கு மேல் இந்த டெய்ரி விஷயத்திற் செலவு செய்து முறையாக வைத்திருக்கிறார்கள். இந்த டெய்ரியைப் பார்த்து, கவர்னர் முதலிய உத்தியோகஸ்தர்கள் வியந்து பேசியிருக்கிறார்கள். ஆசியா கண்டத்திலேயே சிறந்த டெய்ரி இதுவே.

தயாள்பாக்கில் நீர் வசதி முறைகளும், எலக்டிரிக் விளக்கு முறைகளும், இன்னும் வாழ்வின் சௌகரியத்திற் கானவைகளும் வெகு

நேர்த்தியா யமைக்கப்பட் டிருக்கின்றன. தெருக்கள் அழகாகவும், எளிமையாகவும், மிகத் தூய்மையாகவு மிருக்கின்றன. சாக்கடை நீரும் வயல்களுக்கு உபயோகப்படும்படி அமைக்கப்பட் டிருக்கிறது. கரும்பு முதலியவைகள் பயிரிடப்படும் தோட்டங்களுள்ளன. பயிரிடும் வித்தையைப் பயிலுவோருக்கு ஏற்ற சாதனங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. அத் தலத்திலிறப்போருக்கென்றிருக்கும் சுடுகாடுங் கூட மிக முறையாய் அமைக்கப்பட் டிருக்கிறது.

ஹிந்தி பாஷையிலும், ஆங்கிலத்திலும் இரண்டு பத்திரிகைகள் அங்கிருந்து வெளியாகின்றன. அவைகளுக்கான அச்சாபீஸ்களும் அங்கே யிருக்கின்றன. மேலும், அங்கு ஒரு பாங்கியும், தபாலாபீசும், அத் தலத்தாருக்கென விசாலமான ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன, தயாள்பாக்கில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் பிரசவத்திற்கு ஆஸ்பத்திரிக்குச் சென்றே தீர வேண்டும் என்கிற விதியுண்டு. பெண்கள் ஆஸ்பத்திரி மிகவும் நேர்த்தியாகவும் முறையாகவுங் கட்டப்பட்டுள்ளன. சுற்றுப்புறத்திலுள்ள கிராமத்தாருக்கு ஏற்ற தொண்டாற்றப்பட்டு வருகின்றது. அதனால் திருட்டு, கொள்ளை முதலிய தீச்செயல்களுடையோர் பலர் திருத்தப்பட்டு நல்வாழ்வி லீடுபட்டிருக்கின்றார்கள்.

தயாள்பாக்கில் நடக்கும் விவாகங்கள் மிக எளிமையோடு நடக்கின்றன. தக்க வயது வந்த பிறகே மணக்கும்படிக்கும், குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமென்ற போதே மணந்து கொள்ளும்படிக்கும் போதிக்கப்படுகிறாகள். விவாக தினத்தன்று பெண்ணின் உறவினரும், மாப்பிள்ளையின் உறவினரும் ஒருங்கே சத்குருவின் முன் கூடுகின்றார்கள். அப்போது மாலைகள் மாற்றப்படுகின்றன. பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சத்குரு நல்ல புத்திமதி கூறியபின், அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்குஞ் சத்திய வாக்கைச் சொல்லிய பின்னர் ஆசீர்வாதம் நடக்கிறது. பிறகு வந்தவர்களுக்கு மரியாதையாகப் பூமாலையும், ஏதோ இனிய தின்பண்டங்களுந் தந்தபின் அவரவர்கள் தத்தம் இடங்களுக்குப் போகின்றனர். கலியாணங்களுக்கெனக் காசு விரையமாகும் இக் காலத்தில், எளிய முறையில் அவைகள் நடப்பதின் நன்மையைச் சொல்லவும் வேண்டுமோ?

தயாள்பாக்கில் தயாராகும் சாமான்கள் சில லக்ஷக் கணக்கான ரூபாய் மதிப்புடையன. அவைகளின் விற்பனையால் வரும் லாபமனைத்தும் மீண்டும் தொழில்களை விருத்தி செய்யவும், அங்கு வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் முறைகளுக்கும், உலகோபகாரமான காரியங்களுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அங்கே உபாத்தியாயர்களாகவும், தொழிற்சாலை உத்தியோகஸ்தர்களாகவு மிருப்பவர்கள் மிகத் திறமையும், நற்குணமும் வாய்ந்தவர்கள். என்றாலும் அவர்கள்

மிகக் குறைவான சம்பளத்திற்கு உழைத்து, எளிமையோடு வாழுகிறார்கள். தன்னலமற்ற சேவை செய்து, குருவருளைப் பெறுவதே அவர்களுடைய நோக்கம், எனவே, அரசியல் விஷயங்களிற் கலக்காமலே தேசத்தின் நன்மைக் குழைத்து வருகிறார்கள்.

கல்வி, தொழில், பாங்கி, சுகாதாரம், டெய்ரி என்ற ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு டிபார்ட்டுமெண்டு (இலாக்கா) ஏற்பட்டு, ஒவ்வொன்றும் மிக ஒழுங்காகவும், முறையாகவும், சிறப்பாகவும் விளங்குகிறது. ஆர்கநேஷன் அல்லது தொழில் ஒழுங்கு என்பதே தயாள்பாக்கின் மூலைமுடுக்குகளிலும் பார்க்கலாம்.

“கடுவா மத் போலோ” அதாவது “பிறர் மனம் நோகத் தீய சொல் பேசாதே” என்றெழுதிய பலகைகள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அதற்கேற்றபடி அங்கிருப்போர் மிக அன்போடும், சகோதர நேயத்தோடும், நேர்மையோடும், கண்ணியமாக உழைப்பதிலும், பிறருக்கு உதவுவதிலுங் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். ஆனால் காலத்தை வீணாக்கப் பிரியப்படமாட்டார்கள். எளிய வாழ்வில் திருப்தியாக வாழுகிறார்கள். ரஸாயனம் முதலிய சாஸ்திரங்களைப் படித்தவர்கள், மேனாட்டிலிருந்து வரும் பொருள்களைப்போல நம் நாட்டிலேயே சரஸமாகவும் ஆனால் நயமாகவுஞ் செய்வதெப்படி என்றாராய்ந்து, சிலவற்றைச் செய்தும் வருகிறார்கள். உதாரணமாக கிராமபோன், எலக்டிரிக் அடுப்பு, விசிறி, மைக்ராபோன், லவுட் ஸ்பீகர், இங்கிகள், கெமிக்கல் தராசுகள் முதலியவைகள் அங்கு செய்யப்படுகின்றன. கட்டிடங்களுக்கு வேண்டிய செங்கல்களும், இரும்புச் சாமான்களும் அங்கே தயாராகின்றன.

“வாழ்வின் நோக்கம் ஈடேறச் சத்குருவின் துணை வேண்டும். அவருபதேசப்படி உள்ளுக்குள்ளேயே அப்பியாஸஞ் செய்யவேண்டும். வெளி ஆடம்பரக் காரியங்களும், ஏட்டுப் படிப்பும், கல்வித் திறமும், இன்னும் உலக இச்சைகளும், பிற பலவுஞ் சற்று உதவுமேயொழிய முடிவிற் சத்குருவாலேதான் நோக்கம் நிறைவேறும். ஆனால் உலகக் கடமைகளையும் மறக்கக்கூடாது. உலகக் காரியங்களைச் செய்வதில் உலகோபகாரமாகவு மிருக்கவேண்டும்” என்கிற கொள்கைகளோடு சத்சங்கி வாழுகிறான். ஆகவே உலக வேலைகளை அவன் உவந்து செய்கிறான். எவ்வளவு உண்மையாகவும், ஊக்கமாகவும், உபயோககரமாகவும், தன்னலமற்றுஞ் செய்கிறானோ அவ்வளவுக் கேற்றபடி கடவுளின் அவதாரமான சத்குருவின் கிருபைக்குப் பாத்திரமாவதாக நம்பி அவன் உழைப்பதால், உண்மைச் சத்சங்கியின் உழைப்பு வேறெவருடைய உழைப்பையும்விடச் சிறப்புடையதாகின்றது. இச் சிறப்பே

தயாள்பாக்கின் ஒரு தனிச் சிறப்பு. அநேக உத்தியோகஸ்தர்களும், படிப்பாளிகளும் மேற்சொன்ன மனப் பான்மையோடும் பக்தியோடும் உழைத்துக்கொண்டு அங்கு வாழுகிறார்கள். அங்கு இவ்வளவுக்குங் காரணமாயிருக்குந் தலைவர் ஹுஜூர் சாஹிப்ஜீ மஹராஜ் அவர்களின் பெருமையைப்பற்றி உரைக்க என்றால் இயலாது; நேரே சென்று கவனித்தாலேதான் ஒருவாறு விளங்கும். தயாள்பாக்கின் எல்லாச் சிறப்புகளுக்கும் அவர்களுடைய அதியற்புதத் தலைமையே காரணம். தனக்கென யாதும் எடுத்துக் கொள்ளுவதில்லை. எனினும், வெகு தீவிர உழைப்பு, அன்பின் உருவம், கருணை நோக்கம், அருளோடு பேசுவது, மரியாதைமிக்க நடத்தை ஆகிய அவர்களுடைய சிறப்புகள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையுங் கவருந் தன்மையனவாம். அநேக பாஷைகளில் வல்லவர், பெரிய கவியும், நூலாசிரியரும், வியாபாரம், தொழில் முதலியவைகளில் நிபுணரும் ஆவார்கள். வாழ்வுக்கேற்ற உயர்ந்த நன் முன்யாத்திரியாக அத் தலைவர் விளங்குகிறார்.

“தயாள்பாக்” என்பதைக் கவனித்தால், ஒரு சிறிய சுயராஜ்யமாகத் தென்படும். எப்படியெனில், வாழ்வுக்கான முக்கிய சாமான்கள் அங்கேயே தயாராகின்றன. தூய்மையான பண்டங்கள் சரசமாகக் கிடைக்கின்றன. எளிமையோடு விளங்கும் வீடுகளில் எல்லாரும் உழைத்துண்கிறார்கள். அவர்களின் உழைப்பு ஊதியத்திற்கல்ல; உபகாரத்தின்பொருட்டு. ஜாதி, மத, நிற, பிறப்பு வித்தியாசங்களில்லை. குருட்டுப் பழக்க வழக்கங்களும், ஆடம்பர வேடிக்கைகளுமில்லை. உயிருக்கு இடமான உடலை நன்கு ஓம்பி வருகிறார்கள். சத்குருவின் முன் வாழ்வதால், அவர்களிடையே ஒற்றுமையும் உண்மையான சகோதரத்துவமும் மிளிர்கிறது. உலக வாழ்வுக்கான சௌகர்யங்களெல்லாமிருக்கின்றன. அவைகள் பேரின்பப் பெரு வாழ்வை அடைவதற்குச் செய்யும் முயற்சிக்குச் சாதகமாயிருக்கின்றன. உலக விஷயத்தில் உழைக்கவோ, பேரின்பமடைவதற்கோ தன் பல சக்திகளை வளர்க்குஞ் சந்தர்ப்பங்களுங் கிடைக்கின்றன. இப்படியிருக்க, இனி வேண்டுவது யாது? ஒன்றுமில்லை. ஆகவே, “தயாள்பாக்”கை ஒரு சிறு சுயராஜ்யம் என்றால் மிகையாகாது.

“தயாள்பாக் பான்மை” அதாவது தன்னலத்திற்கல்லாமல் உலக உபகாரத்திற்கென்று சேவை செய்து, அதனாற் கடவுளருளைப் பெற வேண்டுமென்கிற மனப்பான்மையுடன் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும், தொழிலாளியும், வேறு பலவிதக் காரியஸ்தர்களும் உழைத்து வாழ்ந்தால், உலகம் விரைவிற் நலமடையுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. கடவுளருளால் தயாள்பாக்கின் சேதியும், அதன் உருக்கமான சக்தியும் உலகெலாம் பரவுமாக.

ஸ்வீடன் நாட்டுப் பெண்கள் நிலை.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், “பாரதி.”

மானிட வர்க்கத்தின் நாகரீகமும், மதக் கோட்பாடுகளும், மனோ நிலைகளும், பழக்க வழக்கங்களும் காலந்தோறும் மாறி வருவது இயற்கை. மாதர்கள், சந்தான விருத்திக்கும் ஆடவரின் அற்ப இச்சைகளுக்கும் ஏற்ற இயந்திரங்களென்றும், பெண்கள் முக்காடிட்டு அந்தப்புரங்களில் வீண் பொழுது போக்குவதே அவர்களின் கடமையென்றும், ஆடவன் தன் சுய நலத்திற்காக எத்தகைய கொடுமைகள் புரியினும் அவற்றைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டு அவனை மென்மேலும் களிப்பிக்க முயற்சிப்பதே கற்பென்றும் பொதுவாக மக்களால் பண்டைக் காலத்திலிருந்து கருதப்பட்டு வந்தது. இப்பொழுது உலகத்தில் அநேக தேசங்களில் மாதர் ஸ்திதி வேறு வேறு விதமாய் மாறிக்கொண்டு வருகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பெண்கள் முன்னேற்றம் வெகு வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கிறது. அக் கண்டத்தில் ஒரு நாடான ஸ்வீடன் தேசத்தில் மாதர் முன்னேற்றத்தைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

அமெரிக்காவில் 1000-க்கு 12 பேர்களும், இங்கிலாந்தில் 1000-க்கு 18 பேர்களும் படிக்காதவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஸ்வீடன் தேசத்து ஆண் பெண் இரு பாலாருள்ளும் 1000-க்கு 2 பேர்களே படிக்காதவர்கள். சிறு கடைகள் முதல் பெரும் ஆபீஸுகள் வரையில் அந் நாட்டிலுள்ள பெண்கள் வேலையாட்களாகவும் தலைவர்களாகவுமிருக்கிறார்கள். அங்கு தலைமைக் கணக்கர்கள் யாவரும் பெண் மக்களே. மெட்ரிகுலேஷன் வரையில் படித்துத் தேறியவர்களுக்கு வெள்ளைக் குல்லாய் போட உரிமை யுண்டாம். அவ் வகுப்பிற்காக, அவர்கள் 12 ஆண்டுகள் படிக்க வேண்டும். அக் காலத்தில் அவர்கள் ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு முதலிய மொழிகளைப் பயின்று, பின் இங்கிலாந்தில் 8 மாதமும் பிரான்சு தேசத்தில் 5 மாதமும் ஜெர்மனியில் 3 மாதங்களும் சென்று தங்கியிருந்து அந் நாடுகளின் நடை யுடை பாவனைகளை அறிந்து வருகிறார்கள். எல்லா மக்களும் அந் நாட்டில் 4 ஆண்டுகள் கட்டாயக்

கல்வி கற்க வேண்டும். ஏழைகளுக்கு இலவசப் பள்ளிக்கூடங்களில் இலவசமாகவே கல்வி போதிக்கப்படுகிறது. மதக் கல்வி கற்க விரும்புவோர் 17-ம் ஆண்டில் தினம் 1 மணி நேரம் பாதிரிமார்களிடம் வேதம் படித்த பிறகு, சடங்கு ஒன்று செய்யப்பட்டு, சமயத்திற் பற்றுடையவர்களாகிறார்கள். அங்கு ரோமன் கத்தோலிக்கர்களேயில்லை. எல்லாம் புரடெஸ்டண்டு கிறிஸ்தவர்களே.

அந் நாடு முழுவதும் பற்பல விடங்களில் தேகப்பயிற்சிச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு வாரத்தில் ஆண்கள் 3 நாட்களும், பெண்கள் 3 நாட்களும் உடற்பயிற்சி செய்கிறார்கள். தண்ணீர் நிரம்பிய மண்டபங்களில் பெண்கள்கூட நீந்தப் பழகுகிறார்கள் இத்தகைய பயிற்சிகளால் அங்குள்ளோர் பலரும் 6 அடிக்குக் குறையாமல் உயர்ந்து, பலத்த சரீரம் உடையவர்களாய் 100 ஆண்டுகள் வரையிற்கூட வாழ்நாட்களை உடையவரா யிருக்கின்றனர். சினிமா, நடனம், நாடகம் முதலியவைகளில் ஒருவரும் அதிகமாக ஈடுபடுவதே யில்லை.

ஆட்டுக் கறி, கோழிக் கறி, மாட்டுக் கறி, பன்றிக் கறி, வெங்காயம், கத்தரிக்காய் முதலியவைகளே அவர்களது ஆகாரமாகும். அங்கு பனிக்கட்டியினால் பூமி மூடப்படுவதால், காய்கறிகள், பயிராவதற்கின்றி அந்நிய நாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. சமையல் செய்தவைகளைப் பாத்திரங்களின் மத்தியில் மேஜைகளின் மேல் வைத்துச் சுற்றியும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைக் கோப்பைகளில் எடுத்துக்கொண்டு மௌனமாக மதுபானத்தைப் பருகிய பிறகு எல்லாவற்றையும் களிப்புடன் உண்பார்கள். அந் நாட்டு அரசரும் எல்லாரோடுஞ் சேர்ந்து உட்கார்ந்து அதே உணவைப் பேதமன்னியில் உண்பார்.

அங்கு 1000-க்கு 14 பேருக்குத்தான் மணம் நடைபெற்றிருக்கின்றது. விவாகம் செய்பவர்கள் 25 ஆண்டுகளுக்கு மேல் தாங்கள் விரும்பிய கணவரை மணக்கின்றனர். மணஞ் செய்தவர்களும் கர்ப்பத் தடை செய்கிறார்கள். பெண்கள் பலரும். கல்யாணஞ் செய்து கொண்டால் ஆண்களுக்கு அடிமையா யிருக்க வேண்டுமே யென்று நினைத்துத் திருமணங்களை வெறுக்கிறார்கள். ஆண்கள் கூட திருமணத்தில் அதிகக் கவலை கொள்வதில்லை. என்னே இந் நாட்டுப் பெண்களின் சுதந்திரம்! அந் நாட்டுப் பத்திரிகைகளும் பாதிரியார்களும் மணங்களின் அவசியத்தைக் கூறியும் எழுதியும் வருகிறார்கள்.

ஒவ்வொருவர் வீடும் உடையும் எப்பொழுதுஞ் சுத்தமாகவே யிருக்கின்றது. தெருக்களும் ரஸ்தாக்களும் வீட்டுப் பக்கங்களும் அந்தந்த நகர பரிபாலன சபை அதிகாரிகளால் சுத்தமாகவே வைக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரண வேலை யாட்கள் கூட மாதமொன்றுக்கு 300 ரூ. வரையில் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு உபயோகமான சாமான்களை அவர்களே செய்து கொள்ளுகின்றனர். இரும்புச் சுரங்கங்கள் அங்கே அதிகமிருப்பதால், துப்பாக்கிகள் செய்கின்றனர். மரங்கள் அதிகமா யிருப்பதால் தீக்குச்சிகள் செய்கின்றார்கள். எண்மரில் ஒருவருக்கு 1 டெலிபோன் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். அங்கு ஏழையே கிடையாது. ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்து தீரவேண்டும். இல்லையேல், கண்டிப்பு அதிகம் உண்டு.

பெண்கள் அபிவிருத்திக்காக நானா வழிகளில் பாடுபடுவதற்கு பிரெடெரிக்கா பெரம்மர் சங்கமும் (The Fradrika Bremer Society), ஸ்வீடன் தேசத்து நகரவாசிகளது பெண்கள் சங்கமும் (The Swedish Women's Union of Citizens), ஸ்வீடன் தேசத்து மனைவிமார்களது தேசீய சங்கமும் (The National Society of Swedish Housewives), மாதர் பாதுகாப்புச் சங்கங்களும், மாதர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கும் சங்கங்களும், கஷ்ட நிவர்த்திச் சபைகளும் இன்னும் பற்பல சபைகளும் நிதிகளும் ஸ்தாபனங்களும் மாதர் முன்னேற்றத்திற்காக இருக்கின்றன—பாடுபடுகின்றன. நம் நாட்டிலோ?

ஓர் அபிப்பிராயம்.

"தமிழ் நாட்டில் ஒழுங்கான மாதப் பத்திரிகை—எல்லாத் துறைகளையும் பற்றிக் கூறும் மாதப் பத்திரிகை "பாரதி" ஒன்று என்றே உண்மையாகக் கூறுவேன். ஆனால் இதை இன்னும் சிறப்புறச் செய்தால், உலகம் உள்ளளவும்..........................நிலை பெறும் என்பதில் ஐயமில்லை.

பண்டித மா. இராஜமாணிக்கம்.

அமெரிக்காவில் புத்தகாலயங்கள்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

மக்கள் அறிவு வளர்ச்சிக்குச் சாதனங்களா யிருப்பவை புத்தகங்களாகும். எனவே, இதுகாலை உலகில் நாகரீகத்திலும், செல்வச் சிறப்பிலும் முன்னேறி வரும் ஒவ்வொரு நாடும் தந் நாட்டு மக்களிடையில் கல்வி யறிவைப் பரவச் செய்வதற்குப் புத்தகாலயங்களை (Libraries) ஸ்தாபித்து உழைத்து வருகின்றன. இன்று புத்தகாலய வியக்கத்தைக் கண்டு வளர்த்து வருவதில் பிரபஞ்சத்தில் அமெரிக்காவே முதன்மை யுற்று விளங்குகிறது. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் நகரங்களிலே யன்றி நாட்டுப்புறங்களிலும் ஏற்பட்டுள்ள புத்தகாலயங்களின் மொத்த சங்கியை சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட கணக்கின்படி பதினெண்ணாயிரத்திற்கு மேற்பட்டிருக்கின்றன. இப் பத்து ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கக் கூடியவை இரண்டாயிரமாகக் கொள்ளினும் இன்று அமெரிக்காவில் இருபதினாயிரம் புத்தகாலயங்களுக்கு மேல் இருந்து வருவதாகத் தீர்மானிக்கலாம். இப் புத்தகாலய வியக்கமானது அமெரிக்காவில் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடையிலேயே தோன்றிய தென்னலாம். 1826-ம் ஆண்டில் காணப்பட்ட தர்க்க வாத சங்கமும், 1840-ம் ஆண்டில் ஹொராஸ் மான் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட கலையாராய்ச்சிக் கழகமும் அந் நாட்டுப் புத்தகாலய வியக்கத் தோற்றத்திற்குக் காரணங்களெனக் கூறலாம். அவ்விரு சபைகளிலும் கற்றோர் பலர், பல் கலைகளைப் பற்றியும் ஆராய்ந்து, உபந்நியாசங்கள் புரிந்தும், கட்டுரைகளை எழுதிப் படித்தும் வந்தார்களாதலால், அவ்வாறு தாம் ஆராய்ச்சிகளை நடத்துவதற்குப் பல புத்தகங்களைச் சேகரிக்கலாயினர். அவ்வாறு சேகரித்த புத்தகங்களைக்கொண்டு புத்தகாலயங்களை ஸ்தாபித்துப் பொதுஜனங்களுக்கு உபயோகப்படச் செய்தனர். அதினின்றும் நாட்டு மக்களிடையில் புத்தகாலயங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்ற உற்சாகம் பிறந்தது. நாட்டில் ஆங்காங்கே பொதுமக்களின் முயற்சியால் பல நூல் நிலையங்கள் தோன்றின. 1835-ம் ஆண்டில் நியூ யார்க் மாகாண துரைத்தனத்தார், அம் மாகாணத்தில் ஜில்லாக்கள்தோறும் ஸ்தாபிக்கப்படும் லைபொரிக ளனைத்திற்கும் பொருளுதவி புரியச் சட்டஞ் செய்தனர். நாளடைவில் அச் சட்டத்தைப் பிற மாகாணங்களுங் கைக்கொண்டன. சிறிது காலத்திற்குள் அந் நாட்டு நகர பரிபாலன சபைகளுக்கு இலவச நூல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. 1890-ம் ஆண்டில் மஸ்ஸார் செட்ஸ் மாகாண துரைத்தனத்தார் அம் மாகாணத்திற் புத்தகாலயங்களை விரிவாக ஏற்படுத்தவும், ஏற்படுத்தப்பட்ட புத்தகாலயங்களைச் செவ்வனே வேலை செய்துவருமாறு மேற்பார்வையிட்டு வரவும் புத்தகாலயக் கமிஷன் என்ற ஒரு அதிகார ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். பின்னர் மற்ற மாகாண கவர்ன்மெண்டுகளும் இவ் விலாகாவை ஸ்தாபித்தன. இவ்வாறு துரைத்தனத்தார் செய்த முயற்சிகளும், பொது மக்களின் உற்சாகமும் ஒன்று கூடி அந் நாட்டில் ஊர்கள்தோறும் புத்தகாலயங்களைத் தோற்றுவித்தன.

அமெரிக்காவில் தோன்றியுள்ள புத்தகாலயங்களனைத்திற்கும் மிகவும் பழமையானது சாலிஸ்பரி பட்டணப் புத்தகாலயமேயாகும். அஃது அந் நாட்டில் புத்தகாலய வியக்கம் தோன்றுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னமே—எனவே 1803-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அக் காலத்தில் பொது மக்களால் ஆதரிக்கப்பட்டதும் அதுவேயாகும். அதற்கு முன்னர் டாக்டர். பிரே என்பவரால் சர்வ கலாசாலைப் புத்தகாலயங்கள் சில தோற்றுவிக்கப்பட்டதாயினும், அவை பொது ஜனங்களுக்குப் பயன் படாமற் போயின. ஆகவே 19-ம் நூற்றாண்டின் இடையில் நாட்டில் புத்தகாலய இயக்கம் தோன்றி வளர முற்பட்டதினின்றுமே நாடெங்கும் புத்தகாலயங்கள் புறப்பட்டன. இன்று அந் நாட்டுப் புத்தகாலயங்கள் பொது ஜனங்களின் போஷிப்பாலும், துரைத்தனத்தாரின் பொருளுதவியாலும் நடைபெற்று வருகின்றன. நாட்டில் கீர்த்தி பெற்றுக் காலஞ்சென்ற பல பெரியோர்களின் ஞாபகச் சின்னங்களாகப் பல புத்தகாலயங்கள் பிரமாண்டமான மாளிகைகளோடு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அழகிலும், வேலைப்பாட்டிலும், அமைப்பிலும் உன்னதமாகக் காணப்படும் அப் புத்தகாலயக் கட்டிடங்களைப் போன்ற ஒரு கட்டிடம் நந் தமிழ் நாட்டிலேயே யில்லையெனப் படுமாயின் அவற்றின் உயர்வையும், பெருமையையும் ஒருவாறு ஊகித்தறியலாம். அமெரிக்கா புத்தகாலய வியக்கத்திற்கு முக்கிய போஷகரா யிருந்தவர் ஆண்ட்ரூ கார்னிஜி என்ற கோடீசுவரர். அவரது உதவியைப் பெறாத பெரிய புத்தகாலயங்கள் அந் நாட்டிலேயே இல்லை யென்றால் அவர் புரிந்திருக்கக் கூடிய உதவியை எவ்வாறு புகழ்வது! அவர் சிறு வயதில் சிறு கிராமப் புத்தகாலய மொன்றில் படித்து அறிவு முதிர்ச்சி பெற்றார். எனவே புத்தகாலயத்தின் அருமை பெருமைகளை அனுபவத்தில் உணர்ந்த அப் பெரியார் தாம் கோடீசுவரரானதன் பயனாய், அமெரிக்கா

நாட்டில் சுமார் இரண்டாயிரம் புத்தகாலயங்களுக்குக் கட்டிடங்களுக்காகவும், புத்தகங்களை வாங்குவதற்காகவும் முப்பத்தாறு கோடி ரூபாய்களுக்கு மேல் உதவி புரிந்திருக்கின்றார். பின்னும் பல நூல் நிலையங்களுக்கு அவர் ஏராளமாக உதவிசெய்து வந்தார். அவரை முன்மாதிரியாகக் கொண்டு அந் நாட்டுத் தனவந்தர்கள் மற்றும் பலர் நூல் நிலையங்களுக்கு உதவி புரிய முற்படலாயினர்.

பழமையான நாகரிகத்திற்கும், பல் கலை வளர்ச்சிக்கும் பெயர் போனதெனக் கூறப்பெறும் நம் பாரத நாட்டிற் பிறந்துள்ள தனவந்தர்களாகிய நம் இந்திய சகோதரர்கள். தருமத்திற்கென ஒரு தொகையைச் செலவிடக் கருதுவார்களாயின் அஃதை நாட்டுக்கும். பெரும்பாலான நாட்டு மக்களுக்கும் பயன்படாத வகையில் அதை வீணே செலவழிப்பர். அதாவது இருக்கும் கோவில் கட்டிடங்களைக் கலைத்துப் பெரிதாகக் கட்டியும், அன்றிக் கோவில் உற்சவத்திற்கான வாகனங்களை மரக் கட்டைகளை வெள்ளியிலும், வெள்ளியிலானதை தங்கத்திலுமாக உயர்த்திச் செய்தும், ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற மிகவும் ஏழ்மையும் தரித்திரமும் வாய்ந்த (?) கோவில்களுக்கு மேல் மேலும் நகைகள், தங்கப் பாத்திரங்கள் முதலியவற்றைச் செய்து கொடுத்தும், புராதனமான கோவில்கள் பல கவனிப்பாரற்றுப் பூசையற் றிருக்கையில் புதுப் புது கோவில்களைக் கட்டுவித்தும், திண்ணைத் தூங்கிச் சோம்பேறிகளை மிகுதிப்படுத்தும் தருமச் சத்திரங்களை ஸ்தாபித்தும், மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகளை அடிக்கடி செய்வித்தும் தரும காரியங்கள் பலவற்றைச் செய்துவிட்டதாகச் சந்தோஷிக்கின்றனர். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள செல்வம் படைத்த மக்கள் தம் நாடுகளிலேயே யன்றி, நாகரிக மற்ற பிற ஏழை நாடுகளிலும் தருமத்தின் பெயரால் ஆஸ்பத்திரிகள், கலாசாலைகள், கைத்தொழில்சாலைகள், ஆராய்ச்சிக் கழகங்கள், அநாதை விடுதிகள், புத்தகாலயங்கள் முதலியவற்றை ஸ்தாபித்து நடத்தி வருகின்றனர். இந்தியரின் செய்கைக்கும், ஐரோப்பியரின் செய்கைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள்! எவரது செய்கை மக்களின் மேன்மைக்கும், நாட்டின் நன்மைக்கும் உண்மையில் பயன்படுவதென்பதைச் சிந்தனை செய்யுங்கள். அமெரிக்காவில் தனவந்தர்கள் பலர் தங்கள் வாணாளில் புத்தகாலயங்களை ஸ்தாபித்து நடத்த உதவி புரிவதோடு, தங்கள் மரண சாஸனங்களின் மூலமாகவும் புத்தகாலயங்களுக்குப் பெருந் தொகைகளை யளித்துச் செல்கின்றனர். அமெரிக்காவில் ஒரு நகரத்தில் ஒரு தலைமைப் புத்தகாலயமிருக்குமாயின் நகரத்தின் பல பாகங்களிலும் அதன் கிளைகளாகப் பல புத்தகாலயங்களமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிளையில் இல்லாத புத்தகங்கள் அப்போதைக்கப்போது மற்றொரு கிளை ஸ்தா

பனத்தினின்றோ அன்றித் தலைமைப் புத்தகாலயத்தினின்றோ வரவழைத்து வாசகர்களுக்கு எட்டச் செய்வர். தலைமைப் புத்தகாலயத்தினின்றும் பெரிய பெட்டிகளில் தேவையான புத்தகங்களை யடக்கஞ்செய்து சுற்றுப்புற கிராமங்களுக்குச் சஞ்சாரப் புத்தகாலயங்களென்ற பெயரால் அனுப்பிவைக்கின்றனர். இம் முறையால் ஒரு கிராமாந்திர வாசியும் வேண்டிய பல நல்ல நூல்களை இருப்பிடத்தினின்றே இரவலாக வரவழைத்து வாசித்து அறிவு முதிர்ச்சி பெறுவதற்கு அவகாசம் உண்டாகிறது.

அமெரிக்காவில் புத்தகாலயங்களுக்குத் தலைமை வகித்து அதைச் செம்மையுற நடத்துவதற் கேற்ற பயிற்சி கொடுக்கும் பாடசாலைகளும் நடைபெறுகின்றன. அத்தகைய பயிற்சிச்சாலைகளை நாட்டுத் தலைமைப் புத்தகாலயங்கள் நடத்தி வருகின்றன. கல்லூரிப் பட்டப் பரீக்ஷைகளில் தேறிய மாணவர்கள் மூன்று வருடங்கள் போலும் புத்தகாலயப் பயிற்சிச் சாலையிற் படிக்கின்றனர். அவ்வித பரீக்ஷைகளில் தேறினவர்களையே புத்தகாலயங்களில் உத்தியோகஸ்தர்களாக அமர்த்துகின்றனர். எனவே அந் நாட்டார் புத்தகாலய விபக்கத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்திவருகிறார்க ளென்பதைக் கவனிக்க வேண்டும். புத்தகாலயங்களுக்கு வரும வாசகர்கள் புத்தகங்களைப் படிக்காமலேயே தமக்குரிய சந்தேகங்களைப், புத்தகாலயத் தலைவரிடம் வாய் மொழியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு செல்லுவார்கள். அதற்கென நிபுணரான தலைவர்கள் புத்தகாலயங்களில் அமர்த்தப்பட்டிருப்பார்கள். அவர்கள் வாசகர்கள் கேட்கும் பலதுறைக் கேள்விகளுக்கும் பொறுமையுடன் ஏற்ற விடையிறுத்து வருவார்கள். அந் நாட்டுப் புத்தகாலயக் கட்டிடங்கள் நன்கு ஆராய்ந்து கட்டப்பட்டிருக்கின்றன. தூரத்தினின்று பார்க்கும்பொழுதே கண்ணைக் கவர்ந்து காக்ஷியளிக்கும் பான்மையில் அழகிய முன் தோற்றத்துடன் கட்டிடங்கள் விளங்குகின்றன. உட்புறம் முக்கியமான புத்தகசாலையானது விசாலமான கூடமாக அமைந்துள்ளது. அதன் சுவர்கள் சிற்பக் கலைகளுக் கிருப்பிடமான படங்களோடும், பதுமைகளோடும், சாஸ்திரக் கலைகளுக்குச் சம்பந்தப்பட்ட சித்திரங்களோடும் தோற்றமளிக்கும். அழகிய முறையில் வரிசை வரிசையாக ஏராளமான புத்தகங்கள் அலமாரிகளில் அடுக்கி வைத்திருக்கும் காக்ஷியையும், கூடத்தில் வரிசை வரிசையாக மேஜைகள் போட்டு அவற்றைச் சுற்றி ஏராளமான நாற்காலிகள் அமர்த்தியுள்ள நேர்த்தியும், எங்கும் தொங்கவிடப்பட்டுள்ள மின்சார விசிறிகள், விளக்குகள் முதலியவற்றின் அமைப்பும், மேஜைகளின் மீதும், பலகணிகளின் மீதும் பல அழகிய புஷ்பச் செடிகள் சட்டிகளில் வைத்துப் பயிராக்கப்

பட்டுள்ள முறையும், கும்பல் கும்பலாகச் சிலர் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டும், சிலர் புத்தகங்களைப் படித்துக்கொண்டும் இருக்கும் நிலையும், பண்டிதர்களும், மாணவர்களு மாயினோர் ஆங்காங்கே தம் முன் புத்தகங்களைக் குவியல்களாகக் குவித்துக்கொண்டு ஆர்வத்தோடு ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கும் விதமும் காண்போர் கண் கொள்ளாக் காக்ஷிகளன்றோ? அப் புத்தகக் கூடத்தை யடுத்து வெவ்வேறு பாகங்களுக்கான வெவ்வேறு அறைக ளுண்டு. அவற்றில் வாசகர்கள் தனியாக விருந்து படிக்கவும், தங்கள் கடிதங்கள், புதிய நூல்கள் முதலியவற்றை எழுதவும் ஏற்ற வசதிகளுண்டு. எழுதுவதற்கான கடிதங்களும், எழுதுகோல்களும், தபால் தலைகளும் அங்கேயே விலைக்குக் கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். டைப்ரைட்டிங் முதலிய சாதனங்களும் பெற வசதிக ளுண்டு. ஆராய்ச்சிகள் செய்யத் தலைப்படும் பண்டிதர்களுக்கு வேண்டிய மற்றும் பல சாதனங்களைப் புத்தகாலய அதிகாரிகள் கொடுத்துதவ எப்பொழுதும் தயாரா யிருக்கின்றனர். புத்தகாலயங்களி னின்றும் வாசகர்கள் தடவைக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் வீட்டுக்குப் படிக்க எடுத்துச் செல்லவும் ஏற்பாடுக ளுண்டு. ஆசிரியர்களும், மாணவர்களும் தேவையாயின் இன்னும் அதிகமான நூல்களை வாங்கிச் செல்லவும் திட்டங்கள் வகுத்திருக்கின்றனர். குறித்த காலத்திற்கு மேல் அப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்காமல் வைத்திருப்பவர்கள் தினமொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று பைசாக்கள் வீதம் அபராதம் செலுத்த வேண்டும். நியூயார்க்கு நகரத்திலுள்ள தலைமைப் புத்தகாலயத்தில் பதினான்கு லக்ஷம் புத்தகத் தொகுதிக ளிருக்கின்றன. ஆண்டு தோறும் அறுபது லக்ஷம் புத்தகங்கள் வெளியில் படிக்கக் கொடுக்கப்படுகின்றன. வருடந்தோறும் வாசகர்கள் வாசிக்க எடுத்துச் செல்லும் புத்தகங்களுக்குக் குறித்த காலத்திற்கு மேற்படுவதால், அபராதமாகச் செலுத்தும் தொகை சராசரி எழுபத்தையாயிர ரூபாயாகு மெனத் தெரிகிறது.

அமெரிக்காவில் பெரிய பட்டணங்களிலுள்ள நூல் நிலையங்களனைத்தும் தினந்தோறும் காலை 8 மணி முதல் மாலை 10 மணிவரையில் திறக்கப்பட்டிருக்கின்றன. லீவு நாட்களில் பகல் 2 மணி முதல் இரவு 10 மணிவரையில் திறந்துவைக்கப்படுகின்றன. பெரிய புத்தகாலயங்களில் சிறுவர் சிறுமிகளுக்கான ஒரு கிளை அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. இங்கிலாந்து முதலிய தேசங்களில் பத்து வருடத்திற்குட்பட்ட குழந்தைகளைப் புத்தகாலயங்களுக்கு வர அனுமதிப்பதில்லையாம். ஆனால் அமெரிக்காவிலோ அத்தகைய குழந்தைகளுக்கென மேற்குறித்தவாறு ஓர் அமைப்பைக் கண்டு, அதில் தலைவராயமைந்திருப்பவர், அங்கு வரும் சிறுவர் சிறுமிகளை ஒன்று கூட்டி,

வேடிக்கையான பல விஷயங்களோடு கதைகளும், சரித்திரங்களும், வீரர் வர்த்தமானங்களும் படங்களைக் காட்டி, வாய்மொழியாகக் கூறி வந்து, பாதி கூறியவுடன் பிற்பகுதியைக் கூறாமல், அது சம்பந்தமான எளிய நடையில் எழுதப்பட்டுள்ள நூல்களைக் காட்டி, அவற்றைப் படித்துக்கொள்ளும்படி ஊக்கிவிடுவார். புத்தகாலயங்களை யடுத்துப் பெண்கள் சபைகளும், பண்டிதர் கழகங்களும், சிறுவர் சங்கங்களும் ஏற்பட்டு நடந்துவருகின்றன. புத்தகாலயங்களின் சார்பாகப் பண்டிதர்களைக்கொண்டு பிரசங்கங்கள் செய்வித்தும், அசையும் படக்காட்சிகள் முதலியவற்றை நடத்தியும் பொதுமக்களுக்குப் பல துறைப்பற்றிய அறிவை யூட்டிவருகின்றனர். பொதுவாகப் புத்தகாலயத் தலைவர்கள், புத்தகாலயங்களுக்கு வரும் வாசகர்களைத் தமது வீட்டுக்கு எழுந்தருளும் விருந்தினர்களை யுபசரிப்பதுபோல் பரிவுடன் வரவேற்று உபசரித்து, ஆதரவு காட்டுகின்றனர்.

ஏராளமான புத்தகங்களைச் சேகரித்து, ஒரு மாளிகையில், அழகிய பேழைகளில் அடுக்கி வைத்துவிட்டால், புத்தகாலய மமைத்துவிட்டதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் புத்தகாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் பலவும் பொதுமக்களால் வாசிக்கப்படவேண்டும். ஆகவே நூல் நிலையங்கள் பொது ஜனங்களைத் தம்மிடத்திற்குக் கவர்ந்து, பெருவாரியாகப் புத்தகங்களைப் படிக்குமாறு தூண்டுவதாக விருக்கவேண்டும். அதை முன்னிட்டே அமெரிக்காவில் புத்தகாலயத்தார்கள், மக்களின் மனத்தைப் புத்தகங்களைப் படிக்குமாறு தூண்டுவதற்கான பல முறைகளை மேற்கொள்ளுகின்றனர்; விளம்பரங்கள் செய்கின்றனர்; துண்டுப் பிரசுரங்களைப் பிரசுரிக்கின்றனர்; கூட்டங்களில் பிரசாரஞ் செய்கின்றனர்; போட்டிப் பந்தய விளையாட்டுகளை நடத்துகின்றனர்; உபந்நியாசங்கள் புரிகின்றனர். இன்னோரன்ன பல முயற்சிகள் செய்து, அதிகப்படியான மக்களைப் புத்தகாலயத்தின் பயனைப் பெற்று, அறிவை வளர்த்துக்கொள்ளுமாறு ஊக்கிவருகின்றனர். அந் நாட்டில் பிலடெல்பியா நகரப் புத்தகாலயத்தினின்றும் வேண்டிய புத்தகங்களை டெலிபோன் மூலமாக அறிவித்து வரவழைத்துக்கொள்ளலாம். இரண்டாயிர மைல்கள் தூரத்திலிருந்தும் அவ்வாறு புத்தகங்களை வரவழைத்துப் படிக்க முடியுமெனப் படுகிறது. என்னே அமெரிக்கரின் முயற்சி! புத்தகாலயங்களில் குருடர்கள் வாசிக்கத் தகுந்த மேடான எழுத்துக்களைக் கொண்ட புத்தகங்களும் வைத்திருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தாரால் நடத்தப்பெறும் வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் தேசியத் தலைமைப் புத்தகாலயமானது அந் நாட்டிலேயே முதன்மையானதாகவும், உலகில் மூன்றாவதாகவும் பாராட்டப்படுகிறது. இப்பொழுது சுமார் இருபது கோடி ரூபாய் செலவில் மூன்றடுக்கு மாடிகளைக் கொண்ட

ஒரு பிரம்மாண்டமான மாளிகையை அப் புத்தகாலயத்திற்கெனக் கட்டியிருக்கின்றனர். அப் புத்தகாலயத்தின் காரிய நிர்வாகிகளான உத்தியோகஸ்தர்கள் மூன்னூறு பேர் இருக்கின்றனர். அப் புத்தகாலயத்தின் உபயோகத்திற்கென ஒரு அச்சுக்கூடமும் நிறுவியிருக்கின்றனர். அப் புத்தகாலயத்தில் 21,38,255 புத்தகங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. 900 வர்த்தமானப் பத்திரிகைகளும், 6,676 மாதாந்தர சஞ்சிகைகளும் அங்கு வரவழைக்கப்படுகின்றன. ஏக காலத்தில் ஆயிரம் பேர் உட்கார்ந்து படிப்பதற்கேற்ற வசதியுண்டு. அப் புத்தகாலயத்தின் தலைமை உத்தியோகஸ்தரின் வருடச் சம்பளம் 13,500 ரூபாயாகும். இப் புத்தகாலயத்தைச் சேர்ந்தாற்போல் சரித்திரங்களையும், பண்டைய நூல்களையும், நவீன சாஸ்திரங்களையும் ஆராய்ந்து வெளியிடுவதற்கான சங்கமும் தோன்றியுள்ளது. அதில் பல பண்டிதர்கள் பங்குபெற்று உழைத்து வருகின்றனர். அவர்களுடைய ஆராய்ச்சிகள் அவ்வப்போது புத்தகங்களாகவும், சஞ்சிகைகளாகவும் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டு, உலகிலுள்ள முதன்மையான நானூறு நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்பப்பட்டு வருகின்றன. அப் பேருதவியை நம் இந்திய நாட்டில் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று நகரங்களிலுள்ள சர்வகலாசாலைப் புத்தகாலயங்கள்மட்டும் பெற்று வருகின்றனவெனத் தெரிகிறது.

அமெரிக்கா நாட்டில் பொதுவாகப் புத்தகாலய வியக்கத்தை வளர்த்து வருவதற்கெனவே பிலடெல்பியா நகரத்தில் 1876-ம் ஆண்டில் "அமெரிக்கா புத்தகாலயச் சங்கம்" என்றொரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் பெயர் பெற்ற புத்தகாலயத் தலைவர்கள் நூற்றுமூன்று பேருடன் அச் சங்கம் வேலையைத் துவக்கியது. அச் சபை, அந் நாடெங்கும் விரிவாகப் புத்தகாலயங்களை யேற்படுத்தவும், அவ்வாறு ஏற்பட்டவற்றை நன்கு நடைபெறுமாறு செய்யவும், பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் புத்தகாலயங்களை எவ்வெவ்வாறு பயன்படச் செய்யலாமென்பதை யாராயவும், ஆண்டுதோறும் புத்தகாலய மகாநாடுகளைக் கூட்டி நடத்தவும், இதுபோன்ற மற்றும் பல துறைகளில் உழைத்து வருகின்றது. அச் சங்கத்தின் வேலைகளுக்கெனவே 1907-ம் ஆண்டினின்றும் தனிமையில் ஒரு பத்திரிகையை நடத்திவருகின்றனர், அப் பத்திரிகையில் புத்தகாலய வியக்கத்தின் சம்பந்தமான எல்லா நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவதோடு, அவ் வியக்கத்தைப்பற்றியும், விஞ்ஞானக் கலைகளைப்பற்றியும், சரித்திர விஷயங்களைப்பற்றியும் ஆராய்ச்சி வியாசங்கள் படங்களோடு பிரசுரிக்கப்படுகின்றன. புத்தகாலய இயக்கத்திற்குப் பாடுபட்ட பல பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும் எழுதப்படுகின்றன. இன்று அச் சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்களாக 1500 பேருக்குமே லிருக்கின்றனராம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெயர்பெற்ற நூலாசிரியர்கள், தாம் எழுதும் நூல்களில் ஒவ்வொரு பிரதியை அந் நாட்டுத் தலைமைப் புத்தகாலயத்திற்கு வழங்கி வருகின்றனர். அதனால் தங்கள் நூல்கள் நாட்டில் மறைந்துவிடாமல் நிலைபெறுவதாகக் கருதுகின்றனர். மேலும் புத்தகாசிரியர் ஒருவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டால், உடனே அதன் பிரதிகளை அந் நாட்டுப் புத்தகாலயங்களில் பெரும்பாலானவை வாங்க முயலுவதால் புத்தகாசிரியர்கள் ஊதியத்தோடு ஊக்கம் பெற்று, மற்றும் பல புதிய நூல்களை வெளியிட முற்படுகின்றனர். அந் நாட்டுப் பத்திரிகைகளும் அவ்வாறே ஆதரிக்கப்படுகின்றன. தற்போது அமெரிக்காவில் வசித்துவரும் டாக்டர் சுதீந்திர போஸ் அவர்கள் "இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்து, மஹம்மதிய, கிறிஸ்துவ கோவில்கள் எத்தனையுண்டோ அத்தனைப் புத்தகாலயங்கள் அமெரிக்காவி லிருக்கின்றன" என்று கூறுகிறார். இதினின்றும் அந் நாட்டுப் புத்தகாலயங்களின் பெருக்கத்தையும், அவற்றின் அவசியத்தையும் அந் நாட்டு மக்கள் எவ்வாறு கருதுகிறார்களென்பதையும் நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

சர். பி. சி. ராய், Kt., D. Sc., Ph. D., C. I. E., etc.

(வங்காள ரஸாயன சாஸ்திர நிபுணர்.)

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

இந்தியாவின் பண்டைக் கலைகளை ஆராய்ந்தால் தற்காலத்தில் மேனாடுகளில் திகழும் கலைகள் அனைத்திற்கும் இந்தியாவே பிறப்பகமாக யிருந்ததெனத் தெரிகிறது. புராதன இந்தியா, மருத்துவக் கலை, ஔஷத முறை, மானிட உடற்கூற்று சாஸ்திரம், தசாம்ச கணிதம், பீஜ கணிதம் (Algebra), க்ஷேத்திரக் கணிதம் (Geometry), நிர்மாண சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் முதலிய இன்னும் எண்ணற்ற கலைகளில் மேன்மை பெற்று விளங்கினதாகவும், அவைகளை அரேபியர், பாரஸீகர் முதலியோர் கடைசியாக கி. பி. எட்டாம்

நூற்றாண்டிலுங் கூட மொழிபெயர்த்துக்கொண்டு சென்றதாகவும் காணக் கிடக்கிறது.

இவ்வாறு பழம் பெரும் பெருமையாற் சிறப்புற்றிருந்த இந்திய நாடு தன்னிலை மாறித் தட்டுக் கெட்டு, அன்னியராட்சிக் குட்பட்டு வறுமையால் பீடிக்கப்பட்டு, அஞ்ஞான இருளில் அவதிப்பட நேர்ந்த இக் காலத்திலும், இந்தியத் தாய் தனது அருள் வல்லபத்தை இழந்ததில்லை. அறிஞர் பலர், நிபுணர் பலர் இந்தியாவிற் பிறந்து இந்தியர்களின் பண்டைப் பெருமைகளை நிலை நாட்டி வருகின்றனர். அவர்களில் சர். பி. சி. ராய், ரசாயன சாஸ்திரத்திலும், சர். ஜே. சி. போஸ், பிரகிருதி—தாவர, வர்க்க சாஸ்திரங்களிலும், சர். சி. வி. இராமன், பிரகிருதி சாஸ்திரத்திலும் ஜெகப் புலவர்களாக விளங்குகிறார்கள். அவர்களில் வங்காள ரசாயன சாஸ்திர நிபுணரான சர் பி. சி. ராயின் சரிதையை இங்கு இரத்தினச் சுருக்கமாக எழுதுவோம்.

பிறப்பும் படிப்பும்

சர். பிரபுல சந்திர ராய் வங்காள மாகாணத்தில் குல்னா ஜில்லாவில் ராருலி—கதிபாரா என்பதோர் சிறு கிராமத்தில் 1861-ம் ஆண்டில் அவதரித்தார். அவரின் அருமைத் தந்தையார் ஹரிச்சந்திர ராய் பார்சி பாஷையில் நல்ல பாண்டித்யம் பெற்றவர். கல்வியில் கரையில்லாத கவர்ச்சி யுடையவர். தமது சொந்தத்தில் வங்காளியில் ஓர் பாடசாலை ஸ்தாபிதஞ் செய்திருக்கிறார். அவருக்குப் பின் அது இப்பொழுது ஓர் ஆங்கில உயர்தரப் பாடசாலையாக விளங்குகிறது. சர். ராய்க்குப் பள்ளிப் பருவம் வந்ததும் தமது தந்தையின் பாடசாலையிலேயே கற்று வந்தார். பின்னர் உயர்தரக் கல்விக்காகவே 1870-ல் கல்கத்தா நகர் சென்று வாசிக்கத் தொடங்கினார்.

கல்கத்தாவில் ராய் ஹேர் ஸ்கூலில் சேர்ந்து நான்கு வருடம் பயின்றார். 1874 தொடங்கி இரண்டு வருடகாலம் சீத பேதியால் வருந்தினார். அதனால் அவர் பாடசாலைக்குப் போகாமல் வெகு நாள் வீட்டிலேயே யிருக்க நேர்ந்தது என்றாலும் வீட்டிலிருந்த போது மற்றவர்களைப்போல் வீண் காலத்தைக் கழித்தாரா? தமது தந்தையும் தமயனாரும் சேர்த்து வைத்திருந்த புத்தகங்கள் பலவற்றைப் படித்து முடித்தார். வியாதி ஒருவாறு நீங்கியதும் கல்கத்தா ஆல்பர்ட் ஸ்கூலில் சேர்ந்து பயின்றபோது அவரது கல்வியின் உண்மை உயர் நிலையைப் பலரறிய நேர்ந்தது. இச் சமயத்தில் சர். ராய் கேசவ சந்திர சேனர் என்பாரின் போதனை சொற்பொழிவுகளைக் கேட்டு பிரம சமாஜத்தில் பிரிய முண்டாகி

பிறகு 1882-ல் அதில் சேர்ந்துகொண்டார். 1879-82 வரை "மெட்ரோபோலிடன்" கல்வி நிலயத்தில் மாணவரா யிருந்தார். பிறகு கல்கத்தா பிரஸிடென்ஸி கல்லூரியில் சேர்ந்து சாஸ்திரப் படிப்பை ஆராயத் தொடங்கினார். பிரகிருதி சாஸ்திரத்தில் சர் ஜான் எலியட் என்பவரின் அரிய சொற்பொழிவுகளையும், ரசாயன சாஸ்திரத்தில் சர் அலெக்ஜாந்தர் பெட்லர் என்பவரின் பேருரைகளையும் கேட்டாராய்ந்து வந்தார்.

இங்கிலாந்து பிரயாணம்

இச் சமயம் ராய் அவர்களின் தந்தை தமது சொத்துக்களில் பெரும் பாகத்தை இழக்க நேரிட்டதால் அறிவிற் சிறந்து விளங்கிய தனது குமாரனை இங்கிலாந்துக்கு அனுப்பி கல்வி பயிற்றுவிக்க முடியவில்லை. ஆனால் ராயோ கில்கிறைஸ்ட் உபகாரச் சம்பளத்திற்கான பரீக்ஷைக்குத் தயாராகி வந்தார். இவ் விஷயத்தைத் தாய் தந்தைக்குக்கூடத் தெரிவிக்காமல் வெகு இரகசியமாக வைத்திருந்தார். கடைசியில் பரீக்ஷையில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்திற்கு 1882-ல் புறப்பட்டுச் சென்று எடின்பர்க் நகரை யடைந்தார். ஆங்கு ஆறு வருடம் பயின்றார். அவருக்குச் சரித்திரம் இலக்கியம் காவியம் முதலியவற்றில் பிரியமிருந்த போதிலும், இந்தியாவின் முன்னேற்றத்திற்குச் சாஸ்திரக் கல்வியே அத்யாவசியமெனத் தெரிந்து அதிற் கவனஞ் செலுத்தினார். எடின்பர்க் கலாசாலையில் பிரகிருதி ரசாயன சாஸ்திரங்களில் பெயர் பெற்ற ஆசிரியர்கள் பீட்டர் குட்ரி டேய்ட், அலெக்ஜாந்தர் க்ரம் ப்ரவுன் என்பவர்களின் மாணாக்கரா யிருந்து ரசாயன சாஸ்திரத்தில் அதிகமாய்ப் பிரியம் ஏற்பட்டு அதனை ஆர்வத்துடன் ஆராய்ந்தார். 1885-ல் பி. எஸ்ஸி. பட்டம் பெற்றார். ரசாயன சாஸ்திர சம்பந்தமான பல் கலைகளிலும் நிபுணத்துவம் பெற்றுத தன் சுய ஆராய்ச்சியால் புத்தம் புதிய ஆராய்ச்சிகளை வெகு அருமையாய் விளக்கிக் காட்டியதற்காக 1887-ல் டி. எஸ்ஸி. என்ற உயர்தரப் பட்டத்தையும் பெற்றார். 1887-88 ஹோப் பரிசு பெற்று ரசாயன சாஸ்திரத்தில் உயரிய ஆராய்ச்சி செய்து வந்தார். இவ்வாறு இங்கிலாந்தில் பல சாஸ்திர நிபுணர்களின் நன் மதிப்பையும், கீர்த்திப் பிரதாபங்களையும் பெற்று கல்கத்தா நகர் திரும்பினார்.

சர்வ கலாசாலைத் தலைமை ஆசிரியர்

இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் சர் ராய் 1889-ல் கல்கத்தா பிரஸிடென்ஸி கல்லூரியில் ரசாயன சாஸ்திரத் தலைமை ஆசிரிய

ராக நியமிக்கப் பெற்றார். இங்கு அநேக ஆராய்ச்சிகள் செய்தார். முக்கியமாய் 1889-98-ம் ஆண்டு வரைச் செய்த அநேக அரிய ஆராய்ச்சிகளை, "பிரஸிடென்ஸி கல்லூரியில் ரசாயன ஆராய்ச்சிகள்" என்ற புத்தகத்தில் வெளியிட்டார். இதன் பிறகுதான் ரசாயன சாஸ்திரத்தில் அரும் பெரும் நிபுணர் என்ற உயர்ந்த ஸ்தானம் பெறுகிறார். 1904-ல் வங்காள சர்க்காரின் செலவில் ஐரோப்பாவிலுள்ள ரசாயனக் கைத்தொழில் நிலையங்களைப் பார்வையிட்டு ஆராய்ந்து வரும்படி அனுப்பப் பெற்றார். ஐரோப்பாக் கண்டத்தில் அவர் சென்ற விடங்களிலெல்லாம் ஆங்காங்கு அக மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டார். பிரான்ஸ் தேசத்து சாஸ்திர நிலயத்தின் விசேஷ அறிஞர் கூட்டத்தில் ட்ரூஸ்ட் என்பவர் சர் ராய் அவர்களைப் புகழ்ந்து அவரின் அரிய ஆராய்ச்சிகளின் பெருமைகளை விளக்கினார்.

வங்காள ரசாயனக் கைத்தொழிற்சாலை.

இந்தியா முன்னேற்றமடைவதற்கு வெறுங் கல்விமாத்திரம் இருந்தால் போதாது. ஆனால் மேனாடுகளைப்போல் நூதனமான ரசாயன சாமான்கள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பெற வேண்டுமென்று சர் ராய் கருத்தில் பட்டது. அப்பொழுது அவருக்கு மாதச் சம்பளம் ரூ. 250. இதைக் கொண்டு தமது தகப்பனார் பட்ட கடனுக்கும், ஏழைப் பையன்களுக்கு உபகாரச் சம்பளத்திற்கும் கொடுத்து, மிஞ்சியதில் தனது சொந்தச் செலவை வெகு சிக்கனமாகச் செலவு செய்து, ரூ. 800 சேர்ந்ததும் ஒரு சிறிய இருட்டறையில் ரசாயனக் கைத்தொழிற்சாலை யொன்றை ஆரம்பித்தார். அப்படி ஆரம்பிக்கப்பட்ட சாலை, இன்று ஆயிரக்கணக்கான ரசாயன சாமான்கள் ஏராளமாகப் பெரிய பெரிய நிபுணர்களாற் செய்யப்பட்டு விற்பனையாகி, இந்தியாவுக்கே பெருங் கீர்த்தியைத் தந்துகொண்டிருக்கிறது. தினம் ஒன்றுக்கு அங்கு 15 டன் 'ஆலம்' என்ற ஸ்படிகமும், 15 டன் 'சல்பூரிக் ஆசிட்' என்ற பாஷாண திராவகமும், அநேக டன் துத்தநாக உப்பும், இன்னும் பலவித ரசாயன சாமான்களும் செய்யப்படுகின்றனவென்றால் அதின் வளர்ச்சியின் தீவிரமும், சர் ராயின் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சித் திறனும், விடாமுயற்சியும் எத்தன்மைத்தென்னலாம்! இப்பொழுது எத்தனையோ இளங் காளைகள் அவ்விடத்தில் வேலை செய்துவருகின்றனர்! இவ்வாறு விரிவாக உண்டானதும் அதின் லாபத்தைத் தானே அடைய விரும்பாமல் பலரையும் பங்கெடுத்துக்கொள்ளச் செய்து, ஓர் "லிமிட்டெட்" கம்பெனியாக்கித் தானே தலைமைக் கண்காணிப்பவரானார். இதைவிட சர் ராயின் பெருந் தயாள குணத்திற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

டாக்டர் அமுல் சாரன் போஸ், சதீஸ் சந்திர சின்ஹா, எம். ஏ., புரோபசர் சந்திர பூஷன் பாதுரி என்ற அறிஞர்கள் பலர் சர் ராயோடு ரசாயனசாலையில வேலை செய்துவந்தனர். "பலவித ரசாயன உப்பு, திராவகம் முதலியன செய்வதற்கான நூதன இயந்திரக் கருவிகளை ஆராய்ந்து அமைத்திருப்பது அவரது ஆராய்ச்சியின் உயர்வையும், பெரும் முற்போக்கையும், நாட்டுக்கே ஓர் பெரும் சேவை செய்திருப்பதையும் நன்கு விளக்குகிறது" என்று டாக்டர் ட்ராவெர்ஸ் என்ற சாஸ்திர நிபுணர் கூறுகிறார்.

புதிய ஆராய்ச்சிகள்.

சர் ராய் ரசாயன சம்பந்தமான பல பொருள்களைப் புதிது புதிதாகக் கண்டுபிடித்து உலகுக் களித்துள்ளார். இவரின் அரிய ஆராய்ச்சிகளால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரசாயன வஸ்துக்களைக் கண்டு ஆச்சரியமடைந்து, மேனாட்டில் அவரைப் புகழாத சாஸ்திர நிபுணர்களும், சாஸ்திர சஞ்சிகைகளுமில்லை. சுமார் 15-ம் நூற்றாண்டுக்கு முன்னேயே ரசம் (Mercury), பாஷாண திராவகம் (Nitric Acid) இவைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேனாட்டார் கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அது சம்பந்தத்தாலுண்டாகும் "மெர்குரஸ் நைட்ரேட்" (Mercurous Nitrate) என்ற ரசப் பாஷாண உப்பைக் கண்டு, அதைத் துண்டுப்படுத்தக் கூடாமலிருந்தனர். ஆனால் சர் ராய் 1895-ம் ஆண்டில் கண்கூடாகக் கண்டதல்லாமல், அதை வேறாகப் பிரித்துங் காட்டினார். இதனால் ரச சம்பந்தத்தாலுண்டானவைகளில் கண்டுபிடிக்க முடியாதிருந்த இந்த உப்பு வகையைக் கண்டுபிடித்துப் பெருங் குறையை நிவர்த்தி பண்ணிய நிகரற்ற பெருமை சர் ராய்க்கே உரியதாயிற்று!

1896-ம் ௵ மேமீ 28௳ வெளிவந்த "நேச்சர்" (Nature) என்ற சாஸ்திர உயர்தரப் பத்திரிகையும், ஜூலைமீ 25௳ வெளிவந்த "கெமிஸ்ட் அண்டு டிரகிஸ்ட்" (Chemist and Druggist) என்ற உயரிய சஞ்சிகையும் சர் ராயின் அரிய ஆராய்ச்சிபற்றிப் புகழ்ந்து, அநேக ஏடுகளில் மதிப்புரை எழுதின. மேலும் ரசாயன சாஸ்திரத்தில் பெயர்பெற்ற சர் ஹென்ரி ராஸ்கோ, பெர்தலெட் என்பவர்களும் சர் ராயின் புதிய ஆராய்ச்சிக்கு மகிழ்ந்து, அன்புடன் அதை வரவேற்றனர்.

பின்பு 1904-ல் பாஷாண திராவகத்தில் (Nitric Acid) கரைந்தோடிப்போகும் உலோக சம்பந்தமானவைகளைக் கண்டு வெளியிட்டார். இதனை யறிந்த "கெமிக்கல் சொசைட்டி" என்ற சஞ்சிகை

சர் ராய் அவர்களைப் பெரிதும் புகழ்ந்து மதிப்புரை எழுதிற்று. புரோபசர் டைவர்ஸ் (Prof. Divers, P. R. S.) என்ற மேதாவியும் போற்றிப் புகழ்ந்தார்.

1907-ல் ரசமும், வெள்ளி உலோகமும் சம்பந்தப்பட்ட வகைகளிலுண்டான புதிய வஸ்துக்களை ஆராய்ந்து வெளியிட்டார். இவ்வாறாக வெகு கொஞ்ச காலத்திலேயே பாஷாண உப்பு (Nitrate) சம்பந்தமான 80 புதிய ஆராய்ச்சிகள் செய்து வெளியிட்டார். மற்றொரு முக்கியமானதோர் புதிய ஆராய்ச்சியையும் செய்து உலகத்தை மகிழ்வித்தார். நவசார உப்பு (Ammonium Nitrate) உண்டாக்குவதையும், அது தானாகக் காற்றில் கரைந்து மறைந்து போவதையும்பற்றிய புதிய வகையையும் கண்டுபிடித்தார். 1912 ஜூன் 6வ டாக்டர் வி. எச். வேலி என்பவர் சர் ராயின் அரிய அற்புத ஆராய்ச்சிகளைப் புகழ்ந்து கூறியதாவது: "அவர் (சர் ராய்) ஆரிய ஜாதியின் புகழ்பெற்ற பிரதிநிதியாக யிருக்கிறார். இத் தேசம் (இங்கிலாந்து) பாழடைந்து கிடந்தபோது ஆரிய ஜாதியினர் (இந்தியாவில்) உயரிய நாகரீகமடைந்து, அநேக ரசாயன வஸ்துக்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். சர்வகலாசாலைப் புத்தகங்களில் குறிப்பிட்டிருப்பது தவறு என்று புரோபசர் ராய் நவசார உப்புகளைத் தொடக்கூடிய படிகங்களான தன்மையையும், பிறகு காற்றில் கரைந்து மறைந்துபோகும் தன்மையையும் அடையும் விதத்தையும் நிரூபித்திருக்கிறார்............"

இந்து ரசாயன சாஸ்திர சரித்திரம்.

சர் ராய் தமது புதிய ஆராய்ச்சிகளால் தனக்கும், இந்திய (வுக்கும்) உலகம் புகழக் கீர்த்தியைத் தேடி, இந்தியர்களுக்குத் தகுந்த சாவகாசமும், உற்சாகமும் கிடைத்தால், அவர்கள் எத்துறைகளிலும் நிபுணர்களாகத் திகழக்கூடுமென நிலைநாட்டியதோடாமல், இந்தியாவில் அக் காலத்தில் இந்துக்கள் ரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்திருந்ததை ஆராய்ந்து, தக்க ஆதாரங்களுடன் ஓர் பெரும சரித்திரமாக வெளியிட்டார். இப் புத்தகம் 15 வருஷங்களாக ஆராய்ச்சி செய்யப்பெற்று, 1902-ம் வருடத்தில் முதல் பாகம் வெளியிடப்பட்டது. அதில் ஆதியில் ஆயுர்வேத வைத்திய முறையிலிருந்து 1550-ம் ஆண்டுவரையிலும் இந்தியரின் ரசாயன சாஸ்திரப் பெருமையை விளக்கியிருக்கிறார். 13, 14-ம் நூற்றாண்டுகளில் இந்து ரசாயன சாஸ்திரக்காரர்கள் ஐரோப்பிய நிபுணர்களைவிட அதிகமான ஆராய்ச்சியுடையவர்களாகக் காணப்பட்டனர் என்றும் ருஜூச் செய்கிறார். இங்கிலாந்தில் டர்ஹாம் சர்வகலாசாலை 1912-ம் ஆண்டில் சர் ராய் அவர்களுக்கு டி. எஸ்ஸி. (D. Sc.) என்ற கௌரவப் பட்டம் அளிக்கப்பட்டபோது, அவர் எழுதிய அரிய சரித்திர நூலும் அங்குக் குறிப்பிடப்பட்டதுண்டு; புகழப்பட்டதுண்டு.

சர். ராயின் மாணாக்கர்களில் சிலர்

இவ்வாறு சர் ராய், சாஸ்திர ஆராய்ச்சிகளில் பெரும் புகழடைந்து இந்தியாவின் கீர்த்தியை உலகிடை நிலை நிறுத்தினாரென்பது வெள்ளிடை மலை. ஆனால் சர் ராய் தமது சாஸ்திர சக்தியால் ஆக்கிய மாணாக்கர்களின் ஆராய்ச்சிகளிலேயே மிகவும் ஆனந்தமும், மனப் பூரிப்பு மடைவார். இவரிடத்தில் மாணாக்கர்களாகவோ அல்லது கூட்டு ஆராய்ச்சி வேலைக்காரர்களாகவோ யிருந்தவர்களில் சிலரை இவண் குறிப்பிடுவோம்: யதீந்திரநாத சேன், பிரேமசந்த் ராயசந்த் (புசா வேளாண்மை சாஸ்திர நிலயத்துப் பேராசிரியர்), அடுல் சந்திர கங்குளி, ("ரிவேன்ஸா" கல்லூரியில் ரசாயன சாஸ்திர தலைமை யாசிரியர்) பஞ்சனன் நியோகி, காலஞ் சென்ற அடுல் சந்திர கோஸ் (லாகூர் டயால் சிங் கல்லூரியில் ரசாயன ஆசிரியர்), ரசிக்லால் தத்தர், நீல் ரத்தின் தார், மானிலால் டே, ஜே. சி. கோஸ். இவர்கள் அனைவரும் நூற்றுக் கணக்கான புதிய ஆராய்ச்சிகளை சர் ராயின் உதவியாற் கண்டுபிடித்திருக்கின்றனர். இவர்களில் ரசிக்லால் தத்தர் என்பவரே ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியில் கல்கத்தா சர்வ கலாசாலையால் முதலாவதாக டி. எஸ்ஸி. பட்டம் அளிக்கப்பட்டவர். புரோபசர் பஞ்சனன் நியோகிக்கு பி. எச்டி பட்டம் அளிக்கப்பட்டது. நீல் ரத்தின் தார் என்பவர் லண்டன் சர்வ கலாசாலையில் டி. எஸ்ஸி. பட்டம் பெற்றார்.

சர் ராய்க்குத் தமது மாணாக்கர்களின் வேலைகளைக் கண்டு மனப் பூரிப்பு அதிகம். வாலிப ஆராய்ச்சிக்காரர்களாலேயே இந்தியா தனது இழந்த பெருமைகளை மறுபடியும் அடைந்து உன்னத நிலைமைக்கு வரப்போகிறதென்று கனவுகள் பல காண்பார். சர் ராய் வாலிப மாணாக்கர்களுக்குக் காட்டிய பெருமையை அவர் கூறிய இரண்டே வரிகளிலிருந்து நன்கு புலனாகும்:— "மனிதர் எல்லாவிடத்திலும் வெற்றியைத்தான் விரும்ப வேண்டும், ஆனால் தங்களின் மாணாக்கர்களிடத்திலோ தோல்வி யடையத்தான் ஆசைப்பட வேண்டும்."

உபந்நியாச அழைப்புகள்

சர் ராய் மேனாடெங்கும் உபந்நியாசங்கள் செய்து கீர்த்தி பெற்றார். இந்தியாவிலும் பல கலாசாலைகளிலிருந்தும் மகாநாடுகளிலிருந்தும் அழைப்புப் பத்திரங்கள் சதா வந்து குவிந்துகொண்டே

யிருக்கின்றன. சர் ராயின் மகிமைப் பிரதாபத்தைக் கண்டு 1918 பிப்ரவரி மாதத்தில் சென்னை சர்வ கலாசாலை அதிகாரிகள் அவரை, "பண்டைக்கால இந்துக்களின் ரசாயன சாஸ்திரம்," என்ற விஷயம் பற்றி அநேக சொற் பொழிவுகள் செய்வதற்கு அழைத்திருந்தார்கள். சர் ராய் செய்த உபந்நியாசங்களுக்கு அளித்த தொகையை சென்னை சர்வ கலாசாலையிலேயே ரசாயன ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வருஷா வருஷம் பரிசு தரும்படி கொடுத்துவிட்டுச் சென்றார்.

1920 பிப்ரவரியீ கூடிய 'இந்திய சாஸ்திர' மகா நாட்டில் தலைமை வகித்தார். இங்கே வாலிபர் முன்னேற்றத்தைக் குறித்து கூறும்பொழுது அவர்கள் சிந்திக்கும்போதும் சாஸ்திரீயக் கொள்கை யுடன் சிந்தனை செய்ய வேண்டு மென்றும், எதையும் திடீரென்று நம்பிவிடாமல் விடாமுயற்சியுடன் காரணங்களைக் கண்டு அதின் உண்மையைத் தேடவேண்டு மென்றும் வெகுவாகப் பேசி யிருக்கிறார்.

1926 நவம்பரில் மைசூர் சர்வ கலாசாலையில் பட்டமளிப்பு விழாவிற் சொற்பொழிவாற்ற சர் ராய் அழைக்கப்பட்டிருந்தார். இவர் எங்கு சென்றாலும் மாணவர்களுக்குப் புதிது புதிதாக வேதனுஞ் சில கூறும் ஆற்ற லுடைத்தா யிருந்தார். சிறு பிராயத்தி லிருந்து மாணாக்கர்கள் ஆங்கிலத்திலேயே எழுதவும், படிக்கவும், சிந்திக்கவும் ஏற்பட்டு தங்கள் சுய பாஷைகளை மறக்க ஏற்படுகிறது. மேலும் எல்லா படிப்பு வகைகளையும் அவரவர் பாஷைகளால் ஆராயாது போகவே தற்போது நம் பாஷைகளில் தகுந்த சகல பதங்களிருந்தும் இல்லையெனக் கெம்பீரத்துடன் கூறி ஆங்கிலத்தையே கைக்கொள்ளுகின்றன ரென்று வருந்தி உரைத்திருக்கிறார். சர் ராய் தலைமை வகித்துப் பேசிய இடங்கள் யாவுங் கூறவேண்டுமாயின் அதற்கென பல புத்தகங்கள் எழுதப் பெறவேண்டும்.

சமுதாயச் சீர்திருத்தங்கள்

சர் ராய் உலகத்தில் தோன்றிய ரசாயன சாஸ்திரிகளில் ஒப் புயர்வற்றவரா யிருந்தாலும், தமது ஆராய்ச்சிகளிலேயே கண்ணுங் கருத்துமாய்க் கவன முழுவதையுஞ் செலுத்தியிருப்பா ரென்று கருத வேண்டாம். அவருடைய உண்மைத் தேசாபிமானத்திற்கு எல்லை யில்லை; எவரும் ஈடாகார். சர் ராய்—சாஸ்திர நிபுணர், உண்மைத் தேசாபிமானி—சமூக சமுதாய சீர்திருத்த வாதி. 1917-ல் கல்கத்தாவில் கூடிய, "இந்திய தேசிய சமுதாயச் சீர் திருத்த மகா நாட்டில்" தலைமை வகித்தபோது அவராற்றிய சொற்

பொழிவு ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. அதன் சாரம் வருமாறு:—

"............"சுயராஜ்யம்" அல்லது சுதந்திரத்தின் எதிரொலி யானது தேசத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை குமுறி ஓடிக்கொண் டிருக்கும்போது—ஜனங்களில் ஒவ்வொரு பகுதியின ரும் ஆவலுடன் தேசிய சீர்திருத்தங்களுக்கான உபாயங்களை ஆராய்ந்து முடிவு கட்டிக்கொண் டிருக்கும்போது—'ஒன்றுபட்ட இந்தியா'வின் பிரமாண்டமான கனவு நமது நினைவைச் சதா சூழ்ந்துகொண் டிருக்கும்போது நமது தேசச் சமூகங்களில் பல கோபத்துடன் பலமாக எதிர்த்து வருவதை நாம் மறைத்துவைக்க முடியாது. சமாதானமும், சவகாசமு மிருக்கவேண்டிய திருக்க ஏன் இந்தக் கோரமான கூக்குரல் இருக்க வேண்டும்?............"

பிறகு தீண்டாமையைப்பற்றிப் பின் வருமாறு பேசியிருக்கிறார்: "............ஜப்பான் தேசத்தில் 1871-ல் முடியக்கூடியதா யிருந்த காரியம் இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில்கூட முடியாமல் போய்விட்டது. இப்பொழுதும் 12 இராஜபுதனத் தார்களுக்கு 13 சோற்றுப் பானைகள் வேண்டும்! 500 காங்கிரஸ் காரர்களுக்கு 500 துண்டடுப்புகள் வேண்டும்!! இதையே தென் னாட்டிலுள்ள நமது சகோதரர்களிடத்தில் காண்கிறோம். இவர் கள் ஒரு பஞ்சமனை வெகு தூரத்தில், தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் கண்டாலும் அவர்கள் சமைத்த சாதம் தீண்டப்படாம லாகிவிடுகிற தென அவ்வளவு தூரம் நுட்பமாகக் கருதுகிறார்கள்!.............. ஒரு பறையன் உங்கள் வீட்டுக்கு முன் நடந்து சென்றால் அவ் வளவில் கையிலிருக்கும் தண்ணீர் குடத்தையும் (அதிலுள்ள தண்ணீர் தீண்டத் தகாதென்று) எறிந்துவிடுகிறீர்கள். ஆனால் தீண்டப் படாதவர்களால் செய்யப்படும் 'லெமனேட்' முதலியவை களைப் பின் வாங்காமல் வாங்கிப் பருகிவிடுகிறீர்கள்! நகர மண்ட பத்தில் பகிரங்கமாக விருந்து வைத்து, அவ் விருந்து மேனாட்டு ஹோட்டல் கம்பெனியார்களால் செய்து வைக்கப்பட்டாலும் இந்து மதத்தில் உயர்ந்த ஜாதியார்கள் அதில் கலந்துகொள்வ தோடும் அவர்கள் பெயர்கள் பத்திரிகைகளில் பகிரங்கமாக வெளி யிடவும் படுகின்றன. ஆனால் அவர்கள் கலியாணத்திலோ மற்ற எந்தச் சடங்குகளிலோ ஒரு கிறிஸ்தவர் அல்லது முஸ்லிம் அல்லது தாழ்த்தப்பட்ட இந்து இவர்களோடு உட்கார்ந்து சம பந்தி போஜ னஞ் செய்தால் குற்றவாளிகளாம். சில சமயம் அவர்களைத் தங்கள் இனத்தோடு சேர்த்துக்கொள்ள மறுத்துப் பயமுறுத்து கின்றனர். பகுத்தறிவு, காரண காரியம் ஆராயுந் தன்மை இவை களை யெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிடுகின்றனர்!..............."

1925-ம் வருஷம் ஏப்ரல்மீ கல்கத்தாவில் கூடிய ஹிந்து மகா சபையின் வரவேற்புக் கழகத் தலைவரா யிருந்து, ஹிந்து மதத்தின்

கெட்ட பழக்க வழக்கங்களை யொழிக்கும் மார்க்கம் தேடியிருக்கிறார்.

பொது ஜன சேவையில் பின் வாங்காது உழைத்து வந்திருக்கிறார். குல்னா (வங்காளம்) ஜில்லாவில் பஞ்ச மேற்பட்டபோது இரவும் பகலும் அரும் பாடுபட்டுக் கஷ்ட நிவாரணஞ் செய்திருக்கிறார். அது ஒன்றுமட்டுமல்ல. இன்னும் அநேக தடவைகளில் இது போன்ற பல ஊழியங்களில் தளராது தலையிட்டு வேலை செய்திருக்கிறார்.

தேசப் பற்று.

சர் ராய் தமது தேசம் சுதந்திரம் பெற்றுக் கீர்த்தியுடன் விளங்கவேண்டுமென்று அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. வங்காள கவர்னர் சர் வில்லியம் வெட்டர் பர்ன் என்பவரின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் பேசும்போது:

“இந்தியாவை இங்கிலாந்து ஏன் அரசாட்சி செய்கிறதென்றால் பிரிட்டனின் பெயர் பிரபலமடைவதற்காக அல்ல; இந்தியாவின் செல்வாதாரம் சீர்பெறுவதற்குமில்லை. இந்தியர்கள் தங்களைத் தாங்களே சுதந்திரமாய் ஆண்டுகொள்ளப் பழக்குவதற்கே யாகும். இதை மறந்து, இதர சுய நன்மையிலோ, சீர்திருத்தத்திலோ வேலை செய்வதில் இந்த முடிவான காரியம் கைவிடப்பட்டால், பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் தனது உண்மையான குறி தவறிப்போய் அபகீர்த்தியடையுமென்பதில் ஐயமில்லை. அன்றியும் அதன் சரித்திரத்தில் பெரும் வேலைகள் செய்திருந்தும் பிரமாண்டமான தோல்விகளே குறிக்கப்பட்டுவிடும்............” என்று மிக்க ஆர்வத்துடன் சுதந்திரம் ததும்பக் கூறியிருக்கிறார்.

சர்க்காவிலும், கதரிலும்தான் இந்தியாவின் முன்னேற்றமிருக்கிறதென்னும் நம்பிக்கை மகாத்மா காந்திக்கு இரண்டாவதாக சர் ராய் அவர்களுக்கே உண்டு என்பதை எவரும் எளிதி லறியலாம். தேசியச் சாமான்களில் இவருக்கிருக்கும் பெரும் அபிமானத்தைக் கண்டு, ஏறக்குறைய ஒவ்வொரு ஆண்டிலும் கதர் காட்சிசாலை எங்கெங்கு கூடினாலும் அங்கெல்லாம் அவரே தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார். 1924 டிசம்பர்மீ காக்கினாடாவில் கூடிய கதர் காட்சிசாலையில் தலைமை வகித்துக் கதரினால் பொருளாதாரம் சீர்பெறுவதைப் பின்வருமாறு இயம்பினார்: “.........இந்தியாவின் ஜனத் தொகையை ஏறக்குறைய 32 கோடியென்று எடுத்துக் கொண்டால், லார்டு கர்சான் கணக்குப்படி எல்லோருடைய வருஷ

வருமானமுஞ் சேர்ந்து மொத்தத்தில் 960 கோடி ரூபாயாகும். இப்பொழுது நான்கிலொரு பாகமான ஜனங்கள்மாத்திரம் தினம் 2 மணி நேரம் நூல் நூற்றால் தேசத்திற்கு வருட வருமானம் 90 கோடி ரூபாய் அதிகமாகும். இது தறி செய்தல் முதலிய இதர கைத்தொழில்க ளெல்லாமல் நூல் நூற்பதினால் மட்டுமே. இதனால் துணிகள் வாங்க 60-லிருந்து 70 கோடி ரூபாய்கள் வருடா வருடம் நமது தேசத்திலிருந்து அந்நிய நாட்டுக்குக் கடந்து போகாமல், நமது தேசத்திலேயே யிருந்து, நமது அரைப் பட்டினியாயிருக்கும் பயிரிடுவோர்களின் இரத்தத்தைப் பலப்படுத்தி உயிர் உண்டாக்கி தனவந்தர்களாக்கலாம்............”

சர் ராயின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு, சர்க்கா (கைராட்டை) அங்கே குடிகொண்டுவிட்டது. சர்க்கா சுழன்றாடுஞ் சப்தத்தைக் கேட்டு சங்கீதமெனக் கொண்டு, புளகாங்கிதமடைவார். அவர் உள்ளத்தைப் பிளந்து பார்த்தால், அங்கு வேறொன்றும் இராது, சர்க்காதான் சதா சர்வ காலமும் சுழன்றாடுவதைக் காணலாம்!

சில அரிய குணங்கள்.

சர் ராய் இதுவரை மணம் செய்துகொள்ளாது பிரமச்சாரியாகவே யிருக்கிறார். ஏகாந்த வாழ்க்கை! எளிய ஜீவனம்!! ஆகவே அவரது சம்பாதியத்திற்கு அதிகச் செலவில்லாமல் போகவே ஆசிரிய பதவியிலிருந்தும், வங்காள ரசாயனக் கைத்தொழில் நிலையத்திலிருந்தும் வரும் பெரும் தொகையை ஏழை மாணாக்கர்களுக்கும், தர்மசாலைகளுக்கும் மனமுவந் தளித்துவருகிறார். இவர் சுமார் 55 வருஷ காலமாக அஜீரண வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்தினாரெனினும் காரிய சாதனையைக் கைவிட்டதே யில்லை. இவர் ஒரே சமயத்தில் ஒரே காரியந்தான் செய்வார். அக்காரியம் முடிவுறும்வரை இரவு பகல் பாடுபடுவார்; ஓய்வு கருதார்; சோம்பியிரார். இவரால் ஒரே சமயத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் படிக்கமுடியாது. அதுவும் அதிகாலையிலேதான் படிப்பார். அவ்வாறு குறைவான நேரம் படித்தாலும் தமக்கு வேண்டிய சாரத்தை வேண்டிய அளவுக்குச் சுலபமாக கிரகித்துக்கொள்ளும் தன்மை வாய்ந்திருக்கிறார்.

1920 ஆகஸ்டில் நடந்த [illegible] சட்ட சபைத் தேர்தலுக்கு சர் ராயை அபேக்ஷகராக நிற்கும்படி பலர் வேண்ட, அதற்கு அவர்: “இந்தியாவில் 30 ரசாயன சாஸ்திர நிபுணர்கள் உண்டாகிவிட்டால், நான் என் வேலையை அவர்களின் கையிலே கொடுத்துவிட்டு சட்ட

நிருவாகத்தில் இறங்கச் சம்மதிப்பேன்" என்று ஆர்வமுடன் கூறியிருக்கிறார்.

சர் ராய் வெகு சாதாரண வாழ்க்கையைக் கைக்கொண்டு, மாணாக்கர்களிடம் நற்குணம், நற்செய்கை, கல்வியினாசை முதலியவைகள் உண்டாக நெருங்கிப் பழகிவந்தார். அவர் எளிய வாழ்க்கையில் உயர்ந்த ஞானத்தைக் கண்டவர். சில அடுக்குப் புத்தகங்களும், வெகு தொன்மை வாய்ந்த—பார்ப்பதற்கு அருவருப்பையுண்டாக்கக்கூடிய மெத்தையும், 18-ம் நூற்றாண்டு மேஜையும், வெகுநாள் கடந்த சில நாற்காலிகளுமே அவருக்குச் சொந்தமான பொருள்கள். சர் ராய் இங்கிலாந்துக்கு மூன்று தடவை போய் வந்தும் அங்குள்ள நாகரீகத் தடபுடலில் சிக்கிக்கொள்ளவேயில்லை. அவ்ருடைய உடை வெகு சாதாரணமானது. அவருடைய தோற்றத்தைப்பற்றி அவருக்கு அதிகம் கவலையேயில்லை. சில சமயம் சர் ராயின் புகழைக் கேட்டு, அவரைப் பார்த்துச் செல்ல ஆவலுடன் வருவோர், அவர் பக்கத்தில் சென்றும் அவரைச் சிறிதளவும் கண்டுகொள்ள முடியாத அவ்வளவு சாதாரண மனிதராகத் தோன்றுவார்.

யாருடனும் எக் காரியத்திலும் ஒருமனப்படாவிட்டாலும் அவர்கள்மீது எவ்வித வெறுப்புங் கொள்ளமாட்டார். அவர்களைக் குற்றஞ்சாட்டி, அவர்கள் பெயர்களைக் கெடுக்க ஒருபோதும் இணங்கமாட்டார். எக் காரியத்திலும் பகிரங்கமாகவே தமது பெருமையையும், சிறுமையையும் காட்டுவார்.

சர் ராய் தமது சிநேகிதர்மீது வெகு பிரியமுள்ளவர். அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி சர்க்கரை அப்பம் அருந்தச் செல்லுவார். சர் ஜெகதீஸ் சந்திர போஸ், டாக்டர் நீல் ரத்தின் சர்க்கார் இவர்கள் போன்றார் வீடுகளுக்கு அடிக்கடி போஜனம் அருந்தச் செல்லுவார். தினந்தோறும் மாலையில் மூன்று மணி நேரம் வெளியில் உலாவத் தனது சிநேகிதர்கள் புடைசூழச் செல்லுவது வழக்கம். நன்றாய் உலாவியபின், நல்லதோர் புற்றரையில் இயற்கை தேவியின் பராமரிப்பிலே வீற்றிருந்து, தமது சிநேகிதர்களோடு உல்லாசமாய் வார்த்தைகளாடி, இந்தியாவுக்காகவே வாழ்ந்து வருபவரா யிருக்கிறார்.

ஸூபிங்-சிங்-லிங்

(டாக்டர் சன்-யாட்-சன் மனைவியார்.)

காளீஸ்வரனின் காதலி.

"ஆனந்தா."

மாலை நேரம். டாக்டர் காளீஸ்வரன் எம். பி., பி. எஸ். தனது அறையில் உல்லாசமாய் உட்கார்ந்திருந்தான். அவனுடைய இளமை தாண்டவமாடும் முகத்தில் ஒருவித மகிழ்ச்சி பொங்கிக்கொண்டிருந்தது. காதலின் ஆனந்தபரிசம் பெறும் பாக்யம் பெற்றால் கேட்கவும் வேண்டுமோ? கடந்துபோன துக்கங்களையும், வரப்போகும் வியாகூலங்களையும் சதா நினைந்துநினைந்து தற்போதைய இன்ப நாட்களையும் பாழாக்கிக்கொள்ளும் மூட மனிதனின் ஹிருதயத்தைக் காதல் ஆலிங்கனஞ் செய்துகொண்டால் காதலியைத் தவிர வேறு சிந்தனை யேது? ஆ! என்ன ஆனந்தம். அந்த ஆனந்தத்திலேதான் காளீஸ்வரனும் மூழ்கிக் கிடந்தான்.

காளீஸ்வரன் கையில் ஓர் அழகிய யுவதியின் உருவப் படம் இருந்தது. அப் படத்தின் கண்களோடு காளீஸ்வரன் மௌன சம்பாஷணை செய்துகொண் டிருந்தான். அவ்வுருவம் உயிர் பெற்றுத் தன்னை சங்கோசத்தோடு நோக்குவதைப் போல நினைத்தான். நினைக்கவே தன்னை யறியாது அந்தப் படத்தை ஆவேசத்தோடு முத்தமிட்டான். உண்மையான உயிருள்ள உருவத்தையே முத்தமிட்டு அந்த மெல்லிய சிவந்த உதடுகளிலுள்ள அமிர்தத்தை உறிஞ்சி ஆனந்த பரவசமடைய அவாவினான். நெஞ்சு விம்மியது. அந்த அறையை அலங்கரித்துக் கொண்டிருந்த இதர பெரியார்களின் படங்கள் கண்களைச் சிமிட்டி ஏளனமாக ஏதோ பேசிக்கொள்வதைப் போல் தோன்றியது.

அறையின் நிசப்தத்தைக் குலைத்துக்கொண்டு சுவரிலிருந்த கெடியாரம் ஐந்து மணி யடிக்கத் தொடங்கிற்று.

காளீஸ்வரன் திடுக்கிட்டான். சரியாக ஐந்து மணிக்குக் காதலியின் தேநீர் விருந்துக்கு அழைப்பு வந்திருந்தது. காலத்

துக்கு முந்திப் போய்க் காத்துக்கொண் டிருப்பானேன். 'சுத்த பூல்' என்று நினைத்துவிடப் போகிறார்கள் என்றெண்ணிக் குறித்த நேரத்தில் புறப்படக் காத்திருந்தான்.

மணி யடிக்கவும், திடுக்கிட்டு எழுந்தான். வெளியே வாசலிற் காத்திருந்த 'மோட்டாரில்' குதித்து ஏறினான். தானே ஓட்டிக் கொண்டு காற்றாய்ப் பறந்தான்.

அடுத்த நிமிடம் 'பரமேஸ்வரி' விலாசத்தின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. 'பரமேஸ்வரி விலாசம்' ஓர் அழகிய சிறு பங்களா. முன்புறம் பல வர்ண 'குரோட்டன்' செடிகளும், செடிகளிடையே சில ஆசனங்களும் போடப்பட் டிருந்தன. அந்த ஆசனங்களில் காளீஸ்வரனின் காதலி 'பரமேஸ்வரி' சர்வாலங்கார பூஷிதையாய் நவீன நாகரீகத்திற்கு எல்லை யிவ்வளவுதான் என்று சொல்லும்படியாக உட்கார்ந்து, தம்பி சந்திரனோடும், தாய் பங்கஜம்மாளோடும் சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

காளீஸ்வரன் 'காரி'லிருந் திறங்கி 'கோட்' 'டை' 'கிராப்' முதலியவைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டு உல்லாசமாக உள்ளே புகுந்தான். காளீஸ்வரனைக் கண்டதும் பரமேஸ்வரியின் தம்பி சந்திரன் பட்டாளத்து சிப்பாயைப் போல எழுந்து நின்று, 'குட் ஈவினிங் டாக்டர்! வாருங்கள்!! உங்களைத்தான் 'எக்ஸ்பெட்' பண்ணிக்கொண் டிருக்கிறோம்'' என்றான்.

இச்சமயம் பங்களாவிலிருந்த கெடியாரம் மணி ஐந்து அடித்தது.

''வெரி வெரி பங்க்ஷுவல்!'' என்றாள் பரமேஸ்வரி புன் சிரிப்போடு.

காளீஸ்வரன் அந்த 'சர்டிபிகேட்'டை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டான்.

பங்கஜம்மாள்:—உட்காருங்கள், நீங்கள் வரவேண்டியதுதான் தாமதமாயிருந்தது. இன்று 'டீ' 'ஸ்பெஷலாய்' பரமேஸ்வரியே தயாரித்தாள்.

காளீஸ்வரன்:—'ரொம்ப சந்தோஷம்! இன்று நான் பாக்யசாலிதான்.' என்று புன்சிரிப்போடு பரமேஸ்வரியை நோக்கினான். இருவர் கண்களும் ஒன்றுபட்டன.

பரமேஸ்வரி:—நேற்று எங்கே போய்விட்டீர்கள்? கமலம் (பரமேஸ்வரி வீட்டு வேலைக்காரி) வீட்டுக்கு வந்து பார்த்தாளாம். நீங்கள் இல்லையாமே? என்று கேட்டாள். சந்திரன் (குறுக்கிட்டு)—

'எவனாவது ஒரு அப்பாவியைச் சொர்க்க லோகம் சேர்க்கப் போயிருப்பார்' என்றான்.

'ஆம்! ரோக நரகத்திலிருந்து லோக சொர்க்கத்துக்கு அனுப்பினேன். ஒரு ஆப்பரேஷன் செய்யப் போயிருந்தேன்' என்று சந்திரனுக்குச் சரியான பதிலளித்து விட்டதாகக் கெம்பீரமாய்ப் பரமேஸ்வரியை நோக்கினான் காளீஸ்வரன்.

சந்திரன்:—(உரத்த தொனியில்) 'டாக்டர்கள் இதர ஆப்பரேஷன்கள் செய்வதைப் பார்க்கிலும் பணப் பையை ஆப்ரேஷன் செய்வதில் நிபுணர்கள்? இல்லையா!' என்று சொல்லிச் சிரித்தான்.

இதற்குள் கமலம் 'எல்லாந் தயாராகிவிட்டது' என்று சொல்லவே எல்லோருஞ் சிற்றுண்டி யருந்தச் சென்றனர்.

* * * *

மேற் கண்ட சம்பவம் நிகழ்ந்த மூன்றும் நாள் வெளியே போயிருந்த காளீஸ்வரன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். ஆடைகளைக் களைந்து 'உஸ்' ஸென்று நாற்காலியில் உட்கார்ந்தான். 'முத்தா' என்று தன்னுடைய வேலைக்காரனைக் கூப்பிட்டான். அந்த வீட்டில் காளீஸ்வரனையும் வேலைக்காரன் முத்தனையும் தவிர வேறு ஒருவருங் கிடையாது. காளீஸ்வரனின் தந்தை இறந்து வெகு காலமாயிற்று. வயது சென்ற தாய்மட்டு முண்டு. அவளும் தன்னுடைய சகோதரன் வீட்டுக்குச் சென்றிருந்தாள். தாய் மாமனைத் தவிர வேறு நெருங்கிய உறவினர் காளீஸ்வரனுக்குக் கிடையாது.

'முத்தா' வென்று மீண்டுங் கூப்பிட்டான். பதில் இல்லை. எழுந்து நேரே சமையலறைக்குப் போனான். அறைக்குள் முத்தனும், பரமேஸ்வரியின் வேலைக்காரி கமலமும் பேசிக்கொண்டிருக்கும் சப்தங் கேட்டது. காளீஸ்வரன் என்ன பேசுகிறார்கள்? என்று மெதுவாகச் சென்று, வெளியிலிருந்தபடியே காதுகொடுத்துக் கேட்கத் தொடங்கினான். அவன் எதிர்பார்த்த இனிய காதல் சம்பாஷணைக்குப் பதிலாகப் பின்வருஞ் சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது.

முத்தன்.—வாஸ்தவமாகவா?

கமலம்:—நான் என்ன பொய்யா சொல்லுவேன்! அவர்கள் பட்டணத்தில் இருந்தபோது தாசிகளாய்த்தான் இருந்தார்கள். சந்திரனும் பரமேஸ்வரியும் சொந்தக் குழந்தைகளில்லை. ஸ்வீகாரப் பண்ணிக்கொள்ளப் பட்டவர்கள். ஏழைக் குழந்தைகள் என்று சொன்னார்கள்.

"பரமேஸ்வரியம்மா சதுர் கிதுர் ஆடப் போனதில்லையா?"

"உஹூம்! இல்லை. யாருக்காவது கல்யாணஞ் செய்துகொடுத்துவிட வேண்டுமென்றுதான் வளர்த்தார்களாம். படிப்பு கிடிப்பு ரொம்பச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்."

"பங்கஜம்மா தாசியாயிருந்தும், பரமேஸ்வரியம்மாவை மட்டும் ஏன் அப்படி வளர்த்தார்கள்? எனக்கென்னவோ இதை நம்ப முடியவில்லை."

"இப்போது பங்கஜம்மாகூட அந்தத் தொழிலை விட்டுவிட்டார்கள். நல்ல எண்ணம் உண்டாகாமலா விட்டிருப்பார்கள்?"

"உம்! பட்டணத்தில் தாசிகள் இருக்கக்கூடாது என்று விரட்டி விட்டதாக நீதானே சொன்னாய். அதனாலே ஒருக்கால் அத் தொழிலை விட்டிருக்கலாம்."

"அங்கே விரட்டிவிட்டால் இங்கே நடத்தக்கூடாதா? வேண்டாம் என்றுதான் விட்டுவிட்டார்கள்."

இச்சமயம் முத்தன் இருமிக்கொண்டு வெளியே வந்தானாகலால் காளீஸ்வரன் 'சரே'லெனத் தன் இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

சம்பாஷணையைக் கேட்டபோது காளீஸ்வரனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. தலையில் இடி விழுந்ததைப் போல் எண்ணினான். நாற்காலியில் 'தொப்'பென உட்கார்ந்து, தலையை இரண்டு கைகளாலும் தாங்கிக்கொண்டான். அப்படியே நெடுநேரம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

'என்னதான் விபசாரத் தொழிலை விட்டொழித்தாலும் குப்பைத் தொட்டியைப் போன்றிருந்த அந்த மாசு நிறைந்த மனம் பரிசுத்தமடையுமா? உண்மைக் காதலுக்கு அத்தகைய தன்மையிருந்தாலும், பரமேஸ்வரி கொண்டுள்ளது உண்மைக் காதல்தானா? அல்லது புதுமாதிரியான மாய வலையா? தாசிகள் அந்தப் பொறுப்பற்ற—ஒப்பாரா—சுதந்திர வாழ்க்கையை விடுத்துப் பொறுப்புள்ள குடும்ப பாரத்தை ஏற்று ஒழுகச் சித்தமாயிருப்பார்களா? சர்வாலங்கார பூஷிதைகளாய்ச் சிலைகளைப்போல நின்று, வருவோர் போவோரின் கழுகுப் பார்வைக்கு இரையாகி, குமரனோ, கிழவனோ, முடவனோ, மூக்கறையோ, எவனாயினுஞ் 'சரியே! பணம் பெற்றுத் தம்முடலை வாடகைக்கு விட்டு, அந்தச் சாண் வயிற்றை வளர்க்கும் ஈன வாழ்வை ஒழிக்க இசைவார்களா? இசைந்தாலும் இப்புது வாழ்வில் நிலைத்திருப்பார்களா? கேவலம் அவர்கள் சிற்றின்பப் பிரியர்களாகவும், காமப் பித்தம் பிடித்தவர்களாகவுமா இந்தத் துறையில் ஏன் இறங்குகின்றனர்? பொருளீட்ட வேறு துறைகள் இருந்தால் இதில் ஏன் கிடந்து உழல்கிறார்கள்? இந்த வாழ்க்கையில் அவர்களுக்கு உண்மையான இன்பமுண்டா? இன்பத்தை விலைக்கு வாங்க வரும் காமாதுரந்தரார்களின் முரட்டுக் கைகளில் பூப்போன்ற மெல்லிய உடலை ஒப்புவித்துப் படாதபாடெல்லாம் படுவதை அவர்களைக் கேட்டாலன்றோ தெரியும்?

இதையெல்லாஞ் சிந்தித்து, புத்திசாலிகளான விலைமாதர் ஏன் நேரிய துறையில் இறங்க இசையலாகாது? அப்படி இசைந்தவர்களில் பங்கஜம் அம்மாளும் ஏன் ஒருவளாய் இருத்தலாகாது? பரமேஸ்வரி விபசாரத்தில் ஈடுபட்டவளில்லை யென்றல்லவோ கேள்விப்பட்டேன். அது உண்மையாயிருக்குமா? தாசி வீட்டில் வளர்ந்தவளுக்குக் காதல் உண்டாகுமா? என் இன்பத் துன்பங்களில் இணை பிரியாதிருப்பாளா? ஆ! இதையெல்லாம் அவளிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அவள் தாசி! தாசி!! அந்தோ தாசி!!! ஆழம் பாராது படுகுழியில் வீழ்ந்துவிட்டேனே! மோசம் போனேனே! ஆ! நெஞ்சே!' என்று காளீஸ்வரன் பலவாறு எண்ணி யெண்ணி, மனம் நைந்துகொண்டிருந்தான்.

அன்றிரவு உணவு கொள்ளாமல், முத்தனை வெளியே யனுப்பிவிட்டு, அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு, சிறிது நேரம் இங்குமங்கும் உலவுவதும், சிறிது நேரம் உட்கார்ந்து சிந்திப்பதுமாயிருந்தான். நடுநிசி. மணி 12 அடித்ததையும் அவன் கவனிக்கவில்லை.

மறுநாள் காலமே, பரமேஸ்வரி வீட்டு வேலைக்காரி, காளீஸ்வரனைக்கண்டு ஒரு செய்தி சொல்ல வந்தபோது, வீடு பூட்டப்பட்டிருந்தது. "எங்கேயாவது வெளியே போயிருக்கலாம்" என்று நினைத்து மாலையில் வந்து பார்த்தாள். அப்போதும் பூட்டியே கிடந்தது. அண்டை வீட்டாரிடம் விசாரித்தாள். "நமக்கொன்றுந் தெரியாது" என்று பதில் கிடைத்தது. இரண்டு நாட்கள் கழிந்தன; மூன்று நாட்கள் சென்றன; ஒரு வாரமும் பூர்த்தியாயிற்று; வீடு திறக்கப்படவுமில்லை. காளீஸ்வரனோடு முத்தனையுங் கூடக் காணோம். பங்கஜம்மாளுக்கும் பரமேஸ்வரிக்கும் கவலையுண்டாயிற்று. 'எங்களிடந் தெரிவிக்காமற் போகும் வழக்கமில்லையே! எங்கே போயிருக்கலாம்?' என்னும் மனோவேதனை அதிகரித்தது. இவர்கள் எல்லாரையும்விட அதிகமாக வேலைக்காரி கமலம் மனம் நொந்தாள். யாருக்காக? காளீஸ்வரனுக்காகவா? இல்லை; தன் அருமை முத்தனுக்காகவே அவள் கவலைப்பட்டாள். சதா பூட்டிக் கிடக்கும் வீட்டைத் தினசரி போய்ப் பார்த்து வருவாள்.

பரமேஸ்வரியும் பங்கஜம்மாளும் காளீஸ்வரனின் சுற்றத்தாரிடமெல்லாம் விசாரித்தனர். அவர்களும் காளீஸ்வரன் மறைந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டனர். சகோதரன் வீட்டிலிருந்த காளீஸ்வரனின் தாய் 'ஓ' வென்று அழத் தொடங்கினாள். 'உங்களுக்குப் புண்யமாய்ப் போக, என் பிள்ளையைத் தேடுங்கள்' என்று பங்கஜம்மாளிடமும் தன் சகோதரனிடமும் வேண்டிக்கொண்டாள்.

நாட்கள் நிற்குமா? ஒரு மாதம், இரண்டு மாதம் இப்படி ஆறு மாதங்களும் கடந்தன. காளீஸ்வரனைத் தேடாத இடமில்லை. துப்பறிபவர்கள் கூடத் துப்புத் துலக்க முடியவில்லை. போனவன் போனவன்தான்.

தாய் ஒரு பக்கங் கண்ணீருங் கம்பலையுமாய்க் கிடந்தாள். பரமேஸ்வரியோ முகப் பொலிவிழந்து, மெலிந்து காணப்பட்டாள். ஆகாரம் வேளா வேளையிற் புசிப்பதில்லை. ஆடையிற் கவனஞ் செலுத்துவதில்லை. படுக்கையில் இரவும் பகலும் புரண்டு கொண்டே கிடந்தாள். பங்கஜம்மாள் எவ்வளவோ ஆறுதல் சொல்லியும் பயனில்லை.

ஒரு நாள் காலை கமலம், பரமேஸ்வரியிருந்த அறைக்குள் வந்தாள். பரமேஸ்வரி தலைவிரி கோலமாய்ப் படுக்கையில் குப்புறக் கிடந்தாள்.

'அம்மா! அம்மா!!' என்றாள் கமலம். பதிலேயில்லை.

'அம்மா! டாக்டர் வீடு திறந்திருக்கிறது' என்றாள் மறுபடியுங் கமலம். அசைவற்றிருந்த பரமேஸ்வரியின் முகம் கமலத்தின் பக்கம் திரும்பிற்று; அதின் உதடுகளும் சற்றே அசைந்தன.

'வீடு திறந்திருக்கிறது. யாரோ ஒருவர் வந்திருக்கிறார்' என்றாள் கமலம் தயங்கித் தயங்கி.

அடுத்த நிமிஷம் பரமேஸ்வரி பாய்ந்தெழுந்து, பிசாசு பிடித்தவளைப் போல் கமலத்தின் குறவளையைப் பிடித்தாள்.

'என் காளீஸ்வரன் இருக்கிறானா? அதைச் சொல்லடி சொல்!' என்று சீறி விழுந்தாள்.'

கமலம் நடுநடுங்கிக் கொண்டே 'அவர் இல்லை! அவர் இல்லை!! அவர் ஒரு மிராசுதாருக்குக் கடன்தர வேண்டுமாம். அதற்காக அந்த மிராசுதார் அவரது வீட்டை ஜப்தி செய்திருக்கிறார்' என்றாள்.

பற்களைக் கடித்துக்கொண்டு கமலத்தைப் பிடித்துத் தள்ளினாள் பரமேஸ்வரி.

'பொத்'தெனக் கமலம் தரையில் விழுந்தாள்.

'போடி போ, வெளியே! இதைச் சொல்லத்தானா இங்கு வந்தாய்?' என்று கடிந்தாள் பரமேஸ்வரி.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. பங்கஜம்மாளுக்குப் பரமேஸ்வரியின் நிலைமை வியாகூலத்தை உண்டுபண்ணியது. பரமேஸ்வரி, ஒரு நல்ல வரனை மணந்து சுகித்திருக்க வேண்டுமென்பது பங்கஜம்மாளின் விருப்பம். ஆனால் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் மறைந்துபோன—உயிரோடு இருக்கிறானோ, இல்லையோவென்றுகூடத் தெரியாத ஒருவனையே கருத்தில் இருத்திக் கொண்டு வாணாளை வீணாளாக்கிக் கொள்ளுவது பிடிக்கவில்லை. காளீஸ்வரன் வீட்டைக் கடனுக்காக ஜப்தி செய்துகொண்ட மிராசுதாரை விசாரித்ததில், காளீஸ்வரன் ஏராளமான கடன் பட்டிருந்தானென்று தெரிய வந்தது. இதைக் கேட்டு காளீஸ்வரனின் தாய் அடைந்த துக்கத்துக்கு அளவேயில்லை.

பரமேஸ்வரியின் தாய் பங்கஜம்மாள் அந்த மிராசுதாரிடம் இரண்டொரு முறை சம்பாஷித்ததிலிருந்து மிராசுதாரும் பங்கஜம்மாள் பங்களாவுக்கு வரத் தலைப்பட்டார். அவர் முறுக்கிவிட்ட மீசையும், விளிம்புகளுள்ள மூக்குக் கண்ணாடியும் உடையவர். அவருடைய முதல் தாரம் இறந்துவிட்டதென்று கேள்விப்பட்ட பங்கஜம்மாள் அவரைப் பரமேஸ்வரிக்கு அறிமுகப்படுத்த விரும்பினாள். ஆனால் பரமேஸ்வரிக்கோ அன்று முதல் ஜுரங் கண்டுவிட்டது. பாயும் படுக்கையுமானாள். எழுந்திருப்பதேயில்லை.

இவ்வாறாகச் சில நாட் கழிந்தன. மிராசுதாரிடமிருந்து பரமேஸ்வரிக்காகப் பரிசுகள் வரத் தொடங்கின.

காளீஸ்வரன் என்ன ஆனானோ யார் கண்டார்? பங்கஜம்மாள் மிராசுதாரின் பரிசுகளை மிகவும் பெருமையோடு ஏற்று பரமேஸ்வரிக்குச் சமர்ப்பித்து மன்றாடினாள். 'ஒரு மிராசுதாரை இவ்வளவு சீக்கிரத்தில் மயக்கித் தன் வழிக்குக் கொண்டுவந்து விட்டோமே' என்று பங்கஜம்மாள் பெருமைப் பட்டும் பரமேஸ்வரி அதை அலக்ஷியம் செய்வதைக் கண்டு மனம் சகிக்கவில்லை. பரமேஸ்வரி அப் பரிசுகளை ஏறெடுத்தாகிலும் பார்த்தாளா?

'அடி பரமேஸ்வரி! என் நெஞ்சம் இப்படிப் புண்படவா உன்னை வளர்த்தேன். உன் புத்தி ஏனோ இப்படிக் கெட்டுப் போய்விட்டது? இந்த மிராசுதார் உனக்குக் கிடைக்கக் கூடியவரா? யார் செய்த புண்ணியமோ இவ்வளவு எளிதில் ஒரு பெரிய பறவை நமது வலையில் வலியச் சிக்கியிருக்கிறது! இப் பரிசுகளையெல்லாம்

அனுப்பும் அவருக்கு என்ன பதிலளிப்பேன்? நீ இப்படி யாகிவிடு வாய் என்று நான் கனவிலேனும் எண்ணினேனா? எழுந்திரு! நான் சொல்லுவதைக் கேள்!' என்று பங்கஜம்மாள் உபதேசம் செய்தாள்.

பரமேஸ்வரியின் நிலை படு மோசமாகி விட்டது. ஒரு பக்கட காளீஸ்வரனின் பிரிவாற்றாமை! மற்றொரு பக்கம் தாயாரின் ஹிம்சை! இருதலைக் கொள்ளி எறும்புபோல் துடித்தாள்.

ஒரு நாள் மாலை பரமேஸ்வரி தன் அறையில் நின்றுகொண்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண் டிருந்தாள். பார்வை மாத்திரம் வெளிப் பக்கம் இருந்ததே யொழிய கண்கள் ஒன்றையுங் கவனிக்கவில்லை. கண்களில் ததும்பிநிற்கும் நீர்த்துளிகளைத் துடைப் பதைப்போலக் காற்று 'விர்'ரென வீசி உலர்த்திக்கொண் டிருந்தது. அனல் பட்ட ரோஜாவைப் போல் வதங்கி யிருந்த அவளது கன் னங்களின் வனப்பைக் கண்டு 'அந்தோ! இவைகளிலுள்ள தேன் வீணாய்ப் போகின்றதே! அனுபவிப்பார் எவரு மில்லையா? நானாவது சிறிது அனுபவித்துக் கொள்ளுகிறேன்! என்பதைப்போல் ஒரு குறும்புத்தன முள்ள ஈ எவ்வளவு விரட்டியும ஓடிப் போகாமல் அவளது செவ்விய உதடுகளில் உட்கார முயன்றுகொண் டிருந்தது.

அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. மிராசுதார் உள்ளே வந்தார். பரமேஸ்வரி அவரைக் கவனிக்கவில்லை. விர லால் இலேசாகக் கதவை 'டொக் டொக்' என்று தட்டினார்.

பரமேஸ்வரி திரும்பினாள். பார்த்ததும் திடுக்கிட்டாள். 'எதற்காக இங்கு வந்திருக்கிறார்? வீட்டில் யாரும் இல்லாதபோது ஏன் வரவேண்டும்? ஒன்றும் தெரியவில்லையே?' என்று பரமேஸ் வரியின் மனம் என்னென்னவோ நினைத்தது.

மிராஸ்தார் கெம்பீரமாய் முறுக்கிவிட்ட மீசையுடன் மூக்குக் கண்ணாடி முகத்தினராய் இமைகொட்டாது பரமேஸ்வரியை நோக்கி நின்றுகொண் டிருந்தார்.

மிக்க விநயமாய்:—'பங்கஜம்மாள் எங்கே?' யென்று தொடங்கி னார் பேச்சை.

பரமேஸ்வரி:—'இங்கே யில்லை! உங்களை என் அறைக்குள் யார் வரச்சொன்னது?' என்று வெறுப்போடு கேட்டாள்.

புன்சிரிப்போடு மிராசுதார் கூறுவார்: 'நானாகத்தான் வந்தேன்.'

'வீட்டில் எவரும் இல்லாதபோது எப்படி வரலாம்?''

'என் வீட்டைப்போல் பாவித்துக்கொள்ளச் சொல்லியிருக் கிறார் பங்கஜம்மாள்.'

டாக்டர் சன்-யாட்-சன்.

'வெளியே போம்!'

(கீழுதட்டைக் கடித்துக்கொண்டு கூர்ந்து நோக்கி) 'அந்த மெல்லிய கைகளால் தள்ளினல்தான் போவேன்.'

(கோபங்கொண்டு) 'அதிகமாய்ப் பேசாதீர்! வெளியே போம்!'

'அந்த உயிரற்ற ஜன்னலின் கம்பிகளைத் தழுவிப் பிடித்திருந்தாயே, அம்மாதிரி என்னைப் பிடித்தாலென்ன?' என்று சொல்லி, ஓரடி எடுத்துவைத்தார்.

பரமேஸ்வரியின் ஹிருதயம் துடிதுடித்தது. பெரிய ஆபத்தொன்று விளையப்போவதாக நினைத்தாள். தாயோ வெளியே போயிருக்கிருள். தம்பி சுந்திரன் பள்ளிக்கூடத்திலிருந்து இன்னும் வரவில்லை. வேலைக்காரி கமலமோ, வீட்டில் அதிகமாகத் தங்குவதே கிடையாது. அவள் மனத்தில் பயங்கரமான எண்ணம் தோன்றியது. திடீரென அருகிலிருந்த கூரிய கத்தியையெடுத்தாள். ஆவேசத்துடன் மார்பை மறைத்துக்கொண்டு, தொங்குகிற கூந்தலை ஒதுக்கியதும், தன் மார்பைக் குறிவைத்துக் கத்தியை ஓங்கினுள். புலிபோல் பாய்ந்தார் மிராசுதார். கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தார். தன்னுடைய கண்ணாடியையும், மீசையையும் எடுத்து எறிந்தார். ஆ! என்ன அதிசயம்! அங்கு நிற்பது காளீஸ்வரன்! பரமேஸ்வரி திடுக்கிட்டாள். தன் கண்களைக்கூட நம்ப முடியாது விழித்தாள்.

'என் உயிரே! நான்தான் காளீஸ்வரன்! உன்னைச் சோதித்து வேதனைக்குள்ளாக்கியதற்காக என்னை மன்னிப்பாயா?' என்ருன் மிராசுதாராய் வந்த காளீஸ்வரன்.

பரமேஸ்வரி மூர்ச்சையானுள். காளீஸ்வரன் காதலியைத் தன் கைகளில் ஏந்தி நின்ருன்.

* * * *

காளீஸ்வரனும், பரமேஸ்வரியும் கல்யாணஞ் செய்துகொண்டு, சுகமாய் வாழுகிருர்கள். முத்தனுச்கும் கமலத்துச்குங்கூட விவாகமாகிவிட்டது. காளீஸ்வரன் எவளோ ஒரு தாசியைக் கட்டிக்கொண்டானென்று பேச்சாயிருந்தது. உற்ருர் உறவினருங் கோபித்துக்கொண்டனர். விவாஹத்துக்கு ஒருவரும் வரவில்லை. தாய்கூட மகனை வெறுத்தாள். ஆனல் பெரிய விருந்தொன்று வைத்து, தக்ஷிணையும் நிறையக் கொடுக்கவே எல்லாரும் வந்து கூடிவிட்டார்கள். இப்போது தாயாருங் கூடச் சரிப்பட்டுவிட்டாள்.

அடிமை அகற்றிய அண்ணல்.

திரு. பண்டித-மா. இராசமாணிக்கம் அவர்கள்.

அடிமைத்தனத்தை யகற்ற என் ஆருயிரையும் நான் அர்ப்பணஞ் செய்யத் துணிந்துள்ளேன்.

—**வில்லியம் லாயிட் காரிசன்.**

அடிமைத்தனத்தைவிடக் கொடியதொன்று மனித சமூகத்தில் இல்லை என்னலாம். அதனை யான் அகற்றியே தீருவேன்.

—**ஆபிரகாம் லிங்கன்.**

மனிதனுக்கு மனிதன் அடிமை என்பதை விடக் கொடிய தொன்றில்லை. செல்வன் ஏழையை அடிமையாக்குதல்—நீக்ரோவர்போன்ற மக்களைப் பிடித்துப் பொதுவிடத்தில் விற்று, அடிமைத் தொழில் செய்யவைத்தல்—இவற்றைவிடக் கொடியவை என்னுள! இத்தகைய அடிமை வியாபாரம் ஒரு காலத்தில் ஆப்பிரிக்கா, அரேபியா, அமெரிக்கா முதலிய நாடுகளில் மிக்க உச்ச நிலையை யடைந்திருந்தன. அதனை அடியோடு ஒழிக்க பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் மிக முயன்றனர். அவர்களின் பெரு முயற்சியால் அடிமை வர்த்தகம் அழிவுற்றது.

அமெரிக்காவில் அடிமைத் தனத்தைச் சட்ட மூலமாக ஒழித்தவர் **ஆபிரகாம் லிங்கன்** என்பவர். அமெரிக்கர் உள்ளத்திலிருந்து அடிமைத்தனத்தை அறவே அகற்றியவர் **வில்லியம் லாயிட் காரிசன்** என்னும் உத்தமர் ஆவர். இப் பெரியார் தம் அரிய வாணாட்களை இச் சிறந்த ஒரு தொண்டிற்காகவே செலவழித்தார் என்பதையறிய நீங்கள் வியப்படைவீர்கள்.

காரிசன் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்தவர்; **1804**-ம் ஆண்டிற் பிறந்தவர்; மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பரம ஏழையாதலின், சிறு வயதிலேயே ஒரு சக்கிலியனிடம் வேலைக்கமர்ந்தார்; கூர்ந்த அறிவும், பரந்த நோக்கமும் உடைய இவர் சக்கிலியத் தொழிலை வெறுத்துத் தச்சு வேலையில் அமர்ந்தார்; தம் பதி

னெட்டாம் வயதில் ஓர் அச்சு யந்திர சாலையிற் சேரலானார். இவ்வேலையிற்றான் இவர் மனம் ஈடுபட்டது. ஓய்வு நேரங்களிற் பல நூல்களைப் படித்து, நன்றாய் எழுது மாற்றலும், பேசு மாற்றலும் பெற்றார்; தேச சரித்திரங்களையும், பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளையும் கற்றுணர்ந்தார்; பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். நாட்கள் செல்லச் செல்ல இவரது கட்டுரைகள் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. பின்னர்ச் சில காலம் சில பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து புகழ்பெற்றார்.

பத்திரிகைத் தொழிலில் போதிய அனுபவம் வந்ததும் இவர், தாமே ஒரு பத்திரிகையை நடத்தத் துணிந்தார். குடியையும் அதனால் உண்டாகும் தீமைகளையும் விலக்குதல்; நாட்டினின்றும் அடிமை வாழ்க்கையை அடியோடு அகற்றுதல்; நாட்டில் என்றும் சமாதானம் நிலைத்திருக்கச் செய்தல் என்னும் மூன்று சிறந்த தொண்டுகளைச் செய்யுங் கொள்கைபற்றிப் பத்திரிகையை நடத்த விரும்பினார்.

இவ்வாறு எண்ணிப் பத்திரிகையை ஆரம்பிப்பதற்குள் இவர், அடிமை வர்த்தகம் புரிந்த வர்த்தகன் ஒருவனைப்பற்றிக் கடுமையாகக் கண்டித்துப் பத்திரிகையில் எழுதினார். அதனால் சினங்கொண்ட அவ் வணிகன், இவர்மீது வழக்குத் தொடர்ந்தான். அவ் வழக்கில் நீதிபதி, காரிசன் குற்றவாளி எனத் தீர்மானித்து, அவருக்கு அபராதமும், சிறைவாசமும் விதித்தார். எனினும், காரிசன் பொறுமையோடும், முகமலர்ச்சியோடும் இரண்டையும் ஏற்றுக்கொண்டார். ஆயினும், அடிமை வர்த்தகத்தை ஒழிக்கவேண்டும் என்னும் பேரவா மட்டும் அவரது மனத்தை விட்டும் மறைந்ததில்லை. இஃதன்றோ உண்மைத் தொண்டு செய்பவர்தம் உயர்ந்த இலட்சணம்!

சமூக ஊழலை நீக்கப் பாடுபட்ட காரிசன் சிறை செய்யப்பட்டதைக் கேள்வியுற்ற அறிஞர் பலர் ஆத்திரங் கொண்டனர். நாளடைவில் பலர் காரிசனோடு சேர்ந்து உழைக்கக் காரணமாயிருந்தது நீதிபதியளித்த தண்டனை யென்பதில் ஐயமில்லை.

எண்ணம் உறுதிப்படவே, காரிசன் தனியாக **லிபரேட்டர்** என்னும் பத்திரிகை யொன்றை ஆரம்பித்தார். தனக்குப் பண உதவிபுரியுமாறு பெருமக்களை வேண்டினார். பலர் இவருக்குப் பொருளுதவி புரிந்தனர். தம் பத்திரிகைக்குச் சந்தாதார்களைச் சேர்க்க, இவர் அமெரிக்கா முழுவதுஞ் சுற்றினார்; தம் கொள்கைகளை மிகத் தெளிவாக மக்களுக்கு எடுத்து விளக்கினார். இவரது பரோபகார உள்ளுணர்ச்சியைக் கண்டு மகிழ்ந்த பலர் சந்தாதாராகச் சேர்ந்தனர். எனினும், ஆரம்பத்தில் பத்திரிகை நடத்துகையில்

இவர் பட்ட இன்னல்கள் பல. பத்திரிகை ஆரம்பித்துப் பதினெட்டு மாதங்கள் வரையிலும், இவரும் இவர் கூட்டாளிகள் இருவருமே அச்சுக்கூடத்தில் வேலைசெய்தனர். படுக்கை வாங்கவும் பணமின்றி வெறுந் தரையில் காரிசன் படுத்திருந்த கொடுமையை என்னென்பது! நேர்மையான உணவுக்குப் பணமின்மையால், சொற்ப உணவே உட்கொள்ள நேர்ந்ததும் வருந்தத் தக்கது. பொதுநலத்துக்கு உண்மையாக உழைக்கும் ஒவ்வொருவருக்கும் இத் துன்பங்கள் நேருவது இயற்கைதானே?

இத்தகைய இன்னல்களைப் பொறுமையோடு சகித்துக்கொண்டு, காரிசன் உற்சாகத்துடன் அடிமை வாழ்க்கையை யகற்ற உழைத்து வந்தார். அடிமைகளின் விடுதலையைப்பற்றிக் கோவில்களிற் பேசப் பாதிரிகள் இவரை யனுமதிக்கவில்லை. அமெரிக்க அரசாங்கமும் இவர் நல்லுரையைக் கேட்கவில்லை. என்றாலும், மனோ தைரியம் வாய்ந்த காரிசன் புன்முறுவலோடு, "இப்பொழு தில்லாவிட்டாலும் இன்னொரு காலத்திலாவது என் வார்த்தைகள் கேட்கப்படும்" என்று கூறினார்.

உண்மையும் உழைப்பும் உறுபயன் பெறுதல் இயற்கையன்றோ? அருந்தொண்டுபுரிந்த காரிசனுடைய வார்த்தைகள் பாஸ்டன் நகரின் மக்களால் பொன்னேபோலப் போற்றப்பட்டன. நாளடைவில் அமெரிக்கா முழுவதும் இவரது மணிவாசகத்தை மதிக்கத் தலைப்பட்டது. என்றாலும், அரசாங்கத்தால் இவருக்கு ஏற்பட்ட இன்னல்கள் இவ்வளவு அவ்வளவல்ல. அவரைக் கைதுசெய்து, கையளிப்பவருக்கு ஆயிரக் கணக்கான டாலர்கள் பரிசு தருவதாகச் சட்டசபை கூவியது. இவரை அச்சுறுத்தி எழுதப்பெற்ற கடிதங்கள் பல. இவர் சொற்பொழிவைக் கேட்டு நின்ற மக்கள் அனைவரும் கலைக்கப்பட்டனர். பாஸ்டன் நகரில் இவர் ஒரு பெருங் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கையில், அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவன் இவரது கழுத்திலே கயிற்றை மாட்டி, பாஸ்டன் வீதிகள் வழியே இழுத்துச் சென்று, சிறையில் அடைத்தான். இங்ஙனம் இவர் சிறைப்பட்டது 1835-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதியில் ஆகும்.

இத்தகைய இன்னல்களைச் சிறிதும் பொருட் படுத்தாமல் தமது முடிவான லட்சியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அடிமை வாழ்க்கையை அகற்ற நாற்பதாண்டுகள் தொண்டு செய்து, முடிவில் வெற்றி பெற்றார். அவர் காலத்திற்குள் அடிமை வாழ்க்கையை எதிர்க்க ஆயிரக் கணக்கான சங்கங்கள் அமெரிக்காவில் தோன்றின.

புத்த ஜயந்தி.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி.

ஒரு காலத்தில் நமது பாரத கண்டத்தில் பிராமணர்கள் உயர்வு பெற்று விளங்கினார்கள். பிரமத்தை—கடவுளை அறிந்தவர்களெல்லோரும் பிராமணர்களாகக் கொண்டாடப் பட்டார்கள். அக் காலத்துத் தபோதனர்கள், முனிவர்கள் முதலியவர்களின் சரிதங்களே இதற்குச் சாட்சிகளாக இன்றும் இருக்கின்றன. அந் நாட்களில் ஜாதி பேதமில்லை; பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது.

1860-ல் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் தலைவரானதும், காரிசன் இயக்கம் மிக்க வலுவடைந்தது. ஏனெனில், லிங்கனும் அடிமை வாழ்க்கையைத் தொலைக்கப் பாடுபட்ட பெரியாராவர். அவர் தலைவரானதும் **அடிமை விடுதலைச் சட்டம்** ஒன்றையுண்டாக்கி, அடிமைத் தனத்தை அடியோடு ஒழித்தார்.

காரிசன் சாந்த குணம் படைத்த பெரியார்; எக் காரணத்தை முன்னிட்டும் சண்டையிடுவதையும், பலாத்காரஞ் செய்வதையும் அடியோடு வெறுத்தவர். சத்தியத்தையும் அஹிம்சையையுமே தமக்குரிய துணையாகக் கொண்டவர். இவரைப் போன்றே இவரது இன்னுயிர் மனைவியாரும் பிள்ளைகளும் சத்திய வழியில் நடப்பவர்கள்; மறந்தும் தீமை நினையாதவர்கள். இல்லற வாழ்க்கையை இன்பமாக நடத்திய காரிசன் பெரியார் அடிமை வாழ்க்கையை அமெரிக்காவிலிருந்து அடியோடு விலக்கி, நீக்கிரோவ செவ்விந்தியர் இவர்களின் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்து குன்றாப் புகழடைந்தார். இத்தகைய உண்மைப் பெரியார்களாற்றான் சமூகம் முன்னேற்றமடைகின்றது. பொதுஜன சேவையே புனிதமான சேவையாகும். மனுஷ்யத் தொண்டு மறுமையிற் கடவுட் தொண்டாகக் காட்சி தரப்படுகிறது. மனுஷ்ய ஜாதியின் வாழ்க்கை லட்சியமும் அதுவே யாகலான் ஒவ்வொருவரும் அக் கடனாற்றல் அவஸ்யம்.

பிறகு பிராமணர் வழிவழி வந்தவர்களெல்லாம் பிராமணர்களாய் நடிக்க ஆரம்பித்துப் பிராமணர்களெல்லாம் ஒரு சமூகமாகச் சேர்ந்து, பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பித்துப் பற்பல சடங்குகளையும் சாஸ்திரங்களையும் உண்டாக்கி, நம் நாட்டுப் பாரத மக்களை வைதீகமென்னும் அந்தகாரத்தில் அடைத்து, மயக்கி வைத்திருந்தார்கள். பண்டைத் தமிழர் நாகரீகம், போலி ஜாதி வித்தியாசத்தை அறியாதிருந்தது.

ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகக் கொண்ட தேசத்தில், அருத்தமும் பொருத்தமுமற்ற மரபு வேற்றுமை யென்ற பாப வித்து, நாளடைவில் முளைத்துப் பயிராகி, செடியாகி, மரமாகிப் பூத்துக் காய்த்து, விஷக் கனி கொடுப்பதை மதத்தின் பெயரால் உட்கொண்டு, நம்மவர்கள் மயங்கிக் கிடந்தார்கள். எல்லாவற்றையும் ஆக்கி ஆதரிக்கும் அன்னை பிதா ஆனவரை—கடவுளை வழிபடுவதிலுங்கூட அநேக மூடப் பழக்க வழக்கங்களால் பொது ஜனங்களுக்குப் பல அதிக்கிரமங்கள் செய்யப்பட்டன.

புத்தர் பிறப்பு.

2556 வருஷங்களுக்கு முன்னாலே, வட இந்தியாவிலே, **கபில வஸ்து** நாட்டிலே, நேபாளத்திற்குச் சமீபத்திலே, அழகிய உலும்பினி உத்தியான வனத்திலே, சாக்கிய வம்சத்திலே, வைகாசி மாச விசாக நட்சத்திரத்திலே, பௌர்ணமி திதியிலே, உலக உய்வின்பொருட்டு **புத்தர்** அவதரித்தார். அவரது தகப்பனார் அந் நாட்டுக்கு அரசர்; அவரது பெயர் **சுத்தோதனர்**. அவ் வரசர் உயர்ந்த படிப்பாளி; சற்குண சீலர்; சத்திய சந்தர். அவரது ராணியான **மாயாதேவி** மகா அழகி; உத்தம குணங்கள் படைத்தவள். இந்த இராஜா இராணி இருவருக்கும் நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாத குறையை நீக்கியபடியால், "திருப்தி யளித்தவன்" என்று பொருள்படும்படியாகச் **சித்தார்த்தன்** என்று அவர் பிதா அவருக்குப் பெயரிட்டார். அவர் பிறந்த 7 நாளில் மாயாதேவி மரணமடையவே, தனது சிற்றன்னையான **பிரஜாபதி கௌதமி** என்னும் இளைய ராணி சித்தார்த்தனாரை வளர்த்துவந்தாள். அக் குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வந்தது. சிறுவயதில் சித்தார்த்தனார் பள்ளிக்கு அனுப்பப்பட்டபொழுது, அவர் அநேக நல்ல குணங்களுடன் தோன்றினார். கல்வியில் நிறைந்து விளங்கியதுபோலவே கலைகளிலும் சிறந்து விளங்கினார். வில் வித்தையில் தேர்ச்சி பெற்று வீரனாகப் பிரகாசித்தாலும், எந்த உயிர்ப் பிராணியையுங் கொல்ல அவருடைய உயரிய மனச்சாட்சி மறுத்தது. அவரது சிற்றப்பன் குமாரனான தேவதத்தன் என்பான் ஒரு பறவையை அம்பால் எய்தபொழுது, இரத்தம் ஒழுகிக்கொண்டு கீழே விழுந்த அப் பறவையை எடுத்து, அதனில் பாய்ந்திருந்த அம்பைப் பிடுங்கி, அதன் காயத்திற்குப் பச்சிலை மருந்து கட்டி உதவி செய்தார். பட்சிக்குப் பட்ட அந்த அம்பைப் பிடுங்கி, அதன் கூர்மையால் தனது தேகத்தைக் குத்திப் பார்த்தபொழுது, அப் பட்சிக்கு எவ்வளவு சகிக்கொணாத் துன்பம் ஏற்பட்டிருக்குமென்று கண்டு வருந்தினார். உயிரற்ற—உதவியற்ற பிராணிகளுக்கும் அன்பு காட்ட வேண்டுமென்ற தர்மத்தை மானிடர்களுக்குப் பிரச்சாரம் செய்வேனென்று அப்பொழுது தீர்மானித்துக்கொண்டார். சிறு வயதில் இவர் பிராணிகளிடத்தில் இவ்வளவு பட்சாதாபங் கொண்டால், இவரது இரக்கத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

தனது வயது 20 ஆனவுடன், தனது தந்தையார் ஏற்படுத்தியிருந்த பகிரங்கமான பல விளையாட்டுப் பந்தயப் போட்டியில் வெற்றியடைந்து, வீரனெனப் பெயரும் பெற்று, உருவில் இரதி தேவி போன்ற தனது மாமன் மகளாம் **யதோதரையைப்** பந்தயப் பரிசிலாக அடைந்தபின், மணவினை நடந்தது. தனது குமாரன் சந்நியாசியாவா னென்பதை முன்னமே யறிந்த சுத்தோதனர், தன மகன் துறப்பதைத் தடுத்து, ஒரு சக்கிரவர்த்தியாக வாழும்படி செய்ய எண்ணி, அரச வைபவத்தால் எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு இன்பங்களும் அழகிய அரண்மனைகளில் அமைத்து, இல் வாழ்க்கையை இன்பமாய்க் கழிக்கும்படி செய்தார். இவ்வாறு இனிதாகப் பத்து ஆண்டுகள் சென்றன.

அழகான சிங்கார வனங்களோடும், மனங் கவரும் தடாகங்களோடும், ஆயிரக் கணக்கான வேலைக்காரர்களோடும் மூன்று பிரமாண்டமான அரண்மனைகளை அமைத்து, ஒவ்வொரு பருவ காலத்திலும் ஒவ்வொன்றிலும் நாலு மாதங்கள் தங்கியிருந்து, அநேக சுகங்களை அனுபவிக்குமாறு செய்திருந்தபோதிலும், சித்தார்த்தனாது புலன்களுக்கு இந்தச் சந்தோஷங்களெல்லாம் வெறுப்பாகவே தோன்றியது. பிறந்தது முதல் வருத்தம் என்பது இன்னதென்று அறியாத இவர்—இருக்குமிடத்திலிருந்தே இன்பங்களை நுகர்ந்துகொண்டிருந்த இவர், இறைவனது அருளால் வெளி இன்பத்தில் அலுப்படைந்து, இவரது அந்த இன்பச் சிறையிலிருந்து ஒரு நாள் உலகத்தைக் கவனிக்குமாறு வெளியே வந்தார். கௌதமர் வெளியில் ஒரு ரோகஸ்தனையும், ஒரு கிழவனையும் ஒரு சவத்தையுங் கண்டு, ஆச்சர்யமடைந்து திடுக்கிட்டுப்போனார். தனது அரண்மனை சென்றவுடன் தான் பார்த்த பிணி, மூப்பு, சாக்காடுகளின் விஷயங்களையும், உலக வாழ்வின் நிலையாமையையும் பற்றி ஆழ்ந்து

ஆராய்ச்சி செய்து, ஓயாக் கவலையால் உள்ளுடைந்து, வாடி, வதங்கி உலக மாந்தர்களின் துன்பப் பிணிக்கு மருந்து தேடும்பொருட்டு விரும்பினார், வேண்டினார். சதா அவர் இக் கவலைகளால் தகிக்கப் பட்டுக்கொண்டிருந்தார். உலகமானது துன்பக் கடலில் மூழ்கி அவதிப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது, தான்மட்டும் சுகித்துக் கொண்டிருப்பது தனக்கு நியாயமல்லவென்று அறிந்தார். இவ்வாறு இவர், தான் அரச சுகத்தில் வாழ்ந்துகொண்டி ருந்தால், உலகமானது துன்ப நெருப்பால் சுடப்பட்டு, துக்கப் புகையால் எப்பொழுதும்போல் மூடிக்கொண்டிருக்கும் என்பதையும் தெரிந்துகொண்டார்.

துறவு

அவரது அகண்ட உயரிய மனச் சாட்சியும் மானிடர் மீது அவர் பூண்ட அபார அன்பும் துன்பப்படும் மக்களிடம் அவர் கொண்ட இரக்கமும் அவரை, உலகத்தைத் துறக்கும்படி செய்து அவர்களின் துன்பங்களிலிருந்து விடுதலைக்கு வழி காட்டும்படி செய்தது. விஸ்வ பிரேமை யென்னும் வைய மளாவிய அன்பில் ஈடுபட்டு மூழ்கித் தன்னுயிரினும் இனிய இல்லாளையும், கடந்த ஞானிகளும் மறுக்கமுடியாத—மறக்க முடியாத புத்திரர்மீது கொண்ட காதலையும், தனது அரசுரிமையையும், தனது அரிய தந்தையாரையும், அருமைச் சிற்றன்னையாரையும், அபாரச் செல்வத்தையும், இந்திர போகங்களையும் உலக நன்மைக்காகப் பேரருளால் தூண்டப் பெற்றுத் தன் 29-வது பிறந்த நாளன்று (வைகாசி பௌர்ணை) இராஜ உடைகளை யெல்லாம் உதறித் தள்ளிச் சிகையைக் கூடச் சிதைத்துவிட்டு எளிய பிச்சைக்கார வேஷத்துடன் வெளியேறிச் சர்வ சங்கப் பரித் தியாகஞ் செய்தார்.

"மோட்சமடையும் வழியை நான் அறிந்தபொழுது, நான் ஜனங்களிடம் வந்து அவர்களுக்கு விடுதலை யடையும் ஞான மார்க்கத்தைப் போதிப்பேன்" என்று அவராக நினைத்துக்கொண்டு புறப்பட்டார். கயாவிற்குச் சமீபத்தி லிருக்கும் **உருவேலா** என்னும் காட்டிற்குச் சென்று அங்கே யிருந்த ஒவ்வொரு தபசியிடத்திலும், யோகி யிடத்திலும் சென்று அவர்களின் அனுஷ்டானங்களைப் பழகிக்கொண் டிருந்தார். கடோரமான ஆசனங்களையும் நியம நிஷ்டைகளையும், விரதங்களையும் இவர் அனுஷ்டித்த போதிலும் துக்கத்திற்குக் காரணத்தையும் அதை அகற்றுவதற்கு மருந்தையும் அந் நிலையில் கண்டு பிடிக்க முடியவே யில்லை. இவரின் அருள் வெள்ளம் பொங்கிப் புரண்டு கடல் மடை திறந்தது போல ஓடிக்கொண் டிருந்ததால் ஆறு ஆண்டுகள் அநேக வழிகளையும் பின்பற்றி அநேகக் கடுந் தபசுகளையும் செய்து செய்து அலுத்துப் போனார். உலக உய்விற்காக அவர் பட்ட பாடுகளையும் அடைந்த கஷ்டங்களையும் சொல்லி முடியாது. பற்பல விரதங்களையும் பட்டினி நியமங்களையும் விட்டுவிட்டு, **சுஜாதா** என்ற ஒரு மாது நல்லாள் அளித்த அடிசில் என்ற பாலில் சமைத்த சாதத்தை சாப்பிடவே, அவருக்குச் சக்தி யுண்டாயினது. அப்பால் கயாவில் பல்குனி ஆற்றங் கரையிலிருக்கும் ஒரு போதி விருட்சத்தின் அடியில் அமர்ந்து சொந்தமாக முயல ஆரம்பித்தார். அம் மரத்தடியில் வஜ்ராசனத்தில் வீற்று, துக்க காரண நிவாரணத்தை அறியும் வரை சற்றும் அசைவதில்லையெனத் தீர்மானம் செய்து தியானத்தில் அமர்ந்தார். உடனே எத்தனையோ வகைச் சோதனைகள் அவரது தியானத்தைக் கலைக்க வந்தன. ஆசை, கோபம், சுய நலம், சந்தேகம் முதலிய தீயவைகள் அவரது திட சித்தத்தை அசைக்கப் பார்த்தன. அவரது இரும்பு நேர் சித்த சக்தியாலும் அபார ஏகாக்ர சக்தியாலும் எல்லா மாயைகளையும் ஜெயித்து, ஆழ்ந்த தியானங்களால் கஷ்டங்களின் காரணத்தையும் நிவர்த்தி மார்க்கத்தையுங் கண்டு தெளிந்தார். அறியாமையும் ஆசையுமே எல்லாப் பாவங்களுக்கும் காரணமென்று அறிந்த பிறகு எத்தனையோ வகை உயரிய ஆராய்ச்சிகளையும் தியானங்களையும் செய்து தனது 35-வது பிறந்த நாள் பூர்ணிமையன்று புத்தத் தன்மையில் பூரணம் அடைந்தார். அப்பொழுது அவர், அரசர் சித்தார்த்தனராகவோ தபசி கௌதமராகவோ இருக்கவில்லை. ஆனால் உண்மையை அறிந்த சம்மசம் புத்தராக விளங்கினார். கயாவில் இவர் புத்தத் தன்மை யடைந்தபடியால் கயாவை புத்த கயாவென்று சொல்லப்படுகிறது. காசிக்கு அருகிலிருக்கும் மான்வனம் என்னும் சாரநாதத்திற்குச் சென்று உபதேசிக்க ஆரம்பித்து, பிறவித் துன்ப வியாதியி லிருந்து மக்கள் விடுபடும் பொருட்டுத் தாம் கண்டு பிடித்த மருந்தை உலகத்தாருக்குத் தெரிவிக்கப் புறப்பட்டார்.

அவரது உபதேசங்கள்

1. உண்மையான நம்பிக்கை, 2. உயர்ந்த எண்ணங்கள், 3. அன்பான மொழிகள், 4. கௌரவமான நடத்தை, 5. வாழ்க்கையின் உண்மை, 6. நல்லதைக் கையாளுதல், 7. அறிவைச் சரியானபடி உபயோகித்தல், 8. உண்மையான பக்தி ஆகிய இந்த அஷ்ட மார்க்கங்களையும் மேற்கொண்டு, 1. கொல்லாமை, 2. திருடாமை, 3. பிறன் மனை விழையாமை, 4. பொய் கூறாமை, 5. கள் உண்ணாமை என்னும் இந்தப் பஞ்ச சீலங்களையும் கடைப்பிடித்துத் தத்தம் கடமைகளைச் செய்வார்களாயின், ஒவ்வொருவரும் இறுதி

யில் பேரின்ப வீட்டை அடைவர் என்பது அவரின் அருமைத் திரு உபதேசங்களாம். வாழ்வின் துக்கத்தின் காரணங்களை அறிவது அவசியமென்றும் துக்கத்தின் காரணங்களைக் கண்டு அவைகளை நீக்குவதால் விடுதலை அடையலாமென்றும் முக்கியமாகப் போதனை செய்தார். அவர் தமது பிரச்சாரப் பிரயாணத்தை ஆரம்பித்தபொழுது, அவருடைய அருமையான குணங்களால் நூற்றுக் கணக்கான தபசிகளும், விபச்சாரிகளும், தாசிகளும், வேசிகளும், கொலைகாரர்களும், திருடர்களும், கசாயிகளும், உயர்ந்த தாழ்ந்த வகுப்பாரில் ஆண்களும் பெண்களும் அவருக்குச் சீடரானார்கள். அவரது சீடர்களுக்காக ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். அதற்குத் திட்டங்களை வகுத்து விதிகளை உண்டாக்கி அன்பு மதத்தைப் பரவச் செய்தார். இன்பக் கருவிகளாகவோ, விளையாட்டுப் பொருள்களாகவோ கருதாது மாதர்களுக்கும் பெருமை கொடுத்து அவர்களுக்கும் சமத்துவமும் சுதந்திரமும் கொடுத்திருக்கிறார். பெண்களுக்கென ஏற்பட்ட சங்கத்திற்கு அவ்வளவு கடுமையான விதிகள் கிடையாது.

ஜாதி வித்தியாசமின்றி எல்லோருக்கும் அவர் உபதேசித்தார். பல ஆயிரக் கணக்கான ஒடுக்கப்பட்ட மக்கள், அன்பு மதமாம் புத்த மதத்திற் சேர்ந்து ஹிந்து வைதீகக் கொடுமையிலிருந்து தப்பினார்கள். ஆடு மாடுகளையும் சில பிராணிகளையும் மதத்தின் பெயரால் கொன்று யாகங்கள் செய்வதில் அக் காலத்தில் பிராமணர்கள் உற்சாகமாயிருந்தபொழுது, வாயில்லா—உதவி யற்ற—உபயோகமுள்ள பிராணிகளைக் கொல்லுவதில் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று பிரச்சாரம் செய்து மிருகக் கொலைகளை நிறுத்தியது புத்தபிரானே. மிருக வதைகளை மட்டும் நிறுத்தியதுமட்டுமின்றி அப்பிராணிகளிடம் இரக்கம் காட்டவேண்டுமென்றும் உபதேசம் செய்தார் ஜாதி, நிறம், மதம் முதலிய வித்தியாசங்களால் மனிதர்கள் வேற்றுமையாயிருக்கக் கூடாதென்றும், மக்கள் சகோதரத்துவத்துடனிருக்கவேண்டுமென்றும், மிலேச்சர்களையும் நாஸ்திகர்களையும் கூடக் கட்டாயப்படுத்தி எவரும் மத மாற்றம் செய்யக்கூடாதென்றும் மானிட சகோதரர் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொள்ளாது பரஸ்பரமாயிருக்கவேண்டுமென்றும் உபதேசித்து, ஜனங்களுக்குள் ஐக்கியத்தை உண்டாக்கினார். சகோதரத்துவமும் அவர்களது உரிமைகளும் வளர்க்கப்பட்டன. சமூக தேசிய ஒற்றுமை புத்த சங்கத்திற்கு அதிக அத்யாவஸ்யமாயிருந்தது. சேவையைப் பற்றி அதிகமாகக் கூறியிருக்கிறார். உயர்ந்தோர் தாழ்ந்தோர், பணக்காரர் ஏழை, பெரியோர் சிறியோர், ஆண்டான் அடிமை, ஆண் பெண் என்ற வித்தியாசங்கள் எள்ளளவுமின்றி,

அரசர்கள் முதல் அடிமைகள் ஈறாகவுள்ள அனைவருக்கும் கருணைக் கடலாம் தமது ஹிருதயத்தைத் திறந்து உபதேசித் தருளினார். ஜாதி பேதமென்னும் பிசாசைக் கொன்று, ஜீவகாருண்யத்தை ஓங்கச் செய்து அன்பைப் பெருக்கிச் சமரசத்தை நிலை நிறுத்திச் சகோதரத்துவத்தை உண்டாக்கிச் சுதந்திரத்தை வளர்க்கப் புத்த தேவர் அவதரித்தார் என்று ஏன் சொல்லக் கூடாது? ஒரே கடவுள் ஒரே ஜாதி என்பதை அடிப்படையாகக் கொண்டது அவரது அன்பு மதம்.

தியாகம்

அரச குமாரராகத் தோன்றிய சித்தார்த்தனார்—இளங்கோவாயிருந்தவர்—கிரீடம் தாங்கி அரசாள வேண்டிய கௌதமர்—அரசராயிருந்து இந்திர போகங்களை அனுபவிக்க வேண்டிய சாக்கிய சிம்ஹனார்—தமது அன்பின் உறைவிடமான உயிரனைய மனையாளுடனும் புத்திரருடனும் சுகிக்க வேண்டிய சுத்தோதனர், உலக மேன்மையின் பொருட்டு அபார அன்பு கொண்டு அனைத்தையும் தியாகம் செய்து, நெருப்புப் பற்றிய வீட்டினுள்ளிருக்கும் ஒருவன் எவ்வளவு ஆத்திரத்துடன் வெளியேறுவானோ அவ்வளவு ஆத்திரத்துடன் வெளிப்பட்டு 6 ஆண்டுகள் வேலை செய்து, உண்மையின் வழியை உணர்ந்து, உலகத்தாருக்கு உபதேசித்தார். அநேக இராஜாக்களை ஜெயித்து அநேக இராஜ்யங்களை ஆள வேண்டிய அவர், அநேக அரசர்களுடைய இதயங்களை ஜெயித்து, அவ் வரசர்களின் உள்ளங்களில் இடம் பெற்று விளங்கினார். ஓர் அரசர் அனைத்தையும் தியாகம் செய்து, வேண்டுமென்றே ஆண்டித்தனத்தை அடைந்து அதை அனுசரிப்பது இலகுவான காரியமா?

தொண்டு

அன்பின் குன்றம்-ஜீவகாருண்ய சாகரம்-சத்தியாவதாரம்—சமத்துவச் சூரியன்—சுதந்திரத் தென்றல்—தீனபந்து—பரத கண்டத்தின் ஒப்பற்ற உயரிய அரிய அழகிய ஆபரணம்—ஜீனராம் புத்த முனிவர் நமது மாதரு பூமியில் அவதரித்தார்; எளியவர்களுக்காகவும், அறியாதவர்களுக்காகவும், துன்பப்பட்டவர்களுக்காகவும் துக்கப்பட்டவர்களுக்காகவும் நிர்வாணம் எய்தும் வரையில் பாடுபட்டார். அவருடைய ஆயுட்கால முற்றிலும் மானிட சேவைக்காக மட்டுமின்றி, உலகில் பிறந்த ஆத்மகோடிகள் அனைத்துக்கும் உழைத்தார் என்றே சொல்ல வேண்டும். நாள் ஒன்றுக்கு 22 மணி நேரங்களாக 45 வருடங்கள் அவர் சேவை செய்ததை நினைக்க நினைக்க எவருக்குத்தான் தொண்டில் ஆவேசம் உண்டாகாமலிருக்கும்! அவர் பேரில் அன்பு ஜெனிக்காமலிருக்கும்! உலக சரித்திரம் அனைத்தி

லும் ஆழ்ந்து, தேடித் தேடிப் பார்த்தாலும் சாக்கிய முனிவரைப் போன்ற இனியொரு பெரியாரைக் கண்டுபிடிக்க முடியவே முடியாது. அவர் பிராணி வர்க்கத்தினிடம் கொண்ட தணியா எல்லையற்ற அன்பால் ஜீவர்களுக்குச் சதா தொண்டாற்றிக் கொண்டேயிருந்தார். ஜீவகாருண்யத்தின் மீது தான் புத்த மதம் ஆக்கப்பெற்றிருக்கிறது எனலாம். தன் வாழ்வு முற்றிலும் ஜீவர்களின் பொருட்டுச் சேவை செய்து, விடுதலை யடையும் மார்க்கத்தை எல்லோருக்கும் காட்டி, ஒரு கர்மயோகியால் தனது தேசத்திற்கு அல்ல உலகத்திற்கு எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவுஞ் செய்துவிட்டு, தான் எதை அறிந்திருக்தாரோ—அனுபவம் செய்திருந்தாரோ அதை அகில உலகத்திற்கும் அறிவித்துவிட்டு அவர் நிர்வாண மெய்தினார்.

புத்த மதம்

புத்த மகான் நமது நாட்டில் அவதாரம் எடுத்த போதிலும், கடல் கடந்து சீனம், ஜப்பான், சயாம், கொரியா, பர்மா, கம்போடியா, அன்னும், சிலோன் முதலிய தேசங்களிலும் இவரது அன்புக் கொடி—அறக்கொடி—அறிவுக்கொடி—சத்தியக் கொடி—சமத்துவக் கொடி ஆசியாவின் ஜோதி என இன்றும் பறந்துகொண்டிருக்கிறது. மேலை நாடுகளிலும் இவரது ஜீவகாருண்ய வெள்ளம் மெல்லெனப் பாய ஆரம்பித்திருக்கிறது. புத்த மதம் எப்பொழுது எங்கெல்லாம் சென்றதோ அப்பொழுது அங்கெல்லாம் புத்தக் கலைகளும்,—புத்த இலக்கியமும்,—தொழில்களும் சென்றன. சாக்கிய முனிவரையும் அவரது அரிய உபதேசங்களையும் இப்பொழுது இந்தியா மறந்துகொண்டிருக்கிறது. விஷ்ணுவின் 10 அவதாரங்களில் புத்த தேவர் ஒருவரென்று இந்து சமய நூற்கள் கூறுகின்றன. "புத்த மதம் இல்லாத ஹிந்து மதம் வெண்ணெய் இல்லாத பாலுக்கு ஒப்பாகும்" என்று விவேகானந்தர் கூறியிருக்கிறார். உலக முழுவதிலும் உள்ள ஏறக்குறைய 200 கோடி ஜனங்களில் 50 கோடிப் பேர்கள் புத்த மதத்தை இப்பொழுது பின்பற்றுகிறார்கள். "உலகத்திலுள்ள அரசர்களிலெல்லாம் அவர் மாபெரும் மன்னராக விளங்குவார் அல்லது மஹா உயரிய முனிவராக இலங்குவார்" என்று சித்தார்த்தனார் பிறந்தவுடன் ஒரு ஜோதிடர் தீர்க்கதரிசனம் கூறியது போன்று அவர் ஜகத் மகரிஷியாக விளங்கினார். எத்தனையோ அரசர்கள் தோன்றினார்கள், வந்தார்கள். ஆண்டார்கள், போனார்கள். எத்தனையோ அரசாங்கங்கள் புதிதாகத் தோன்றின, இருந்தன, மறைந்தன. அப்பெயர்களை யெல்லாம் காலம் மறைத்துவிட்டது. உலகத்தின் மானிட வர்க்கத்தில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் தன்னைப் பின்பற்றும்

பக்தர்களென்று இளங்கோ சித்தார்த்தனாரைத் தவிர்த்து வேறு யார் சொல்லக்கூடும்?

புத்த ஜயந்தி.

உலக நன்மையின்பொருட்டு உழைத்தவரானபடியால், புத்த தேவர் உலகினுக்கே உரித்தானவர். ஆகையால் ஒவ்வொருவருக்கும் அவரிடத்தில் உரிமையுண்டு. அவர் வைகாசிப் பூர்ணிமையன்று பிறந்தார். வைகாசிப் பூர்ணிமையன்று தமது 29-வது பிறந்த தினத்தில் உலகத்தைத் துறந்தார். தமது 35-வது வருடத்தில் வைகாசிப் பூர்ணிமையில்தான் புத்தத் தன்மை அடைந்தார். வைகாசிப் பூர்ணிமையில்தான் தமது 80-வது ஆண்டில் மோட்ச வீட்டை அடைந்தார். சாக்கிய முனிவர் பிறந்ததும், துறந்ததும், துன்ப நிவாரணம் கண்டதும் நிர்வாணமடைந்ததும் வைகாசிப் பூர்ணிமையிலேதான். புத்தர் நமது மாதுரு பூமியாம் பரத கண்டத்தில்தான் பிறந்தார்; இங்கேதான் வளர்ந்தார். அவருடைய ஜீவிய காலமெல்லாம் நமது தேசத்திலேதான் சேவை செய்தார். கடைசியில் மறைந்ததும் நமது பாரதவர்ஷத்திலேதான். அவர் உலகத்தில் அடிவைத்து, அவரது அருள் வாக்குகள் உலகத்திற்கு வெளிச்சமுண்டாக்கி, இப்பொழுது 25 நூற்றாண்டுகளுக்கு மேலாகின்றன.

புத்தர்களுக்கு அவர் உண்மையின் ஒளியைக் கண்ட விஸ்வ புத்த பகவானாகவும், புராணங்களை நம்பும் ஹிந்துக்களுக்கு ஞான முக்த புத்தராகவும், வைஷ்ணவர்களுக்கு விஷ்ணுவின் 9-வது அவதாரமாகவும், ஹிந்துக்கள் அனைவருக்கும் அவர் ஒரு கடவுளாகவும், தவறியவர்களுக்குக் காப்பாற்றுபவராகவும், தபசிகளுக்குப் பெரிய தபசியாகவும், முனிவர்களுக்கு மகா முனிவராகவும், தத்துவ சாஸ்திரிகளுக்கு ஜீவியத்தைப் போதிக்க வந்த பெரிய தத்துவ் சாஸ்திரியாகவும், இலக்கியக்காரர்களுக்கு, ஜனங்களுக்குத் தெரிந்த சர்வஞான பாஷையில் போதித்த பெரிய இலக்கிய பண்டிதராகவும், தேச நிர்மாணிகளுக்கு மாபெரும் பெரிய தேச நிர்மாணியாகவும், சர்வ தேசத்தாருக்கு சர்வ தேச ஒற்றுமையைப் புகட்டிய பெரிய சர்வ தேசத்தாராகவும், சமூகச் சீர்திருத்தக்காரர்களுக்கு சமூக சமத்துவம், சமூக நலம், சமூக விருத்தி முதலியவைகளை வற்புறுத்திய பெரிய சமூக சீர்திருத்தக்காரராகவும், மிதவாதிகளுக்கும் விரோதிகளுக்குங் கூடத் தாராளமாயிருந்த மிதவாதியாகவும், அமிதவாதிகளுக்கு ஒழுக்கங்களிலும் தபசுகளிலும் சிறந்த அமிதவாதியாகவும், புரட்சிக்காரர்களுக்கு பெரிய சமூக, மதப் புரட்சிக்காரராகவும், உலக மக்களுக்கு உலக க்ஷேமத்தை விரும்பிய மா

ஜப்பான் முன்னேற்றம்.

ஜனாப் S. சையது அஹமது அவர்கள்.

கிழக்குக் கோடியில், 1,48,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட சின்னஞ் சிறு தீவுகளடங்கிய ஜப்பான் எனப்படும் 'உதய சூரிய நாடு', இன்று முக்கிய வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. அந்தச் சிறு தீவுகளின் பலத்தைக் கண்டு, பெரிய பெரிய சாம் ராஜ்யங்களும் நடுங்குகின்றன.

பெரும் மகாத்மாவாகவும், இல்லறவாசிகளுக்கு ஒரு நல்ல இல்லற தர்மியாகவும், புத்த சந்நியாசிகளுக்கு ஒரு அரும் பெரும் முதற் சந்நியாசியாகவும் அவர் விளங்குகிறார். இவ்வாறு பெருமை யுடைய புத்த பிரானது ஜயந்தி—திருநாள் அடுத்து வருகின்றது.

நமது கடமை

செல்வச் செருக்கும், செல்வாக்குப் பெருக்கும், ஜாதி இறுமாப்பும், மதப் பைத்தியமும் உலகில் அடியோடு அழிந்து, அன்பும், அறமும், அறிவும், அருளும், ஆற்றலும், ஆர்வமும், சம தர்மமும் பெருகுமாறு புத்த பகவானது திருநாளைப் பெரு நாளாகக் கொண்டாடுவோமாக. பற்பலப் பண்டைப் பெருமைக ளெல்லாம் இழந்து இப்பொழுது மத பேதத்தால் தவிக்கும் இந்தியா—ஜாதி வித்தியாசங்களால் இப்பொழுது பலவீன மடைந்திருக்கும் நமது பாரத கண்டம்—சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து இன்னலுறும் நமது மாதுரு பூமி—தரித்திரத்தால் தகிக்கப்படும் நமது ஜென்ம தேசம்—அன்னியர் ஆட்சியின் அடியில் அகப்பட்டு அடிமையா யிருக்கும் நமது தாய் நாடு—கல்வி யின்மையாலும், அறியாமையாலும், அநேக மூடக் கொள்கைகளாலும் அவதிப்படும் நமது பாரதவர்ஷம் பகவான் புத்தரது புனித உபதேசங்களால் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் சுதந்திரத்தையும் சாந்தியையும் அடையுமாக!

முதன் முதலாக, ஜப்பானியர் மேனாட்டு நவீன சாஸ்திரங்களையும், கலைகளையுங் கற்கத் தலைப்பட்டபோது மேனாட்டார் நகைத்தனர். 'எங்கள் ஓட்டத்தை இந்த மஞ்சள் நிறச் சப்பை மூஞ்சிகளா பிடிக்க முடியும்! நாங்கள் யார்? ஆகாயத்தைப் பொத்துக்கொண்டு 'தொப்' என்று பூலோகத்தில் குதித்தவர்க ளில்லையா!' என்றனர். 'கிப்ளிங்' என்னும் புலவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் 'கீழ் நாடு கீழ் நாடே! மேல் நாடு மேல் நாடே! ஏணி வைத்தாலும் எட்டுமா?' என்று பாடினார். ஜப்பானியர் வீறுகொண்டு எழுந்தனர். அல்லும் பகலும் உழைத்தனர். மேனாட்டு நூல்களைத் தாய் பாஷையில் மொழிபெயர்த்துக் குவித்தனர். உற்சாகமுள்ள வாலிபர்களை மேனாட்டுக்கு அனுப்பி, அரசியல், கைத்தொழில், பொருளாதாரம், நவீன சாஸ்திரங்கள், கலைகள் முதலியவைகளில் தேர்ச்சி பெற்று வரும்படிச் செய்தனர். அப்படி வந்தவர்களைக் கொண்டு அவர்கள் கொணர்ந்த புதிய ஞானத்தைத் தேசத்தில் பரப்பினர். கடைசியாக மேனாட்டார் 300 வருஷங்களிற் சாதித்ததை ஜப்பானியர் ஒரே 50 வருஷங்களில் செய்து முடித்தனர். இப்போது எல்லா தேசத்தாரும் மூக்கு முனையில் விரல் வைத்து அதிசயிக்கின்றனர். அரை நூற்றாண்டுக்குள் ஜப்பான் அடைந்த அபிவிருத்தி உலக சரித்திரத்திலேயே ஆச்சரிய மானதுதான்.

ஜப்பானியர், கூட்டு அபிவிருத்தியில் நம்பிக்கை யுடையவர்கள். தேச நலத்திற்காக உயிரைக்கூடப் பலிகொடுக்க ஆயத்தமாகி விடுகின்றனர். மேனாட்டிலோ தனிப்பட்டவனின் நலமே பிரதானமாகக் கவனிக்கப்படுகிறது. தனி மனிதனுக்காகவே குடும்பம், ராஜாங்கம் முதலிய யாவும் என்று நினைக்கின்றனர். ஜப்பானியர், இக் கூட்டு அபிவிருத்தியி லுள்ள நம்பிக்கையாலேதான் இவ்வளவு சீக்கிரம் முன்னேற்ற மடைந்தனர். ஜப்பானியர், ஒரு புதிய சாஸ்திரத்தையோ கலையையோ அதி சீக்கிரம் பயின்று தேர்ச்சி பெறும் ஆற்ற லுடையவர்களா யிருப்பது, அவர்களின் முன்னேற்றத்துக்கு மற்றொரு முக்கிய காரணமாகும்.

கி. பி. 12-வது நூற்றாண்டில், ஜப்பானியச் சக்ரவர்த்தியின் பலங் குன்றியது. ஆங்காங்கு அதிகாரிகளா யிருந்த டெமியோக்கள் (Daimyos) என்ற பிரபுக்கள், தங்கள் தங்கள் கையிற் சிக்கிய பூ பாகத்தைச் சுயேச்சையாய் ஆளத் தலைப்பட்டனர். ஜப்பான் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்தது. உள் நாட்டுச் சச்சரவுகள் பெருகின. பிரசித்தி பெற்ற தேசிய வீரர்களான 'சாமுராய்கள் (Samurai) டெமியோக்களின் கீழ் மிகவும் செல்வாக்குப் பெற்றனர். அவர்களுக்கு விசேஷ உரிமைகளும், விசேஷ கௌரவமும் அளிக்கப்பட்டன. போராடுவதையே கௌரவமான தொழிலாகவும் இதர, விவசாயம்,

வியாபாரம் முதலியவைகளைக் கேவலமான தொழில்களாகவும் அத்தொழில் புரிபவர்களை இழிகுலத்தோராகவும், ஜப்பானியர் நினைக்கத் தொடங்கினர்.

ஜப்பான், இந்நிலையிலிருந்த காலத்தில் அதாவது 19-வது நூற்றாண்டின் மத்தியில், ஐரோப்பாவிலிருந்து வெள்ளையர் வந்து இறங்கினர்; தங்களுடைய விசித்திரமான சாமான்களை விற்கத் தொடங்கினர். பணத்தைக் கொள்ளை கொள்ளையாகத் தங்கள் தேசத்திற்குக் கப்பல் ஏற்றினர். ஜப்பானியர் உடனே இந்த ஆபத்தை உணர்ந்து வெள்ளையரைத் துரத்தி அடித்தனர். வெள்ளையரோ விடவில்லை. துறைமுகத்தை முற்றுகை யிட்டுக்கொண்டே யிருந்தனர். ஜப்பானியர், சில டச்சுக்காரர்களைப் பிடித்துக் கொண்டுபோய் தங்கள் முன், கூத்தாடச் செய்தனர்; இன்னும் படாத பாடெல்லாம் படுத்தினர். வெள்ளையர், லக்ஷியம் பண்ணவே யில்லை. தேசத்தில் புகுந்து குற்றங்கள் புரிந்துவிட்டாலும் ஜப்பானியச் சட்டப்படி தங்களைத் தண்டிக்கக் கூடாது என்றும், தங்கள் தேசச் சட்டப்படியே நடத்த வேண்டுமென்றும் விசேஷ உரிமைகள் கோரினார்கள். இந்தத் தொல்லையை டெமியோக்களால் நிவர்த்திக்க முடியவில்லை. தேசிய வீரர்களான சாமுராய்கள் ஆபத்தை உணர்ந்தனர். அவர்கள் அபார தேச பக்தியும், புத்தி தீக்ஷண்யமும் உடையவர்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து, 'தலைவர்களே! ஒன்றுபடுங்கள். ஜப்பானை ஒன்றுபடுத்துங்கள். சக்ரவர்த்தியைப் பழைய முழு அதிகாரத்துடன் சிம்மாசனத்தில் ஏற்றுங்கள். அன்னியர்களை விரட்டுங்கள்.' என்று பறை சாற்றினர்; எழுந்தனர். அவர்கள் முயற்சி விரைவில் பயனளித்தது. எல்லா டெமியோக்களும் தங்கள் தங்கள் அதிகாரத்தை அரசருக்குத் திருப்பிக் கொடுத்து அவரைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். ஆஹா! என்ன ஹிருதயம்! என்ன தேச பக்தி! என்ன ஒற்றுமை!

ஜப்பானியச் சக்ரவர்த்தி, மீண்டும் அரசு செலுத்தத் தொடங்கினார். ஜப்பானியர், மேனாட்டாரோடு பழகிய காரணமாய், அவர்களுடைய நவீன இயந்திரங்களையும், சாஸ்திரங்களையும் கற்க ஆவல் கொண்டனர். ஆகையால் 1853-ம் வருஷம் கம்மடோர் பெரி (Commodore Perry) என்பவரின் முயற்சியால் ஓர் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி மேனாட்டு வியாபாரிகள் ஜப்பானில் அனுமதிக்கப்பட்டனர்.

மேனாட்டார் உறவால் ஜப்பானியருக்கு ஓர் ஆவல் உண்டாயிற்று. மேனாட்டு இயந்திரங்களையும், விஞ்ஞான சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்றுவர வாலிபர்கள் பலர், ஐரோப்பாவுக்கு அனுப்பப்

பட்டனர். ஆங்கில பாஷையிலும், ஜப்பான் பாஷையிலும் உள்ள சிறந்த ஆங்கில நூல்களைத் தாய் பாஷையில் கொண்டு வந்தனர். அந்தப் புதிய ஞானத்தைத் தேசத்தில் இறைத்தனர். ஜப்பானியர் யாவரும் ஆவலோடு கற்றுத் தேர்ச்சி பெற்றனர். எங்கும் ஓர் புத்துயிரும் புது உணர்வும் உண்டாயிற்று.

தேசிய வீரர்களாகிய சாமுராய்கள் விசேஷ உரிமைகள் பெற்றிருந்தார்கள் அல்லவா? அவ் வுரிமைகள் நீக்கப்பட்டன. எல்லாரும் சமமாக்கப்பட்டார்கள். அவ்வாறு செய்யத் தூண்டியது சாமுராய்களாலேயே என்பது கவனிக்கத் தக்கது. உயர்வு தாழ்வு என்ற எண்ணம் தேசத்தில் உள்ளவரை எந்த தேசமும் முன்னேற்றமடைய முடியாது என்பதே அவர்கள் கருத்து. விவசாயத்தையும், வியாபாரத்தையும் இழிதொழில்களாகக் கருதி வந்த தப்பபிப்பிராயத்தை நீக்கினர், வியாபாரத்தால் மேனாடு அடைந்துள்ள உன்னத உயரிய நிலையை உன்னி, அதில் சிரத்தை எடுத்துக்கொண்டனர். தங்கள் தங்கள் நிலங்களைக் கவனிக்கத் தொடங்கினர்.

1869-ம் வருஷம், ஓர் விசேஷ வாக்குத்தத்தம் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டது. அதில் 'எந்தக் கிராமத்திலும், எந்தக் குடும்பத்திலும், எந்த நபரும் கல்வி யில்லாதவனாக இருக்காதவாறு கல்வி யளிக்கப்படும்' என்று கண்டிருந்தது. அந்த வாக்குத்தத்தம் அவ்வாறே பரிபூரணமாய் நிறைவேற்றப்பட்டது.

சர்வகலாசாலைகள் பல, மேனாட்டு முறைப்படி ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பாவுக்குச் சென்று, நவீன சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்று வந்தவர்கள் உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டனர். சிறந்த கல்வித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. கல்வியிலாகா ஏற்படுத்தி, புதிய பாடப் புத்தகங்களை இயற்றினர். நாடு முழுதும் ஒரே மாதிரியான பாடப் புத்தகங்கள் வைக்கப்பட்டன.

தற்போது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆறு வருஷம், சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. தாய் பாஷையிலேயே சகல நவீன சாஸ்திரங்களும் போதிக்கப்படுகின்றன. ஆங்கிலம் இரண்டாவது பாஷையாகவே கற்பிக்கப்படுகிறது. தேசிய நோக்கத்தைப் பூர்த்தி செய்யத்தக்க வீரஞ் செறிந்த ஆற்றல் வாய்ந்த வாலிபர்களை உண்டாக்க வேண்டியதே ஜப்பானியக் கல்வித் திட்டத்தின் நோக்கம்.

உபாத்தியாயர் திருப்திகரமானவரா யில்லாவிட்டால், அவரை விலக்கிவிட மாணவர்களுக்கு உரிமையுண்டு. இதனால் மாணவர்கள்

கட்டுக் கடங்காதவர்களாய்ப் போய்விடவில்லை, தங்களுக்குக் கிடைத்த உரிமையை அவர்கள் துர்வினியோகப்படுத்துவதுமில்லை. மாணவர்களுக்கு மிகுந்த பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'நீங்கள் ஏன் படிக்கிறீர்கள்?' என்று கேட்டால், 'தாய் நாட்டிற்குத் தொண்டு செய்வதற்காக' என்றே சொல்லுகிறார்கள். கல்விக்காக ஏராளமான பொருள் செலவிடப்படுகிறது.

கைத்தொழில், விஞ்ஞான சாஸ்திரம், விவசாயம், வியாபாரம், சட்டம், இலக்கியம், ஸிவில் சர்விஸ் முதலியவைகளுக்காகத் தனித் தனிக் கல்லூரிகள் கட்டப்பட்டிருக்கின்றன. விவசாயத்தைப் போதிக்க இரண்டு காலேஜ்களும், 5 ஹைஸ்கூல்களும், 200 சிறிய பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சாஸ்திரீய முறையில் விவசாயஞ் செய்யப்படுகிறது. ஜப்பானில் முன் விளைந்ததைக் காட்டிலும் இப்போது இரட்டிப்புத் தானியம் விளைவிக்கப்படுகிறது. விவசாயத்தில் ஜப்பான் அமெரிக்காவைக் காட்டிலும் முன்னேறிவிட்டது. சுமார் 50½ லக்ஷம் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றன. அரிசியே அவர்களுடைய நாட்டுணவு. சிறிது கோதுமையும் விளைவிக்கப்படுகிறதுண்டு.

விவசாயிகள் தங்கள் நலத்திற்காகச் சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சர்க்காரும் விவசாயத் துறையில் சகாயங்கள் செய்துவருகின்றது. விவசாய ஆராய்ச்சியும் நடைபெறுகிறது. விவசாயிகள் பட்டுப் பூச்சி வளர்க்குந் தொழிலையும் உபதொழிலாகச் செய்கிறார்கள். அதின் மூலமும் நல்ல வருவாய் கிடைக்கிறது. ஒவ்வொரு குடிசையிலுங் கைராட்டை சுழலுகிறது. அதிலிருந்தும் இயந்திரசாலைகளிற் செய்யப்படாத தேசீய ஆடைகளைத் தயார் செய்துகொள்ளுகிறார்கள். காகிதச் சாமான்களும், விசிறிகளும் குடிசைகளிலேயே செய்யப்படுகின்றன. பெரிய பெரிய இயந்திரசாலைகளுக்குப் பக்கத்திலே குடிசைத் தொழிலும் நடைபெற்று வருகிறது.

1870-ம் வருஷம் முதன் முதலாக இருப்புப் பாதை போடப்பட்டது. 1872-ம் வருஷத்தில் முதலாவதாக பாங்கி திறக்கப்பட்டது. பிற்பாடு மேனாட்டை ஒட்டிய பாங்கித் திட்டமொன்றையும் அமைத்தனர்.

கப்பல் கட்டும் தொழிற்சாலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும், செம்புச் சுரங்கங்களும் அரசாங்கத்தின் மேற்பார்வைக்குக் கொண்டு வரப்பட்டன.

1870-ம் வருஷம் முதன்முதலாகப் பஞ்சாலைகளும், பட்டாலைகளும் கட்டப்பட்டன. உல்லன் சாமான்கள், காகிதம், கண்ணாடி,

இரும்பு, உருக்குச் சாமான்கள் முதலியவைகள் செய்வதற்காகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்க ஆதரவைப் பெற்று, பெரிய பெரிய வியாபாரக் கம்பெனிகள் தோன்றின. ஜப்பான் சீனாவோடும், ருஷியாவோடும் போர்புரிந்து வெற்றி பெற்றபின் ஜப்பானியக் கைத்தொழிலும் வியாபாரமும் எதிர்பாராத அளவுக்கு மிகைத்துவிட்டன.

1884-ம் வருஷம் வியாபாரிகள், தொழிலாளர் இவர்களிடையே ஒற்றுமை நிலவுவதற்காகச் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர் சங்கங்கள் நிறுவப்பட்டன. தற்போது அவ்வளவு சிறிய ஜப்பான் தேசத்தில் ஆயிரக்கணக்கான சங்கங்கள் இருக்கின்றன

வியாபாரச் சங்கங்களும், வியாபாரப் பொருட்காக்ஷிசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் புதுப்புதுக் கைத்தொழில்களை நாட்டில் புகுத்தியது.

1889-ம் வருஷம் இளங்கோ ஈட்டோ (Prince Ito) என்பவர் ஜெர்மனியைப் பின்பற்றி ஓர் புதிய அரசியல் திட்டம் தயாரித்தார். அதன்படி அரசியல் முறையானது மாற்றி அமைக்கப்பட்டது. பழைய திட்டத்தை முழுதும் அழித்துவிடவில்லை. புதிய அரசாங்கத்தில் சக்கிரவர்த்தியே தலைவராயிருக்கிறார். பிரதிநிதிகள் சபையொன்றும் பிரபுக்கள் சபையொன்றும் ஏற்படுத்தப்பட்டன. மேனாட்டு அரசியலுக்கும் ஜப்பானிய அரசியலுக்கும் முக்கிய வித்தியாசமென்னவென்றால், பிரதிநிதிச் சபையிலுள்ள பெரும்பான்மைக் கக்ஷியிலிருந்தே மந்திரி சபை அமைக்கப்படுவதில்லை. சக்கிரவர்த்தியே ஆற்றல் வாய்ந்த ஒருவரைப் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுப்பார். அப் பிரதம மந்திரி தனக்கு விருப்பமான சகாக்களைப் பொறுக்கியெடுப்பார். தீர்மானத்தில் தோல்வியுற்றால், மந்திரி சபை ராஜிநாமாச் செய்ய வேண்டியதில்லை. சேனைக்கும், கப்பல் படைக்கும் மந்திரியாய் நியமிக்கப்படுபவர் தாம் சேனைத் தலைவராகவோ, கப்பல் படைத் தலைவராகவோ இருக்கவேண்டும். அவர்களுடைய மந்திரிப் பதவி, மற்ற மந்திரிகள் வருவதையும் போவதையும் பாதிக்காது.

சென்ற மஹா யுத்தத்தின்போது, ஜப்பானுக்கு சர்வாங்க யோகம் பிறந்தது. மேனாடு முழுதும் யுத்தத்தில் ஈடுபட்டுவிட்டதால், ஜப்பான் சரக்குகளுக்குக் கிராக்கி அதிகரித்தது. பஞ்சு, பட்டு ஆடைகள் ஐரோப்பாவுக்கும் ஏற்றுமதியாயின. பிரமாண்டமான புதிய பஞ்சாலைகளும், கைத்தொழிற்சாலைகளும் கட்டப்பட்டன. ஜப்பானுக்குக் கொழுத்த வேட்டை கிடைத்தது.

1894-ம் வருஷம் கணக்கிலேயே யில்லாத ஜப்பான் இன்று பொருளாதார உலகத்தில் கேந்திர ஸ்தானம் வகிக்கின்றதுடன் கைத்தொழில் நாடுகளுக்கோர் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

தொழிற்சாலைகளில் நூற்றுக்கு 60 பெண்கள் வேலை செய்கிறார்கள். கைத்தொழிலின்றி மீன் பிடிப்பதிலும் 13 லக்ஷம் பேர் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர். 'ஒஸாகா' (Osaka), 'கோபே' (Kobe), 'டோக்கியோ' (Tokyo), 'யோகோகாமா' (Yokohama), 'நாகோயா' (Nagoya) ஆகிய ஜில்லாக்களே பிரதான கைத்தொழிற்சாலைகள் உள்ள இடங்கள். 'க்யுஷின்' (Kyushin), 'ஹொக்காய்டோ' (Hokkaido) என்னுமிடங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. அங்கே விவசாயமும் செழிப்புற்று விளங்குகிறது.

ஜப்பானிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகுஞ் சரக்குகள், தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றக்கூடிய விதமாக இருக்கவேண்டுமென்னும் நோக்கத்தோடு, ஏற்றுமதியாகு முன் சரக்குகளைப் பரிசோதிக்கப்படவேண்டும் என்று சமீபத்தில் சட்டமொன்று இயற்றியிருக்கின்றனர்.

நவீன ஜப்பான், இங்கிலாந்தை ஒட்டிப் பயிற்சி அளிக்கப்பட்ட கப்பற் படையையும், ஜெர்மனியை ஒட்டிப் பயிற்சி யளிக்கப்பட்ட சேனையையும், மேனாட்டுக்குச் சமமான—ஏன்? மேலான விவசாய, வியாபார, கைத்தொழில் முறைகளையும் உடையதாய் உச்சஸ்தானத்தில் கெம்பீரமாய் வீற்றிருக்கிறது. மேனாட்டாரின் வியாபார தந்திரங்களையும், மார்க்கட்டு நிலவரத்தின் போக்கையும் அப்போதைக்கப்போது அறிந்து தெரிவிக்க ரகசிய ஆட்கள் வேலை செய்கின்றனர்.

ஜப்பானியர், மேனாட்டாரின் நவீன சாஸ்திரங்கள், கலைகள், மோட்டார், பைசிக்கிள், தந்தி, டெலிபோன், மின்சாரம், பாங்கி, ரயில்வே, படக்காக்ஷி, கிராமபோன், ஹோட்டல், பத்திரிகை முதலியவைகளை ஏற்றுக்கொண்டாலும் ஐரோப்பாவின் நாகரீகம், சமூக சமுதாய பழக்க வழக்கங்கள், கொள்கைகள் முதலியவைகளை முழுதும் ஏற்றுக்கொண்டு, லோகாயத மதஸ்தர்கள் ஆகிவிடவில்லை. வேலைக்கு மேனாட்டு உடை யணிந்து சென்றாலும், வீட்டுக்கு வந்தவுடன் தேசீய ஆடைகளை அணிந்து, கட்டையால் செய்த பாதரக்ஷைகளை (Geta) மாட்டிக்கொண்டு, 'டொக்கு டொக்' கென்று நடந்து போய், பயபக்தியுடன் ஆலயங்களில் வணங்குகிறார்கள். பழைய தேச ஆசாரங்கள் சிறிதும் மாறுபடவில்லை. பெண்கள் அதே காகிதக் குடைகளைப் பிடித்துக்கொண்டு போவதையும், வீட்டையும் பிள்ளைகளையும் கவனிப்பதையும் புறக்கணித்துவிடவில்லை. முன்போலவே வாழ்க்கை நடத்திவருகின்றனர். நாற்காலி, மேஜைகளை வீடுகளில் புகுத்தவில்லை. ஜன்னல், சுவர், பாய், பாத்திரங்கள் எல்லாம் இன்னும் சித்திர மயமாகவே யிருக்கின்றன.

ஓவியந் தீட்டுவதிலும், கவிகள் பாடுவதிலும், இயற்கை அழகைக் கண்டு மகிழ்வதிலும் மிகுந்த ஆர்வ முடையவர்களாகவே யிருக்கின்றனர். சக்ரவர்த்தி முதல் தோட்டிவரை பாட்டுகள் இசைக்கிறார்கள். கலாசாலை மாணவர்கள் பிரசித்தி பெற்ற கவிஞர்களாக விளங்குகிறார்கள். சின்ன பாட்டுக்கள் (Tanka) இசைப்பதில் வருஷா வருஷம் போட்டிப் பந்தயங்கள் நடைபெறுகின்றன.

தங்களுடைய தேசியச் சங்கீதத்தையும் மேனாட்டுச் சங்கீதத்தையும் அனுபவித்து வருகிறார்கள். மேனாட்டாரிடமிருந்து கற்ற 'பியானோ' வாத்தியம் வாசிப்பதில் பிரசித்தி பெற்று விளங்குகின்றனர். 'ஷிண்டோ,' 'புத்த' மத நம்பிக்கைகளும் பழைய சமூக, சமுதாயப் பழக்க வழக்கங்களும் இன்னும் இருந்து வருகின்றன. சுருங்கச் சொன்னால், ஜப்பானியர்கள் புராதன நாகரீகத்தை நவீன மேனாட்டு நாகரீகத்தால் மாற்றிக்கொள்ள வில்லை எனலாம்.

ஜப்பானில் பத்திரிகைகள் மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. பெண் ஆசிரியர்களும் திறமையாகப் பத்திரிகைகளை நடத்துகின்றனர். டோக்கியோ நகரத்திலிருந்து மட்டும் 761 பத்திரிகைகள் வெளியிடப் படுகின்றன. சில பத்திரிகைகளில் ஒரு நாளைக்குச் சுமார் மூன்று லட்சம் பிரதிகள் செலவாகின்றன. மிகவும் எளியவர்களும் பத்திரிகைகள் படிக்கிறார்கள்.

சிறந்த சுகாதாரச் சட்டங்களும், உயரிய மருந்துச் சாலைகளும், தேர்ச்சி பெற்ற டாக்டர்களும் ஜப்பானின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. டோக்கியோ நகரத்தில் மட்டும் 1100 ஸ்நானக் கட்டங்கள் இருக்கின்றன. அவைகளில் நாள்தோறும் சுமார் 5 லக்ஷம் பேர் குதித்து, நீந்திக் களிப்படைகின்றனர்.

ஜப்பானிய ஜனத் தொகை (1921-ம் வருஷத்திய கணக்குப்படி) 5,97,51,146. வருஷத்துக்குச் சுமார் 7,50,000 வீதம் ஜனத்தொகை பெருகி வருகிறது. இப்போது முந்தி யிருந்ததைப்போல் இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. கர்ப்பத் தடைக்கு அரசாங்கம் விரோதமாய் இருக்கிறது. ஜப்பானிய சாமான்ய ஜனங்களும் அதை வெறுக்கின்றனர்.

முன்னாலே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா முதலிய கண்டங்கள் சும்மா கிடந்தன. வெள்ளையர் 'ஜாம் ஜாம்' என்று குடியேறி, கொடியை நாட்டி தமதாக்கிக் கொண்டார்கள். அமெரிக்கச் செவ்விந்தியர்களையும் ஆஸ்திரேலியச் சுதேசிகளாகிய 'மயோரிக்'கர்களையும் ஒரு பூண்டுகூட இல்லாது அழித்துவிட வழிகோலினர்.

அம் மாதிரிக் கண்டங்கள், ஜனத் தொகை பெருகித் தவிக்கும் ஜப்பானுக்கு இப்போது எங்கே கிடைக்கும்! 1921-ம் வருஷ 13,117 ஜப்பானியர் வெளியேறி சைனாவிலுள்ள மஞ்சூரியாவுக்கும், மத்திய ஆசியாவுக்கும், வட அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவுக்கும், பிரேஜில் (Brazil) பிரதேசத்திற்கும் போய்க் குடியேறினார்கள். அமெரிக்கா, ஜப்பானின் முற்போக்கைக் கண்டு அஞ்சி 1924-ல் சட்டமொன்று இயற்றி, கலிபோர்னியாவிலுள்ள ஜப்பானியருக்குச் சங்கடத்தை உண்டுபண்ணியது. இங்கிலாந்தோ, சிங்கப்பூரில் பிரமாண்டமான கப்பற் படையை நிறுத்தியது. ஆஸ்திரேலியாவோ, ‘உஷார்! வராதே’ என்றது. பாவம்! என்ன செய்யும் ஜப்பான்? பக்கத்திலுள்ள மகா விசாலமானதும், சகல வளங்களுமுடையதும், மிகுந்த ஜனப் பெருக்கைப் பெற்றதுமான சீனாவை ஒரேயடியாக இடித்துப் பார்க்கிறது. ஜப்பான் சமாதானமாய்ப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுமா? அல்லது உலக சமாதானத்துக்கு உலை வைக்குமா? காலச் சக்கரம் சுழன்றுகொண்டே யிருக்கிறது. இதுபோது ஜப்பானுக்கும் சைனாவுக்கும் நடக்கும் சண்டை, உலக அமைதிக்கோ அல்லது அழிவுக்கோ வென்றேதான் எண்ணவேண்டி யிருக்கிறது. இனி என்னென்ன வெல்லாம் நடக்கப்போகின்றனவோ! இந்தக் கண்களாலே என்ன என்ன காட்சிகளைத்தான் எவ்வளவு எவ்வளவு காணப் போகிறோமோ!

சம்பாவதியின் பிராணத் தியாகம்.

(சரித்திரச் சிறு கதை.)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், “பாரதி.”

“உயிரை விட்டவன்தான் வாழ்வான்; விடாதவன் வீழ்வான்.” பரம யோகியைப் போலவும், பரம தியாகியைப் போலவும் எவனொருவன் தன்னைத்தானே பலிகொடுத்துக் கொள்ளுகிறானோ அவனைத்தான் வெற்றி தேவி மணந்து கொள்ளுகிறாள். விதி வலிது; அதை யெதிர்த்துப் போராடுகிறவர்களே மஹா வீரர்கள். துன்புற்றவர்களின் துயரப் புண்களை ஆற்றுவதில் பிரகிருதி மாதாவுக்கு அவள்தான் நிகர். ஆசா பாசங்களிலே அலுத்துப் போய் “உலகம் பொய், சம்சாரம் சாகரம், தெய்வம் கண்ணற்றது” என்று

தன் வெறுப்புற்றுத் தற்கொலை செய்துகொள்ளப் போகிறவர்களைக் கூட அந்த இயற்கை தேவி தனது வாத்சல்யமான பாராமரிப்பு வலையிலே யிழுத்துப் போட்டுக்கொண்டு மகிழ்விக்கிறாள். அத் தன்மையான தேவி பிரகிருதியின் அகண்ட விசால ஹிருதயத்திலே வீற்று, உயர்வும் புகழுமுற்றிருக்கும் ஓர் ஒப்பற்ற வீர மகவைப் பற்றி யெழுத முனைந்தோம்.

மஹா ராணா பிரதாப சிம்ஹன் ஹல்திகட்டத்துச் சண்டையிலே அடியோடு தோற்றுப் போய் ஆரவல்லிக் காட்டுக்குள்ளே அடைக்கலம் புகுந்திருக்கிறார். அப்போது அங்கு நடந்த ஓர் அற்புதமான சிறு சம்பவம்தான் இங்கே கொடுக்கப்படுகிறது.

போரின் போரால் மனிதர் சகோதரத்துவத்தை மறந்து மனிதருக்குச் செய்யும் கொடுமைகளைச் சொல்லி முடியாது. கொடுமையரின் அரசனது நாட்டில் வாழ்வதைக் காட்டிலும் காட்டில் வாழ்வது மேல் என்று பெரியோர் சொல்லியிருக்கிறதைப் போன்று, ராணா பிரதாப சிங்கும் சுதந்திரம் பரிமளிக்கும் காட்டிற்குச் சென்றுவிட்டார் போலும். மரங்களடர்ந்த ஒரு அழகிய பள்ளத்தாக்கில் கலகல வென்று சப்தித்துக்கொண்டு ஓடும் ஓர் சிறிய ஆற்றங் கரையில் குடிசில் ஒன்று கட்டி அங்கு மஹா ராணா தன் குடும்பத்துடன் வசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு சம்பாவதி என்ற 11 வயதுள்ள ஒரு செல்வியும் சுந்தர் சிங் என்ற 4 வயதுள்ள ஒரு செல்வனும் உண்டு. இந்த இரண்டு பேரும் அரண்மனையில் பிறந்து வளர்ந்து சகல அரச சுகங்களையும் அனுபவித்திருந்த போதிலும், இப்பொழுது கஷ்ட காலத்தால் வனத்தில் தங்களது அருமை மாதா பிதாக்களுடன் தங்கித் தங்களுக் குண்டாகும் துன்பங்களை ஒருவாறு தாங்கி வந்தார்கள். விதி வலிது! விதி யாரை விட்டது! பல தடவை அக்பரால் தோற்கடிக்கப்பட்ட ராணா பிரதாப் தனது விஸ்வாசமுள்ள அற்ப சேனையின் உதவியைக் கொண்டு, இழந்த தனது ராஜ்யத்தை மீண்டும் பெற விரும்பினார். அவரது தன்னம்பிக்கையைக் கவனியுங்கள்! அவரது வீரத்தைப் பாருங்கள்!! அவரது தீரத்தை நோக்குங்கள்!!! பாரத வீரம் இவரிட மல்லவா கொழுந்துவிட் டெரிந்துகொண் டிருக்கிறது?

அக் காலம் வசந்த காலமா யிருந்தது. காலையிலும் மாலையிலும் சூரியனது கிரணங்களால் மரஞ் செடி கொடிகளும் புல் பூண்டுகளும் அழகைக் கொட்டிக்கொண்டு மனோ ரம்மியமாகக் காணப்பட்டன. இடம் மலை; அதுவும் பள்ளத்தாக்கு; அதில் ஓர் சிற்றாறு; காலம் மாலை; அதுபோது தங்கத்தையே உருக்கி வார்த்தாற்போலிருக்கும் அஸ்தமன சூரியனது தோற்றம்; உபசாணைக்குத் தென்றல் காற்று; இருப்பிடம் ஓர் பர்ணசாலை. இவைகளில்லவா இயற்கைத்

தேவி நர்த்தனம் செய்துகொண்டிருப்பாள். காட்டில் தானாகவே புஷ்பித்துக் கொண்டிருக்கும் வாசனை கமழும் பற்பல பன்னிறப் புஷ்பங்களும், சுதந்திரத்துடன் ஆடிப் பாடிப் பறக்கும் பட்சிகளின் கீதங்களும், வண்டினங்களின் ரீங்காரமும் மந்தமாருதமும் அது சமயம் மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தன. சில செடி கொடிகளின் இலைகள் மாலையில் வாடுவதைப் போன்று சாயங்காலம் ஆக ஆக அரசகுமரி சம்பாவதியின் மனதை ஏதோ ஒரு விஷயம் புண்படுத்த ஆரம்பித்தது. நதிக் கரையிலுள்ள சிறு கற்களைச் சேகரிப்பதும் அவைகளில் ஒவ்வொன்றாய் ஆற்றில் எறிவதும், கல் லெறிவதால் ஏற்படும் நீர்த் திவலைகளைப் பார்ப்பதும் சுந்தருக்கு மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருந்தது. அப் பையனது முகம் இராஜ தேஜசுடன் ஜொலித்தாலும், திடீரென்று முகப் பொலிவு குன்ற ஆரம்பித்தது. ஐயோ! அச் சிறுவனுக்குப் பசி வந்துவிட்டது! எவ்வளவு நேரம் கவலைகளை ஒருவன் மறக்கக் கூடும்? எவ்வளவு நேரம் ஒருவன் பசியைத் தாங்கக்கூடும்? அன்றியும் சுந்தர் மிகவும் இளைஞனல்லவா! எவ்விதம் சகிப்பான்!! "அக்கா! அக்கா!!" என்று கூப்பிட்டுத் தனது சகோதரியிடம் தனது பசியைத் தெரிவித்துக் கொண்டான். அந்தோ! அவ்விளம் பெண் என்ன செய்வாள்!! பசியின் கொடுமையை—உணர்ச்சியை மறக்கச் செய்யுமாறு ஒரு சிறு கதை சொல்ல ஆரம்பிக்கவே, அப் பையன் அதை அதிக ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

"முன் ஒரு காலத்தில் நமது தேசத்தில் ஒரு அரசர் இருந்தார். அவர் யுத்தத்தில் தோல்வி அடைந்து, தனது ராஜ்யத்தை இழந்து, காட்டிற்குச் சென்று, தனது உயிரைக் காப்பாற்றிக்கொண்டார். ஓர் தினம் அவருக்கு அதிகமாகப் பசி வந்தது. தான் வைத்திருந்த ரொட்டி ஒன்றை எடுத்துப் புசிக்கப்போனார். அப்பொழுது "கா, கா" வென்று கத்திக்கொண்டு ஒரு காகம் அவரிடம் பறந்து போய், அந்த ரொட்டியைப் பிடுங்கிக்கொண்டு சென்றது" என்று கூறினாள். "அப்பொழுது ராஜா அழுதாரா?" என்று சுந்தர் சிங் உடனே கேட்டான். "அவர் உன்னைப்போல ஒரு அழுமூஞ்சிப் பிள்ளையல்ல. இந்த அற்ப விஷயத்திற்காக அவர் அழுவேமாட்டார்" என்று பதில் கூறினாள். "நான் அழும் பையனா? இல்லை; நான் ஒரு நல்ல பையன்" என்றான் சுந்தர். "நீ நல்ல குழந்தையானால், தின்பண்டத்திற்காக அழ மாட்டாய்" என்று சொன்னாள் சம்பாவதி.

கொஞ்ச நேரம் பொறுத்துக்கொண்டிருந்தான். பசியின் கொடுமை பொல்லாதது. "பசி வந்திடப் பத்து குணங்களும் பறந்துவிடும்" என்று அறிஞர் ஒருவர் சொல்லியிருக்கிறார். இரண்டாம் தடவை பசி வந்தவுடன் அழுது, தனது அதிகப் பசியின் கொடுமை

யைத் தன் சகோதரியிடம் கூறினான். தனது அருமைத் தம்பியினது கடும்பசியின் உணர்ச்சிகளைக் கண்டு, சம்பாவதி எல்லையற்ற துயரம் அடைந்தாள். "உனக்கு ரொட்டி கொடுக்கிறேன். கூட வா" என்று சொல்லி எழுந்திருக்கும்பொழுது, தனது பசியால் ஏற்பட்ட மயக்கத்தால் அப்படியே உட்கார்ந்துகொண்டான். அப்பால் அவனுக்கு ஒரு காட்டு மலர் மாலை சூட்டி மகிழ்வித்தாள். திடீரென்று பையன் அழ ஆரம்பிக்கவே, அச் சிறுவனை அவள் கவனித்துப் பார்த்தபொழுது, அவனுடைய கழுத்தில் ஓர் பாகம் கறுத்து, வீக்கமடைந்திருப்பதையும், அதே தருணத்தில் ஓர் வண்டு பறந்து செல்வதையும் கண்டாள். பிறகு அவள் தன் சகோதரனை அன்பு மொழிகளால் தேற்றி, வண்டு கடிக்கு ஒரு பச்சிலையைப் பிடுங்கி அதன் சாற்றை வீக்கத்தில் தடவிக், தங்களுடைய இருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனாள்.

ஒரு தனிமையான கானகத்தின் மத்தியில் கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய குடிசையில், ராணாவும் அவருடைய மனைவி குணவதியும், பிள்ளைகளும் வசித்துவந்தார்கள். மூங்கிற் புதர்கள் அக் குடிலைச் சுற்றிக் கோட்டை மதில்கள்போன்று அடர்த்தியாய் வளர்ந்திருந்தன. இச் சதிபதிகள், இப் பெரும் கஷ்டத்தில் சிக்கி வறுமையால் வாட்டப்பட்டுக்கொண்டிருந்தபோதிலும், அவர்களிடத்தில் இராஜபுத்திர வீரம் நன்கு விளங்கிற்று. ஆனால் இத் தருணத்தில் தம்பதிகளிருவரும் ஓர் கவலையில் ஈடுபட்டுச் சிந்தனா சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். சிறிது நேரம் கழிந்த பிறகு, ராணா பிரதாப சிங் தனது உயிரனைய பத்தினியைப் பார்த்துச் சொல்லியதாவது: "என் கண்மணி, குணவதி! நமது கஷ்ட காலத்தைப் பார்; நம்முடைய துர்அதிர்ஷ்டத்தைக் கவனி. நமது குடும்பமே வறுமையின் அக்கினியால் தகிக்கப்படுவதால், நம்மை இன்று தினம் பார்க்க வந்த அதிதிக்கு அன்னம் எவ்விதத்திலும் கொடாது அனுப்பியது என்னிருதயத்தைப் பிளக்கிறது; தாங்க முடியவில்லை. இதுவா எனது நேர்மைக்குப் பலன்? இராஜஸ்தானத்திற்குத் தலைவர்களாகவும், க்ஷத்திரிய வம்சத்திற்கே திலகங்களாகவும் இதுவரைக்கும் விளங்கிவந்த சித்தூர் அரசர்களின் வம்ச வழி வந்த நான், இவ் வறுமையின் கொடுமையால்—ஐயோ, என்னைத் தேடி, என்னிடம் அன்புடன் வந்த அதிதிக்கு அன்னம் அளிக்காது அனுப்பிய இந்த அவமானம் என்னிருதயத்தை விட்டு என்றுமே அகலாது. இது எங்கள் குலத்திற்கே ஓர் களங்கம். தெய்வமே! என் செய்வேன்!! 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழி என்னில் பொய்த்துவிட்டதா? இந்த அவமானத்தை எவ்வாறு சகிப்பேன்! இந்த அவமானத்தைக் காட்டிலும் மரிப்பது

மேலல்லவா? நான் எவ்வாறு என் உயிரைத் தாங்கிக்கொண்டிருப்பேன்! என் வாழ்வு பாரமாகவும், கசப்பாகவு மிருக்கிறது'' என்று இவ்வாறு சொல்லிக்கொண்டே அவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்தார். ஆனால் அப்பொழுது தனது நாதரது தலையைத் தன் மடிமீது தூக்கி வைத்து, அங்கிருந்த இலைகளால் அவருடைய முகத்தில் குணவதி வீசவே சற்று நேரத்தில் அவர் தன்னுடைய கண்களைத் திறந்து பார்த்தபொழுது, பத்தினி குணவதி அடியிற்கண்டவாறு சொன்னாள்:

''எனது உயிரனைய கணவரே! என் வாழ்வின் பொக்கிஷமே!! என் ஹிருதய சிங்காதனத்தில் சதா அரசு செலுத்திக்கொண்டிருக்கும் பிரபுவே!!! தாங்கள் படும் பாடுகளை யெல்லாம் நான் பார்க்கப் பார்க்க, என்னால் தாங்க முடியவில்லை; தவிக்கிறேன். யாவும் விதியின் பயனே! விதி வலியை ஜெயிக்க முடியாது. உங்களைப்போன்ற வீராதி வீரரே, ராஜாதி ராஜரே கவலைகளைக் கண்டு, துன்பங்களைப் பார்த்துத் துயர் அடைந்தால், கேவலம் பெண்ணாகிய நான் என்ன செய்ய முடியும்? வீரதீரராகிய தங்களை இவ்வுலகில் ஆற்றுவதற்கும் தேற்றுவதற்கும் வேறு ஒரு மனிதர் உண்டோ? கருணாசாகரமாம் ஆபத் சகாயராகிய கடவுள் நம்மைக் காப்பார்; அவரிடத்தில் நம்பிக்கை வையுங்கள்; அவர் ஒருக்காலும் நம்மைக் கைவிடார்.'' அதற்கு, ''என் அன்பின் உறைவிடமே! எனது வாழ்வை இனிப்பிக்க வந்த என் வாழ்க்கைத் துணைவியே!! உனது அருமை வாக்குகளை நான் மறுக்கவில்லை. நீ என்னிடத்தில் பூண்டிருக்கும் அளப்பரிய அன்பை அதிகமாக அறிவேன். நாம் இல்லற தர்மத்தில் ஒழுகி, இராஜ நீதியில் சற்றும் பிசகாது சன்மார்க்கங்களைக் கடைப்பிடித்து நடந்துவந்தோம். ஆனால் இன்று நம்மிடம் வந்த அதிதிக்கு நமது எளிய நிலையால் ஒன்றும் கொடுக்காது, நாம் அனுப்பியது எனக்குக் கேவலமாயிருக்கிறது; இதுவரைக்கும் நான் பெரும் பெரும் துன்பங்களையும் துயரங்களையும் பொறுத்து, மாபெரும் இடையூறுகளையும் தாங்கி நின்று வந்தபோதிலும், இச் சிறு சம்பவம் என்னை நாணும்படி செய்துவிட்டது; இன்னும் என்னை வாட்டிக்கொண்டேயிருக்கிறது. ஐயோ! எனது அருமைக் குமரன் அக்ஷய குமார் வறுமையால் இறந்தபொழுதும், என் இனிய செல்வி சுவர்ண குமாரி இதேபோன்று பசி நோயால் மாண்டபொழுதும், நாம் இதே வறுமையால் வாட்டப்பட்டபொழுதும் நான் சற்றும் அதைரியமடையவில்லை. எனினும் இப்பொழுது நடந்தது என் மனத்தைச் சுட்டுக்கொண்டிருக்கிறது'' என்று சொல்லி, மீண்டும் ஓர் தடவை மூர்ச்சையானார். அத் தருணத்தில் சம்பாவதியும், சுந்தர் சிங்கும் வீட்டிற்குள் வந்தார்கள்.

குணவதி: ''என்ன! நீ தம்பியுடன் இதற்குள் இங்கு திரும்பி விட்டாய்?'' அதற்குச் சம்பாவதி சொல்லியதாவது: ''அம்மா! நான்

இப்பொழுது இங்கு திரும்பியிருக்கவே மாட்டேன். ஆனால்,......''

''ஆனால்......என்று இழுத்துப் பேசுகிறாய். நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை'' என்றாள் அவள் தாயார். ''அதிதியானோர் நமது வீட்டை விட்டுப் பசியுடன் போகக் கூடாதல்லவா? அதற்காகத்தான் இப்பொழுது வந்தேன்'' என்றாள் அரசிளங் குமரி. ''இச் சங்கதி உனக்கு எப்படித் தெரியும்? மற்றவர்களின் விஷயங்களை அறியும் ஒற்றர் தொழில் உனக்குத் தெரியும்போலிருக்கிறதே!'' என்று கேட்டாள் ராணி குணவதி. அதற்குப் பதில் சம்பாவதி சொன்னதாவது: ''என் பிரிய அன்னையே! இக் கெட்ட தொழில் எனக்குத் தெரியவே தெரியாது. நடந்த சம்பவத்தைப்பற்றிப் பிதா பேசிய வார்த்தைகள் வீட்டிற்குச் சமீபத்தில் வரும்பொழுது எனது காதில் விழுந்தன. ஆகையால் நான் அறிவேன். இப்பொழுது அதிதிக்கு ஒன்றுங் கொடுக்காது அனுப்பவேண்டிய அவசியமில்லை. இதைத் தந்தையாரிடம் அறிவியுங்கள்.'' இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் ராணா தன் கண்களைத் திறந்து, சம்பாவதியைப் பார்த்து, ''அருமைக் கண்மணி! உன்னால் ஆகாரம் கொடுக்க முடியுமா? உனக்கு எங்கிருந்து எவ்வாறு கிடைக்கும்?'' என, சிறிது நேரத்திற்குள் திரும்பிவிடுவதாகக் கூறி வெளியே போனாள். இந்நேரத்திற்குள் பையன் சுந்தர் சிங் ஆகாரமில்லாக் கஷ்டத்தாலும், அழுததின் அலுப்பாலும் அயர்ந்து தூங்கிவிட்டான். இரு ரொட்டிகளை எடுத்துக்கொண்டு கொஞ்ச நேரத்தில் சம்பாவதி அங்கு வந்தாள். தகப்பனார் அதைக் கண்டு, அதிக ஆனந்தம் அடைந்து, ''என்னரிய குமாரத்தியே! இது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது?'' என்று கேட்டார். அக் கேள்விக்கு அச் சிறுமி, ''பிதாவே! நேற்று எனக்குப் பசியில்லை. ஆனதால் எனக்குக் கொடுத்த அந்த இரண்டு ரொட்டிகளையும் ஓர் இடத்தில் பத்திரமாக வைத்திருந்தேன். இப்பொழுது தம்பி உறங்குவதால், இந்த ரொட்டிகளை விருந்தாளிக்குக் கொடுக்கலாம்'' என்று சொன்னாள். இவ் வருமை வார்த்தைகளைக் கேட்கவே, தகப்பனாருக்கு ஆனந்தக் கண்ணீர் வடிந்து, ''என் பிரிய செல்வமே! கடவுள் உன்னை என்றும் காப்பாற்றட்டும்'' என்று ஆசீர்வதித்தார். உண்மையாகக் கவனித்தால், சுந்தருக்குப் பசி உண்டாகும்பொழுது கொடுப்பதற்காகவே சம்பாவதி தான் உண்ணாது அந்த ரொட்டிகளை வைத்திருக்கவேண்டும். இந்த இளவரசி சம்பாவதியின் தியாகம் போற்றத் தக்கது.

ராணா பிரதாப் சிங்கும், அவருடைய குடும்பத்தார்களும் அவரிடம் அன்பு கொண்டு அவரைப் பின்பற்றிச் சென்ற சில நன்றியுள்ளவர்களும் அந்தக் காட்டில் அநேக அல்லல்களை அநுபவித்து வந்தார்கள். உயிரை உடலில் வைத்திருப்பதற்கு வேண்டியபடி சிறிது ஆகாரத்தையே உட்கொண்டு ராணா தனது நாட்களை அங்கு

கடத்தினர். குறைவான உணவால் அவரது தேகம் மெலிந்து நலிந்து சக்தி குன்றிக் காணப்பட்டது. அவர் இழந்த சுதந்திரத்தை மீண்டும் அடைய வேண்டுமென்ற தீர்மானமே, பற்பல பெருங் கஷ்டங்களையும் பொறுமையுடன் தாங்குவதற்கு முக்கிய காரணம்.

இதற்கு முன்னாள் இராணாவினது ஆட்கள் அடுத்த கிராமத்திலிருந்து கொஞ்சம் மாவு கொண்டுவந்து கொடுத்தார்கள். அதனால் ரொட்டி சுட்டு ராணி குணவதி எல்லோருக்கும் கொடுத்துவிட்டுத் தானும் தனது பர்த்தாவும் பட்டினி கிடந்தார்கள். ஆனால் இதைக் கண்ட சம்பாவதி தனக்குக் கிடைத்த இரு ரொட்டிகளைத் தன் தகப்பனாரிடம் கொடுக்கவே, தந்தை ராணா தன் மகள் சம்பாவதியை உச்சி மோந்து, முத்தங்கொடுத்துச் சொல்லியதாவது: "என் அருமைக் குழந்தாய்! இந்த இரண்டு ரொட்டிகளும் மிகக் களைப்புற்று வரும் அகதிக்குப் போதாது." இதைக் கேட்டுச் சம்பாவதி தன் தகப்பனாரிடம் ஒரு பைசாக் கொடுத்து, மாவு வாங்கிவரச் சொன்னாள். உடனே ராணா மாவு வாங்கிக்கொண்டு வருவதற்குச் சென்றார். பிரதாப் சிங் போன சொற்ப நேரத்திற்குப் பிறகு அகதி வீட்டை அடைந்தார். அவரை இன்சொல் கூறி வரவேற்று, அவருக்குப் பீடமும் கொடுத்து, மரியாதை செய்தாள். உட்கார்ந்துகொண்டு, "பிரிய புத்திரியே! நீ யார்?" என்று வந்தவர் கேட்கவே, சம்பாவதி "நான் தங்களுக்குத் தொண்டு செய்பவள்; ராணாவின் குமாரத்தி" என்றாள். இதைக் கேட்டவுடனே அந்த அகதிக்குப் பரிதாபமும் பிரியமும் உண்டாயிற்று. விரைவில் சம்பாவதி வீட்டிற்குள் போய், ரொட்டிகளையும் அதற்கேற்ற துவையலையும் கொண்டுவந்து, அவர் முன்பு அன்புடன் வைத்து, "கௌரவமிக்க பெரியோரே! எங்களுடைய எளிய நிலையால் தங்களுக்கு உயரிய உணவு படைக்க முடியவில்லை. இந்தக் கேவலமான ஆகாரம் தங்களுக்குப் பொருத்தமற்றது. தயவுசெய்து இதை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறி உபசரித்தாள். சம்பாவதியின் இம் மிருது வசனங்களைக் கேட்டுவந்த விருந்தினர் மகிழ்வுற்று, "இந்த ரொட்டிகளும் ருசியாகவே யிருக்கின்றன. ஆண்டவன் உன்னை ஆசீர்வதிப்பாராக! நான் மீண்டுமோர் தடவை இன்று இரவில் ராணாவைக் காண வருவேன்" என்றார். அகதி சாப்பிட்டுவிட்டு, அங்கிருந்து போய்விட்டார்.

பிறகு சம்பாவதிக்குக் களிப்பும் திருப்தியும் உண்டாயிற்று. இவளுடைய உபசாரணை இவளுக்கு ஆபத்தாகவே முடிந்தது. தான் அகதிக்கு உபசரித்த சந்தோஷத்தைத் தன் தாயாருக்கு அறிவிக்க வீட்டிற்குள் செல்லும்பொழுது, பலநாட் பட்டினியால் சக்தியற்று அவள் வாயிற்படியில் சோர்ந்து விழுந்தாள். இவ்வாறு சம்பாவதி

இருண்ட வாயிற்படியின் அருகிலுள்ள பாயில் விழுந்து, பசியின் கொடுமையால் மயக்கமாகி, மரணத் தறுவாயில் இருந்தாள். அவளருகில் கவலையுடன் நின்று, தாய் தந்தையர் அழுது வருந்தினார்கள். அப்பொழுது சுந்தர் தூக்கத்திலிருந்து எழுந்துகொண்டு, "அக்கா ஏன் இவ்வாறு கிடக்கிறாள்?" என்று வினவினான். அதற்கு, "பிரிய குழந்தாய்! அக்கா தூங்குகிறாள்" என்று ராணி குணவதி தேற்றினாள். சிறிதுநேரம் சென்றபிறகு, ராணா தன் மனைவியிடம் சொன்னதாவது:— நாம் பாதுஷா அக்பருக்கு எவ்விதம் மறுமொழி சொல்லுவது? நாம் அவரது ஆதீனத்தை ஒப்புக்கொண்டால் சமாதானம் பெறக்கூடும். நம்முடைய துன்பங்கள் அனைத்தையும் அவர் எப்படியோ விசாரித்து அறிந்திருக்கிறார். நமது தற்கால நிலைக்காக அவர் இரங்குவதாகக் காணப்படுகிறது. நமது குழந்தைகளின் ஸ்திதியை எண்ணி, நம்முடன் சமாதானம் செய்ய இணங்குகிறாராம். நமக்குப் பூரண சுதந்திரம் தருவதாகவும் வாக்களிக்கிறார். உன்னுடைய அபிப்பிராயமென்ன?" அப்பொழுது அங்கு யாரோ ஒருவரது காலடிச் சப்தம் கேட்கவே, "யார் அங்கே?" என்று ராணா வினவினார். பதிலில்லை. "அது இலைகளின் அசைவால் உண்டான சப்தமாயிருக்கலாம்" என்று குணவதி கூறியபொழுது, "தயாள குணம் மிகுந்த அக்பரின் தூதுவனது வருகையே அச் சப்தமாயிருந்தாலும் இருக்கக்கூடும்" என்றார் ராணா பிரதாப். இச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த சம்பாவதி. மிகக் கஷ்டத்துடன் சிறிது திரும்பிப் பார்த்துக் கூறியது என்னவெனில், "என் அருமைத் தந்தையே! இன்று தாங்கள் பாதுஷாவின் இரக்க குணத்தைக் கண்டீர்கள்; நாளைக்கு அவரது அடியில் ஒரு உத்தியோகத்தில் அமருவீர்கள்; நாளை மறுநாள் அவருக்கு அடிமையாகப் போய்விடுவீர்கள். அத் தினத்தில்தான் இராஜபுத்ர சுதந்திரத்தை ஆணி வேருடன் வெட்டுவதாகும். அவர் உங்கள் மக்களிடத்திலா அவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார்? ஆனால் உங்கள் குழந்தைகள் அவ்வளவு கோழைகளல்ல என்பதை அவர் அறியார். அந்த பாதுஷா ஹல்டிகாட் சண்டையை நினைக்கவில்லை போலிருக்கிறது!" இவ்வாறு வீரத்துடன் கூறிவிட்டு மறுபடியும் மூர்ச்சித்துப் போய்விட்டாள். தனது மகள் மயங்கிக் கிடக்கிறாளென்று எண்ணிய குணவதி, அவள் சிரசின்மீது கையை வைத்துப் பார்த்தாள். "அம்மா! எனக்கு மயக்கம் ஒன்றும் இல்லை. என் பிரிய அப்பா' அக்பரது வார்த்தைகளைக் கேட்காதீர்கள்" என்று மெல்லிய குரலில் சம்பாவதி சொன்னாள்.

இவ் வீர தீர உரைகளைக் கேட்டவுடன் ராணாவின் அதைரியம் பறந்துபோய், ராணாவுக்குப் புத்துயிர் பிறந்தது. "என் செல்வக் குமரியே! நான் உனது இம் மரணப் படுக்கையின் அருகில் நின்று, என்னுடைய உயிர் உடலில் இருக்கும் வரையில் நான் சித்தூரை

மறுபடியும் கைவசமாக்கப் போர் புரிவதாக இப்பொழுது சபதம் செய்கிறேன்! எனது பிள்ளைகளாகிய உங்கள் மீதுள்ள அன்பே எனது கடமையில் என்னைத் தவறச் செய்தது. நான் இப்பொழுது உனது அருமையான வீரத் திருமொழிகளால் நல்லுணர்ச்சி பெற்றேன். இனி என்னிடத்தில் அக்பருக்கு இடமில்லை!'' என்று சொன்னார். ''அதுபோல நடக்கும்.'' என்று சம்பாவதி கூறிய அதே தருணத்தில் ''ஆம், அது உண்மை'' என்று புதிய சப்தம் கேட்டது. பிச்சைக்காரனைப் போன்று மாறு வேடம் பூண்டு வந்த அக்பர், அடுத்த நிமிஷத்தில் அவ் வறையினுள் பிரவேசித்தார். அவரைப் பார்த்தவுடனே ''இவர்தான் இவர்தான் இங்கு வந்த அதிதி'' என்று சம்பாவதி ஈன சுரத்துடன் சொன்னாள். ''மஹா ராணா பிரதாப் சிங்கரே, உங்களது வீரமும் தீரமும் உங்கள் மகள் சம்பாவதியின் அளப்பரிய தைரியமும் என்னை வசீகரித்து மயக்கிவிட்டன. கடவுள் உங்கள் அனைவரையும் இரட்சித்து ஆசீர்வதிப்பாராக! பாரத மாதாவுக்கு உங்கள் போன்ற ஒப்பற்ற சிரோன்மணிகளால் தான் கௌரவம் உண்டாகும். உங்களது எல்லையற்ற தேச பக்தியைக் கண்டு மகிழ்கிறேன். உங்களது சுதந்திரத்தை இனிமேல் நான் காப்பேன். தங்களுடைய கையைக் கொடுங்கள்'' என்று உள்ளம் உருகி, சம்ராட் அக்பர் மொழிந்தார். இந்த இரண்டு ராஜாக்களும் கண்ணீர் தாரை தாரையாய் விட்டுக்கொண்டே ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். அப்பால் அக்பர் தனது ஊருக்குச் செல்ல அனுமதி கேட்ட சமயத்தில், ஒரு பெருங் காற்று அடித்து விளக்கை அணைத்தது. பாயில் கிடந்த இளவரசி சம்பாவதி இப்படியும் அப்படியும் மெல்லெலன நெளிந்து உயிரை விட்டாள்.

இதுபோன்ற நாரீ ரத்னங்களை யல்லவா இந்தியா வேண்டி நிற்கிறது; அல்ல, உலகமே வேண்டுகிறது. இந்த இராஜபுத்திரி ரத்தினத்தின் பெயர் இந்தியப் பெண்மணிகளின் சரித்திரத்தில் உயரிய இடம் பெற்று என்றும் பிரகாசித்துக்கொண்டே யிருக்கும். இந்த இராஜபுத்திர இளவரசியின் வீரமும் தீரமும் தியாகமும் அடிமைப்பட்டுக் கிடக்கும் நம் இந்திய சகோதரர்களுக்கு ஒரு பெரிய பாடமாகும்.

ஆசிரியக் குறிப்புகள்

லட்சுமியின் மணம்

மகாத்மா காந்தி அவர்களது சத்துப் புத்திரியான ஹரிஜன குலத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி லட்சுமி அம்மாளுக்கும் ஸ்ரீமான் மாருதி தாஸ் கிருஷ்ண தாஸ் என்ற பிராமண யுவருக்கும் சமீபத்தில் விவாஹம் நடந்தேறியது கேட்டு மகிழ்வடைகிறோம். காந்தி அடிகளே இந்த மாப்பிள்ளையைத் தெரிந்தெடுத்தாராம். ஸ்ரீமதி லட்சுமியின் பிதா பவநகர் சமஸ்தானத்தில் ஒரு ஹரிஜனப் பள்ளியில் ஆசிரியரா யிருக்கிறார். மணமகனுக்கும் மணமகளுக்கும் வருண வேற்றுமை, உயர்வு தாழ்வுகள் எல்லாம் அன்புப் பெருக்கால்—காதற் பெருக்கால். வெள்ளத்தில் உப்பெனக் கரைந்துவிட்டன. ஜாதி பேதங்களால் பலவீன மடைந்திருக்கும் நம்மிந்திய இம்மாதிரியான கலப்பு மணங்களால்தான் ஒற்றுமையும் பலமும் அடையும். மொகலாய ஏகாதிபத்திய அஸ்திவாரத்திற்கு ராஜபுத்திரர்களை முஸ்லிம்கள் கலப்பு மணம் செய்யுமாறு பாதுஷா அக்பர் பெரிதும் முயன்றார். இம் மாதிரியான கலப்பு மணங்களை நாம் வரவேற்கிறோம். மணமக்கள் மணத்துடன் வாழ்க! வாழ்க!!

தபால் கட்டணம்

தபால் விகிதத்தைக் குறைக்க வேண்டுமென இந்திய சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதென்று அறிந்து வருந்துகிறோம். காலணா கார்டு ¾ அணாவாகவும் அரையணா கவர் ஓரணா நாலு பைசாவாகவும் உயர்த்தப் பெற்ற சங்கதி யாவருக்கும் தெரியும். கட்டண உயர்வால் பொது ஜனங்களுக்கு எவ்வளவோ கஷ்டம். பொது மக்களிடம் கட்டாயமாய் வாங்கிய அணாக்களை லட்சக் கணக்காய்ச் சேர்த்து வீண் விநியோகம் செய்வதேனோ? கட்டணத்தைக் குறைத்தால், பொது ஜனங்களுக்கு எவ்வளவோ வசதிகள் ஏற்படும். தபால் இலாகாவில் சிக்கனமாய் உத்தியோகஸ்தர் விஷயத்தில் செலவு செய்தால், சர்க்காரைத் தபால் கட்டணக் குறை ஒன்றுமே பாதிக்காது. உத்தியோகஸ்தர்களின் சௌகர்யங்களைக் காட்டிலும் குடி மக்களின் வசதிகளையே சர்க்கார் அதிகமாகக் கவனிக்க வேண்டும். நாட்டின் வியாபார விருத்தி, கல்வி அபிவிருத்தி முதலியவைகளுக்குக் குறைந்த தபால் விகிதங்கள் அவசியமென்று சொல்லத் தேவையில்லை. சர்க்கார் இதைக் கவனிக்குமாக.

வெள்ளை அறிக்கை

வெள்ளைக் காகித அறிக்கை வெளிவந்துவிட்டது. விசாரணைக் கமிஷன்களும் கமிட்டிகளும் விசாரணை செய்தன. வட்ட மேஜை மகாநாடுகள் மும்முறை லண்டனில்கூடப் பெற்றன? இதனால் இந்தியாவுக்குக் கிடைத்தது என்ன? ஒன்றுமில்லை. சைமன், நன்றாய்ப் பாதுகாப்புகள் சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார். பொது ஜன சமாதானம், தேசப் பாதுகாப்பு, பொக்கிஷம், சிவில் சர்விஸ், சிறுபான்மைக் கட்சியாரின் விஷயங்கள் ஆகியவற்றில் கவர்னர் ஜெனராலுக்கு விசேஷ அதிகாரமும் பொறுப்பும் உண்டு அவரது இஷ்டம் போன்று மசோதாக்களையோ அவசரச் சட்டங்களையோ உண்டாக்கலாம். இந்த ஐக்கிய அரசியல் திட்டம் முறிந்தால், கவர்னர் ஜென

ரல் முழு அதிகாரங்களையும் வகிக்கலாம். மாகாண கவர்னர்களுக்கும் கவர்னர் ஜெனரலைப் போலவே விசேஷ அதிகாரங்கள் உண்டு. ஐக்கிய சட்ட சபையில் கவுன்சில் ஆப் ஸ்டேட் **(Council of State)** ஒன்றும் இன்னொன்று அசம்பிளி **(Assembly)**யும் இருக்கின்றது. கவுன்சில் ஆப் ஸ்டேட்டுக்கு 260 அங்கத்தினர்களில் பிரிட்டிஷ் இந்தியாவால் தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் 150; சமஸ்தானங்களால் நியமிக்கப்படுகிறவர்கள் 100; சர்க்காரால் நியமிக்கப்படுபவர்கள் 10. அசெம்பிளி அங்கத்தினர் 375-ல் 250 பிரிட்டிஷ் இந்தியாவால் தெரிந்தெடுக்கப்படுபவர்கள்; 125 பேர் சமஸ்தானாதிபதிகளால் நியமிக்கப்படுபவர்கள். இம்மாதிரி அங்கத்தினர்கள் பெருத்துப் பயனென்ன? கவர்னர் ஜெனரலுக்கும் மாகாண கவர்னர்களுக்கும் ஏற்படும் சர்வாதிகாரங்களும் பாதுகாப்புக்களும் பொறுப்பாட்சிக்குப் பெரும் தடங்கல்களாகவேயிருக்கும். வெள்ளைக் காகித அறிக்கை வெறும் வெள்ளை அறிக்கையாகவேயிருக்கிறது.

செட்டியார்களும் பிரான்சு இந்தோ-சைனாவும்

நாட்டுக்கோட்டை நகரத்தார் அநேக வருடங்களாகச் சிலோன், பர்மா, மலேயா, சயாம், பிரான்சு இந்தோ–சைனா முதலிய தேசங்களில் வட்டித் தொழில் செய்கிறார்கள். சைகோன் நகரம் பிரான்சு இந்தோ–சைனாவின் தலைமைப் பட்டணமாகும் இந் நாட்டில் செட்டியார்களின் பணம் லேவாதேவி செய்து வருவதில் சுமார் 6 கோடி ரூபாய்கள் வரை இருப்பதாக மதிப்பிடுகிறார்கள். அந்த அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து இவர்கள், தங்கள் தொழிலைச் செய்து வருகிறார்கள். இந் நாடு பிரான்சுக்காரர்களுக்குச் சொந்தம் கடன்காரரிடம் கொடுத்த பணத்தை வசூலிக்கும்பொருட்டுக் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து, டிக்கிரி பெற்று அதை நிறைவேற்ற ஆரம்பித்ததற்காக மூன்று செட்டியார்களை அந் நாட்டுக் கவர்னர் 24 மணி நேரத்தில் அத் தேசத்தை விட்டுப் புறப்பட்டுவிட வேண்டுமென நாடு கடத்தல் உத்திரவு செய்திருக்கிறார். இது உண்மையாயிருந்தால், இந்த உத்திரவு அநியாயம் என்றே சொல்ல வேண்டும். இதுதானா நாகரீகப் பிரான்சு கவர்ண்மெண்டின் போக்கு. நியாயமான முறையில் கோர்ட்டில் டிக்கிரி பெற்று அதை நிறைவேற்றி அந் நாட்டு மக்களிடம் வசூலித்தல் குற்றமென்றால், சுதேசிகளுக்கு ஒரு நீதியும் பரதேசிகளுக்கு ஒரு நீதியுமல்லவா ஏற்பட்டிருக்கிறது! கொடுத்த கடன் கேட்பது குற்றமென்றால், அவ்வரசாங்கத்தை என்னென்று சொல்லுவது? பிரிட்டிஷ் கான்சல் அந்த கவர்னரை வேண்டியும், அந்த உத்திரவை மாற்ற மறுத்தாராம் கவர்னர். இதனால் செட்டியார்களிடையில் மிக்கப் பரபரப் பேற்பட்டிருக்கிறது. நம் நாட்டுக்குச் சுயாட்சி யிருக்குமானால், இம் மாதிரியான அவமானம் நாட்டுக்கு உண்டாகி யிருக்காது. இந்தியர் அனைவரும் இவ் விஷயத்தில் ஒன்று சேர்ந்து வேலைசெய்ய வேண்டும். இந்தியச் சர்க்காரும் பிரிட்டிஷ் சர்க்காரும் இதில் தீவிரமாக முன்னணியில் நின்று பிரான்சு சர்க்காருடன் வாதிட்டு இந்திய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியது மிக அவஸ்யம்.

பொருப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

197867
-600 003

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின்பேரில்
2,700,000, ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி பொம்பாயிலும் கன்டினெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கு அனுப்பிவைத்தும் பம்பாய், கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையும் மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ம. ம. சே. முகைதீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை, மதுரை ஜில்லா

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

*தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற*

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

*விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய*

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. *1—4—0.*
தபாற் செலவு வேறு

நாட்டுர் வீரன் **துர்க்கா தாஸ்.**

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவரது நாடகங்களுக்குள்ளிலும்

இத் துக்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் 1/8 சைஸ்
380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1-4-0.
தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.